உ

சிவமயம்

வியாகரண சிரோமணி

பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள்

# மணி விழா மலர்

மணி விழாச் சபை, யாழ்ப்பாணம்.

1973

உ

சிவமயம்

வியாகரண சிரோமணி

பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள்

# மணி விழா மலர்



மணி விழாச் சபை

யாழ்ப்பாணம்.

1973.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| முன்னுரை | | |
| குரு வணக்கம் | | |
| வாழ்த்துப் பாமாலை | வித்துவான் க. வா ஜகந்நாதன் | |
| குருமணியே வாழி | அருட்கவி சீ. விநாசித்தம்பி | 1 |
| எங்கள் குருநாதர் | கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் | 2 |
| சஷ்டியப்த பூர்த்திவிழா | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 11 |
| எது கடமை? | ராமகானசபை | 12 |
| தொண்டர்தம் பெருமை | சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் | 16 |
| பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரியவர்கள் | ஸ்ரீமதி இரத்தினு நவரத்தினம் | 17 |
| அண்ணுமலையான் அருள் பெருக | பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை | 18 |
| குருமணி | பிரம்மஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா | 21 |
| எமது குருநாதர் | சிவஸ்ரீ ஸாமி. விசுவநாதக் குருக்கள் | 24 |
| கற்பிக்கப் பிறந்த உபாத்தியாயர் | ஆசிரியர் ஆ. சபாரத்தினம் | 26 |
| கட்டுரை மணிமாலை | பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் | |
| 1. ஆலய வழிபாடு | | 28 |
| 2. வியாசரும் புராணமும் | | 38 |
| 3. பாரமேசுவர தத்துவம் | | 43 |
| 4. இந்து கலாசாரம் | | 52 |

# முன்னுரை

வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் அவர்களுக்குப் பாராட்டுவிழா நிகழும் இவ்வேளையிலே, அப்பெரியார் வெவ்வேறு காலங்களில் எழுதிய சமயக் கட்டுரைகளில் தெரிந்தெடுத்த மணியனைய நான்கு கட்டுரைகளையும், அவரோடு வெவ்வேறு வகையில் தொடர்பு பூண்ட அறிஞர் பலர் உவந்தளித்த பாராட்டுரைகளையும் பாக்களையும் கொண்டு உருப்பெற்ற இம்மணிமலரை அன்பர்தம் கரங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

ஆசிரியர்க்கும் ஆசிரியராய், வைதிகக் கிரியைகளை நடத்துவிக்கும் ஆசாரியராய், ஆகமக் கிரியைகளைச் செய்யும் சிவாசாரியர்களுக்கு வழிகாட்டியாய், வேதம் பயிலும் சிறுவருக்குக் குலபதியாய், நாளுங் கோளும் செய்யும் நன்மை தீமைகளைக் கண்டுகூறும் ஜோதிஷ கணிதராய், வியாகரணத்தில் மாத்திரமன்றிக் காவிய நாடகங்களிலும் இதிகாச புராணங்களிலும் தர்மசாஸ்திர தத்துவ சாஸ்திரங்களிலும் புலமைபெற்ற பல்கலைப் புலவராய், தெய்வ பக்தராய் விளங்குகின்ற பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளவர்கள், திருநெல்வேலிப் பரமேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராயிருந்து ஓய்வுபெற்றபோது அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதற்காக ஐந்தாண்டுகளின் முன் பாராட்டுவிழாச் சபையொன்று உருவாகியது. நிதி சேகரிக்கத் தொடங்கிய அளவில் அங்கத்தவரின் ஒத்துழைப்பின்மை காரணமாக இச்சபை இயங்க முடியாததாயிற்று.

ஸ்ரீ சாஸ்திரியாரின் அறுபதாண்டு நிறைவைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்ற பேராவல் கொண்ட அன்பர்களின் பெருமுயற்சியினால் 1971 ஆம் ஆண்டில் இந்த மணிவிழாச்சபை தோன்றியது. பண்டிதமணியவர்கள் தெரிவித்த நிதி இலக்காகிய பத்தாயிரம் ரூபாவைச் சேகரிக்க முடியவில்லையெனினும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகைக்கு இம்மணிவிழாச் சபையின் நிதிக்குழு கையொப்பம் பெற்றது.

சென்ற ஆண்டில் (27–1–72 இல்) ஸ்ரீ சாஸ்திரியாருக்கு அறுபதாண்டு நிறைவெய்தியபோது, அன்று அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரையில் நல்லூரர்ச் சிவன்கோவிலில் ஷஷ்டியப்த பூர்த்தி வைபவம் சாஸ்திரோக்தமாக நடந்தது. இதனை ஸ்ரீ சாஸ்திரியாரின் மக்களும் மருமக்களும் மணிவிழாச்சபையின் ஆதரவோடு சிறப்புற நடாத்தினர். இதனையடுத்துச் சுழிபுரத்தில் பருளை முருகனாலயத்திலும் கொழும்பில் ஸ்ரீராமகான சபையிலும் பாராட்டு விழாக்கள் நடந்தன.

மணிவிழாச்சபையினர் சில வாரங்களில் நடாத்த எண்ணிய மணிவிழா, விழாச்சபைத்தலைவரின் இந்திய யாத்திரை, சிறப்புரையாளர் வருகையில் ஏற்பட்ட தாமதம் முதலிய காரணங்களால் பின்போடப்பட்டு இப்போது நிறைவேறுகிறது.

மணிவிழாவின் ஓர் அங்கமாக ஸ்ரீ சாஸ்திரியாரின் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்படவேண்டுமென்ற அன்பர் சிலரின் விருப்பம், இப்போதைய அச்சுச் செலவேற்றங் காரணமாய் அசாத்தியமாய் விட்டதால் அதற்குப் பதிலாக இந்தச் சிறிய மணிவிழாமலர் வெளிவருகின்றது. உருவிற் சிறியதாயினும் உள்ளடக்கிய பொருட் சிறப்பினால் இது அன்பர்களின் நல்லாதரவிற்கு உரியதாகும்.

இம்மலரை உருவாக்குதற்கு வேண்டிய பாமாலைகளையும் பாராட்டுரைகளையும் தந்துதவிய அறிஞர்களுக்கும், மலரை அச்சிட்ட ஸ்ரீ காந்தா அச்சக உரிமையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், விழாவுக்கு வேண்டிய நிதியைச் சேகரிக்க அயராதுழைத்த நிதிக்குழுவினருக்கும் நன்றி கூறுகின்றோம்.

தி. இரத்தினசபாபதிக் குருக்கள்
சு. இராஜேந்திரக் குருக்கள்
சு. ஷண்முகரத்தின சர்மா
ச. பஞ்சாட்சர சர்மா

மணிவிழா மலர்க்குழுவினர்





ஷஷ்டியப்த பூர்த்தி விழாவில்

ஸ்ரீ சாஸ்திரிகளும் தர்மபத்தினியும்

# குரு வணக்கம்

श्रीगुरुभ्यो नमः

1. गुरो ध्यानकाले भवान्या हि मूर्तौ ।
भवत्सूक्ष्मरूपं सदाहं समीक्षे ॥

குருமணியே, என் குலதெய்வமான அம்பிகையைத் தியானிக்கும் வேளை பவானியின் திருக் கோலத்தில் தங்கள் நுண்ணிய தோற்றத்தினையே என்றும் காணுகின்றேன்.

2. गुरुः सा हि मूर्तिः सहस्रे च नाम्नाम् ।
सदा कीर्त्यमाना विभाति प्रशास्त्री ॥

குருவே அவள் வடிவின் (மறு) தோற்றம். அவளின் ஆயிரந் திருநாமத் தொகுதியில் (பாராயணம் நிகழும் வேளையெல்லாம்) குருமூர்த்தி எனப்பெயர்சூடி அறிவுறுத்தும் சிறந்த குருவாக அவள் திகழுகின்றாள்.

3. ज्ञानप्रदाय गुरवे तिमिरान्तकाय सीताभिधाग्रहितरामनिजाह्वयाय ।
अध्यापनात्प्रवरसंस्कृतवर्धनाय तस्मै नमः सततसंश्रितयत्नकर्त्रे ॥

அறிவைச் சிறப்புற வழங்குபவரும், (அறியாமை) இருளை அழித்தொழிப்பவரும், சீதாராம நாமமுடையவரும், போதனையால் சீரிய சம்ஸ்கிருதத்தை வளர்க்க இடையீடில்லாப் பெருமுயற்சி மேற்கொண்டவருமான அப்பெருந்தகைக்கு வணக்கம்.

4. उत्कृष्टभारतसुसंभवभाविताय वीणाग्रदत्तनगरे स्थिरवासनाय ।
अत्यन्तशिष्यकृतपुण्यफलाश्रयाय विद्यार्थिसंशयनिरासनकौशलाय ।

சிறந்த பாரத பூமியிற் பிறந்ததனால் பரிசுத்தம் வாய்ந்தவரும், யாழ் நகரைத் தம் நிரந்தரமான உறைவிடமாக உடையவரும், இங்குள்ள மாணவர்களீட்டிய புண்ணியத்தின் பெறுபேருக விளங்குபவரும், கல்வியை நாடுபவரின் சந்தேகங்களைக் களைவதில் திறமை தோய்ந்தவருமான குருநாதருக்கு வணக்கம்.

5. वाणी भवद्वदनसक्तविलासभासा कुत्रापि गन्तुमपटुस्त्वयि नित्यवासा ।
गीर्वाणवाक्यललितोच्चरणैरलभ्यं माधुर्यमेव वहति त्वयि भाषमाणे ॥

தங்கள் வதனத்தில் உறைவதனுல் கலைமகள் ஒளிர்ந்து பொலிவு மிக்கு விளங்குகின்ருள். வேறெங்கும் போகும் ஆற்றல் அற்றவளாய் தங்களையே நிரந்தர உறைவிடமாகக் கொண்டுறைகின்ருள். இதனுற்ருன் தாங்கள் உரை நிகழ்த்தும்போது மட்டுமே சம்ஸ்கிருத மொழியின் அழகான உச்சரிப்பினுல் வேறெங்கும் பெறப்படாத இனிமை பெருக்கெடுத்தோடுகின்றது.

6. शृङ्गारः कवितविमर्शसमये हासश्च संभाषणे
वीरः शक्तिभृता कृतप्रहरणोद्घोषेऽसुरध्वंसिना ।
रोषः सत्यपथश्च्युतौ भयरसो दुष्टेषु कारुण्यता
शिष्येषु स्वयतान्यशस्तचरितेऽस्थानो हि कुत्सारसः ॥

(காளிதாசன் முதலிய கவிகள் புனைந்த) கவிதைகளை விமர்சிக்கும்வேளை சிருங்காரம்; உரையாடும் வேளை ஹாஸ்யம்; அசுரரை வேரறுத்த வேலவனால் (சூரனுடன்) நிகழ்த்தப்பட்ட போரை (தோத்திரங்கள் பாடி) முழக்கும்போது வீரம்; உண்மை வழியிலிருந்து நழுவுபவர்களிடம் கோபம்; துட்டர்களிடம் பயம்; மாணவர்கள் மாட்டு இரக்கம்; (தன் பெருமை பற்றி உணர்ந்து தற்பெருமை பேசாப் பண்பு மிகுதியால்,) அயலார் தம்பெருமை பேசக் கேட்குமிடத்து ("என்னிடம் இப் பெருமையுண்டா" என நிகழும்) ஆச்சரியம்; (ஒருவகையிலும் எவரைக்குறித்தேனும் நிகழாததால்) இடம் பெறாத வெறுப்பு;

7. भक्तिः षण्मुखनाथपादकमले मोक्षप्रदानक्षमे
नित्यं भक्तिविधेयपूजनविधौ पापापनुत्तौ पटौ ।
सत्ये ब्रह्मणि लीनचित्तमनसः शान्ते रसास्वादना
शास्त्रोक्ताः सकला रसाः खलु समं त्वय्येव सुस्थापिताः ॥

மோட்சந்தர வல்லதும் பாவங் களைவதில் வல்லமை வாய்ந்ததுமான ஷண்முக நாதப் பெருமானது பாதகமலத்திலும், இடையீடில்லாது ஈடுபடும் பூஜைமுறையிலும் பக்தி; (பூஜை முடிவில்) சத்யமாக உள்ள பிரமத்தில் லயித்துத் தியானஞ் செய்வதால் சாந்திச் சுவையின் அநுபவம்; இவ்வாறு சாத்திரங்களிற் கூறப்பட்ட ரசங்கள் யாவும் தங்களிடத்தே சிறந்து ஒருங்கமைந்து விளங்குகின்றன.

8. शास्त्रे व्याकरणे न केवलमभूदुत्कृष्टनिष्णातता
काव्यानां रचने समा निपुणता पद्येऽथ गद्ये तथा ।
प्रावीण्यं महतां सभासु कथने तत्वार्थसंदर्शने
स्वातन्त्र्येण विवेचने च रचने सूक्ष्मार्थसंसूचने ॥

சிறந்த புலமை (உயர் பயிற்சியாற் பெற்ற) வியாகரணத்தில் மட்டுமன்று; உரை நடையிலுஞ் சரி, செய்யுணடையிலுஞ் சரி, காவியங்களை வடிப்பதிலும் புலமை விளங்குகின்றது. பெரியோர் குழுமியிருக்கும் அவைகளில் பேச்சு நிகழ்த்துவதிலும், தத்துவப் பொருள்களை விரித்துரைப்பதிலும், தனக்கே உரித்தான ஆராய்ச்சி முறையிலும், இவற்றையெல்லாங் கட்டுரையாக வரைவதிலும், இவற்றின் நுணுக்கப் பொருள்களை எடுத்துரைப்பதிலும் திறமை (விளங்குகின்றது)

9. पौरोहित्यधुरंधराश्च धरणीदेवाश्रयेषु स्वयं
श्रौतस्मार्तविधौ बृहस्पतिसमो रीतेरयं दर्शकः।
विघ्नेशादि समस्तदैवतगणैर्ये संश्रिता आलया
नित्ये तेषु विशिष्टदैननियमे मार्गं विधत्से शुभम् ॥

அந்தணர்களின் இல்லங்களில் சிரௌத நூல்களிலும் ஸ்மிருதி நூல்களிலும் கூறப்பட்டுள்ள கிரியைகளை நடத்தி வழிகாட்டுவதில் வியாழபகவானுக்கு ஒப்பானவர். விநாயகர் முதலிய தெய்வங்கள் பிரதிட்டிக்கப்பட்டிருந்த தேவாலயங்களில் நித்தியநைமித்தியக் கிரியைகளை நிகழ்த்தவும் வழி காட்டி நிற்பவர்கள்.

10. स सीतयादिभागरूढरामनामभासुरः
प्रकृष्टभारते कृतेन जन्मना सुभावितः।
इहागतोऽनुशासनाय शिष्यदाहशान्तये
प्रचारणाय संस्कृतस्य श्रोतुमिच्छुसंसदि ॥

சீதாராமன் என்ற திருநாமத்துடன் சிறந்து விளங்கும் தாங்கள், சிறந்த பாரத நாட்டிற் பிறந்ததனால் பெரும் நிறைவெய்தியவர்கள். (மாணவர்களின்) அறிவுத் தாகம் தணிப்பதற்காக படிக்கும் ஆவல் மிக்கோர் மத்தியில் சம்ஸ்கிருதம் பரப்புவதற்காக இங்கு வருகை புரிந்தீர்கள்.

11. चिदम्बरेश्वरालयस्य सन्निधौ प्रतिष्ठिते
समस्तवेद्यशासनाकलाकलापमन्दिरे।
महात्मभिः सुसंस्कृतैश्च दण्डपाणिदीक्षितैः
प्रशस्तभाष्यपाठनाद्यथोक्तमार्गशिक्षणात् ॥

சிதம்பர நாதனுடைய (கூத்தப்பிரான்) திருமுன் நிறுவப்பட்ட பல்கலைக் கழகத்தில் (எல்லா அறிவையும் புகட்டும் கலைக்கூடத்தில்) தலை சிறந்த மேதையான சிவதண்டபாணி தீக்ஷித மஹானுபாவரால் முறைப்படி மஹாபாஷ்யம் பயிற்றப்பட்ட காரணத்தினால் –

12 कृतार्थतां पवित्रतां सभासु गुण्यगण्यतां
विशारदां च सारदां प्रशस्तशीलसंपदम्।
शिरोमणिं विभूषणां स्वछात्रशास्त्रशास्तृतां
स्थिरीकृता इमाः सदा गुरोः प्रसादतोऽतिदः ॥

பிறவியெடுத்தலாற் பெறற்குரிய பயனையும், பெருந்தூய்மையையும், சபைகளில் நற்குண நலன்கள் மிக்கவர்களாற் கௌரவிக்கப்படும் பேற்றினையும், பயன் தரும் புலமையினையும், சிறந்த ஒழுக்கச் செல்வத்தினையும், சிரோமணி என்னும் தலைசிறந்த அணிகலனையும், தங்கள் மாணவர்களுக்கு அறிவுறுத்துந் திறமையையும் - இவையனைத்தையும் நிலைபேறுடன் பொருந்தும் வண்ணம் தங்கள் குருநாதரின் திருவருளைப் பெற்றுய்ந்தீர்கள்.

13 गुरो त्वमीश्वरस्तमोनराशने विशारदः
पुनः पुनश्च पाठनेन रक्षणे रमापतिः ।
स्वशिष्यवृन्दसर्जने प्रजापतिश्च सृष्टिकृत्
त्रिमूर्त्तिरूपधारि वस्तु नित्यसच्चिदात्मकम् ॥

எம் குருமணியே! தாங்கள் இருளை அழிப்பதில் வல்லமை வாய்ந்தவர்கள், (இதனால்) தாங்கள் (அழித்தற் றெய்வமாகிய) மஹேசுவரனே. மீண்டும் மீண்டும் பாடங்களைப் படிப்பித்து அறிவு மறந்து போகாது (மாணவரிடம்) நிறுத்திப் பாதுகாப்பவர். (இதனால்) தாங்கள் (காத்தற் றெய்வமான விஷ்ணுவே. தாங்கள் புதிது புதிதாக மாணவர் குழாத்தைத் தோற்றுவிக்கின்றீர்கள். ஆகையால் தாங்கள் படைத்தற்றொழில் புரியும் பிரமனே. மும்மூர்த்தி வடிவத்தை உட்கரந்து தாங்கி நித்யமாகவும் சத்தாகவும் சித்தாகவும் விளங்கும் வஸ்துவான பிரமமே தாங்கள்.

14 गुरोर्हि पादपङ्कजं निजाश्रयाद्धताज्ञतं
समीपवर्तिना मया चकासतः सकाशतः ।
कथंचन प्रविष्टशास्त्रनिम्नगान्मुखार्णवा-
दपायि रूढलोलुपेन तं गुरुं नमाम्यहम् ॥

குருவின் பாததாமரை தன்னையண்டுவோரின் அறியாமை (இருள்) களையும் வன்மையுடையது. ஒளி பரப்பி நிற்கும் அதன் அண்மையில் அமர்ந்து, சாஸ்திரங்களான ஆறுகள் பிரவாகித்துப் புகப்பெறும் வாய் எனும் சமுத்திரத்திலிருந்து, பெரும் பிரயாசையுடன் ஆசைமிக்கவனுய்ச் சிறிது பருகினேன். அக்குருமணியை வணங்குகிறேன்.

கா. கைலாசநாதக் குருக்கள்
பேராதனை

---

உ

முருகன் துணை

வடமொழி தென்மொழி வல்லுநர்,

# பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள்

அவர்களது

மணிவிழாவின்போது மனமுவந்து அளிக்கப்பெற்ற

# வாழ்த்துப் பாமாலை

விருத்தம்

முருகனடி மறவாத பேராளன்,
வேதத்தை முறையிற் கற்றோன்,
திருகலிலா உள்ளத்தோன், சாத்திரங்கள்
பலஉணர்ந்த செம்மையாளன்,
மருவுபல சூத்திரங்கள் நனியறிந்தோன்,
சடங்குகளை வாய்ப்பச் செய்யும்
திருவுடைய ஆற்றலுளோன், சீதாரா
மப்பேர்கொள் சீலச்சான்றோன்.

வடமொழியின் கரைகண்டோன், செந்தமிழின்
நயந்தெரிந்தோன், வாக்கிலோங்கும்
திடமுடையோன், பேரவையில் ஒருபொருளை
நனிநிறுத்தும் திறமைமிக்கோன்,
அடைவுடனே பலருக்கும் மறைப்பகுதி
பயிற்றுவிக்கும் ஆசான், நல்ல
நடையுடையோன், பல்லோர்க்கும் குருவாக
விளங்குகின்ற ஞானச் செல்வன்.

இனிமைமிகு செஞ்சொல்லான், எவர்க்கும்நல்ல
வழிகாட்டும் இயல்பின் மிக்கான்,
கனியுமன்பிற் சிறந்துநிற்போன், கடமைமற
வாதோங்கும் கண்ணியத்தோன்,
நனிநியமத் தினில்நிற்போன், நற்குரவர்
பாற்பயின்று நண்ணும்கல்வித்
தனிநிபுணத் துவம்வாய்ந்தோன், உயர்சீதா
ராமரெனும் சற்குணத்தோன்.

எவ்விடத்தும் எப்பொழுதும் மறைபயின்ற
வாயாலே ஈசன்சீரைச்
செவ்வைபெற மொழிபவன்அன் பர்க்கெல்லாம்
பேரன்பன் சீதாராமத்

திவ்வியமாம் பேர்பெற்ற சாத்திரியென்
றுலிலங்கைத் தீவின்கண்ணே
எவ்வெவரும் கைகுவிப்பா ரெனினிவன்றன்
பெருமையள வியம்பற் பாற்றே!

பலநலம்சால் செயல்செய்தோன், இப்போது
பேரறிவு பழுத்துப்பண்பும்
கலைநலமும் மிகக்கனிய ஓரறுபான்
ஆண்டுமுதிர் கவினைப்பெற்றான்
மலையெனவே உயர்ந்துநின்றான், அன்பரெலாம்
போற்றிசெய மாட்சிபூண்ட
தலைமையுளான், தண்ணளியான், தக்கோர்கள்
மிகஏத்தும் தகைமையுள்ளான்.

இவனாலே மறையுணர்ந்தார் பலராவர்,
இவன்பாலே எய்திநன்கு
நவமான நூலுணர்ந்தோர், வடமொழியைப்
பயின்றிட்ட நல்லோர்பல்லோர்;
அவைமேவு பிரசங்கம் கேட்டுரிய
பயன்பெற்ற அன்பர்பல்லோர்;
இவன்வாழ மறைவாழும்; கலைவாழும்;
பக்திநலம் ஏறிவாழும்.

வள்ளிமண வாளனருள் வல்லபத்தால்
வடமொழியில் வல்லோனென்று
தெள்ளுமறி வோர்புகழும் சீதாரா
மக்கலைஞன் திறனும்சீரும்
வெள்ளமென மிகமலியத் தன்னறிவால்
எல்லோர்க்கும் வேண்டும்நன்மை
கொள்ளுமென அளித்தினிது பல்லாண்டு
நல்லின்பம் கூரவாழி!

வெண்பா

யாழ்நகர்வாழ் சீதாரா மப்பெயர்கொள் ஏர்மறையோன்
சூழ்புகழும் நற்றிறலும் துன்னுறவே — வாழியவே!
வள்ளி மணாளன் வளவருளால் நல்லின்ப
வெள்ளத்தி லென்றும் மிதந்து.

— மணிவிழாச் சபையினர்

# "குருமணியே வாழி"

அருட்கவி சீ. விநாசித்தம்பி

வெண்பா

சங்கம் பொலிந்தகலைச் சாறூறிச் சீர்பொலிந்து
தங்கும்சீ தாராம சாஸ்திரிகள் — பொங்கும்
சுகமலர்ந்து தெய்வத் துணைமலர்ந்து செல்வம்
மிகமலர்ந்து வாழ்க மிளிர்ந்து.

விருத்தங்கள்

உச்சரிப் பினியமொழி யழகுண்டு வேதநய
உண்மையுணர் வண்மையுண்டு
ஓங்கார சோதியுட் பாங்கான பரமன
துருவறியுங் கருவுமுண்டு
நிச்சய சுகங்காணும் நெஞ்சுண்டு நன்னெறிகள்
நிலைகண்ட புலமையுண்டு
நின்றுருகு மன்பமைதி நீடுசுத் தானந்தம்
நிகழுமநு பூதியுண்டு
இச்சைக ளடக்கியுயர் முச்சந்தி வெளிவந்த
எழுயோக சத்தியுண்டு
இல்லறத் தாலிறைவ னல்லருட் பதமருவும்
ஏற்றசன் மார்க்கமுண்டு
மெச்சுதிரு வருள்விளக் குண்டுநின் பாலென்று
மேலோர் மதிக்குங்குருவே
விளங்குமனை யாள்மக்க ணலமோங்க ஞாயிறென
மேவுபல் லூழிவாழி.

செழுந்தமிழு மாரியமும் திரட்டி யுண்ட
சிறந்தவியா கரணசிரோ மணியே வாழி
பழங்கருணைப் பழம்புசித்துப் பாரோர்க் கன்புப்
பாலூட்டும் சுரர்தேனு மணியேவாழி
தொழுங்கலசம் கரும்புடையாள் சுரக்கும் வாக்குச்
சோதிடவா கமஞ்சொரிகற் பகமே வாழி
வழங்குமறை நிறைகுடமே மதிவாய் காயம்
மாண்புதரு குருமணியே வாழி வாழி.

## எங்கள் குருநாதர்

# வியாகரண சிரோமணி கி. சீதாராம சாஸ்திரிகள்

தொகுத்தவர் :
கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள் M. A. Ph. D.
(இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.)

பாரத நாடு பண்டு தொட்டுப் பெருமக்கள் பலரைத் தோற்றுவித்து வரும் பொன்னாடு. இப்பெரு மக்கள் உலகனைத்திற்கும் உரியவர்கள்; தத்தம் துறைகளில் திறமை மிக்கவர்கள்; தாம் ஆற்றிவரும் தொண்டால் மக்களினத்தை மாண்புற வைத்தவர்கள். இவர்களுட் சிலர் பாரத நாட்டிற்கு வெளியே சென்று குறிப்பிட்ட இடங்களைத் தெரிந்து அங்கேயும் வாழ்ந்து அருந் தொண்டாற்றி வந்துள்ளார்கள். இவ்வாறு தொண்டாற்றும் வேளைகளிலும் பாசமும் பற்றும் தாய் நாட்டையே சாரப் பெற்றவர்களாய்த் தங்கருமம் நிறைவேறியதும் நிறைவேறாததுமான நிலையிலேயே தாய்நாடு திரும்பிவிடுவதைப் பற்றியும் அடிக்கடி அறிந்து வருகின்றோம்.

தென் பாரதத்தின் வரலாற்றைத் தொடுத்து எழுதும் வாய்ப்பு வரின், அதில் ''திரைகடலோடியும் திரவியந்தேடு'' என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து, தம் நாடு நீங்கி, ஆழ்கடல் கடந்து, அயல் நாடு புகுந்து, பெரும் பொருளீட்டி, சிக்கன வாழ்வு வாழ்ந்து, நிதிக் குவை குவிந்ததும் ஈட்டிய பொருளுடன் நாடு திரும்பி தம்வளம் பெருக்கிய நாட்டினை முற்றிலும் மறந்து, தம் வாணாளின் மீதியையும் தன்னல நோக்குடன் வாழ்ந்து மாய்ந்த கதைகளையே மீண்டும் மீண்டும் கூற நேரிடும். எம் குருநாதரோவெனின், இவ்வழமைக்கு முரணாக, பாரதத்தில் வருந்தித் தேடிய அறிவு என்னும் தம் தேட்டமனைத்தையும் திரட்டி எடுத்துக்கொண்டு, என்றுங் குன்றாத பெருமதிப்புடைய கல்விச் செல்வத்தை எம்மனோர்க்கு வாரி வழங்கும் பெருநோக்குடன் தாய்நாடு நீங்கிச் சேய்நாடு புகுந்த தோடமையாது தம் கல்விச் செல்வம் முழுவதையும் தமக்கெனச் சிறிதும் வரைந்துவைக்காது தொடர்ந்து வழங்கிவரும் பரந்த மனப்பான்மையினராய் இந்நாட்டினையே தம் நாடாகத் தெரிந்து எம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். இவ்வுயர் பண்புக்கு நாம் என்றும் தலை தாழ்த்தி வணங்குவோம்.

எங்கள் குருநாதர் பிறப்பினால் மட்டுமே பாரத நாட்டினைத் தாயகமாகக் கொண்டவரல்லர். வளர்ச்சி,

கல்விகற்றல், விவாகம், மகப்பேறு முதலிய முக்கிய வாழ்க்கை நிகழ்ச்சிகள் பாரத நாட்டிலேயே நிகழப்பெற்றவர். இதன் பின்னரே தெய்வத் திருவருள் வழிசெலுத்த ஈழவள நாட்டினுள் அடியெடுத்து வைத்தார்கள். உயர்குடிப் பிறப்பு, விழுப்பந்தரும் நல்லொழுக்கம், சான்றோர் போற்றும் பழக்கவழக்கங்கள், புனிதமான வாழ்க்கை, தெய்வத்திடம் தளராத ஈடுபாடு, பெருமைக்குரிய பாரம்பரியம், வேதங்களிற் பயிற்சி, சம்ஸ்கிருத மொழியிற்றேர்ச்சி மிக்க புலமை, 'வியாகரண சிரோமணி' எனும் பெறற்கரும் பட்டம், துடிதுடிப்புடன்கூடிய இளமை, இன்னோரன்ன பேறுகள் பொலிய ஈழநாட்டிற் புகுந்ததும், இந்நாட்டினையே தம் நாடாகக் கொண்டு நிரந்தரமாய் உறைந்துவிடும் எண்ணம் மனத்தில் வேரூன்றிற்று. எம் நாட்டில் சம்ஸ்கிருதக் கல்வி வளரல் வேண்டும் எனத் திருவுள்ளம் பாலித்த இறைவன் இம் மன்வுறுதியினை எங்ஙனம் பிறப்பிக்காதிருத்தல் கூடும்?

ஈழநாட்டில் சம்ஸ்கிருதக் கல்வி தொன்றுதொட்டுப் பேணி வளர்க்கப்பட்டு வந்துள்ளது. சமய அடிப்படையில் வாழ்க்கையை அமைத்து வாழ்ந்து வந்த தமிழ் மக்களிற் பெரும்பாலானோர்க்கு சம்ஸ்கிருத அறிவில் நாட்டம் இயல்பாகவே இருந்துவந்தது. மேலும், ஈழநாட்டின் உயர்தரக் கல்விமுறை பல வருடங்களுக்கு முன் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்டபொழுது பீ. ஏ. முதலிய பட்டங்களை நாடிய மாணவர்கள் ஆரம்ப நிலையில் சம்ஸ்கிருதம், பாளி, இலத்தின், கிரேக்கம் ஆகியவற்றுள் ஒன்றினைக் கட்டாய பாடமாகக் கற்க நேரிட்டது. இவ்வொழுங்கின்படி இலத்தின், கிரேக்கம் ஆகிய மொழிகளைத் தேர்ந்து கற்று வந்தோரும் நாளடைவில் அவற்றைக் கைவிட்டுச் சம்ஸ்கிருதத்தையே பயிலத் தலைப்பட்டனர். மேலும் இராமநாதவள்ளல் போன்ற பெரியார்கள் தாம் நிறுவிய உயர்தரக் கல்லூரிகளில் சம்ஸ்கிருதக் கல்வி வளர வழிவகுத்தமைத்தனர். தனிச் சமஸ்கிருத பாடசாலைகளும் ஆங்காங்கு தோன்றலாயின. இச்சூழ்நிலையில் எம்குருநாதர் வருகை புரிந்து சம்ஸ்கிருதக் கல்வியின் வளர்ச்சிக்குக் கைகொடுத்துதவினர். அந்தணச் சிறுவர் சம்ஸ்கிருதம் படிக்கும் வாய்ப்பும் வேதங்களை முறைப்படி ஓதுதலிற் பயிற்சிபெறும் சந்தர்ப்பமும் ஏற்படலாயின.

இற்றைக்கு ஐந்தாறு சந்ததிகளுக்கு முன் பாரத நாடெங்கணும் வைதிகமரபு செழித்துத் தழைத்து வளர்ந்து வந்தது. வேதநெறி நின்று வேள்விகள் வேட்டவர்கள் பலர். இவர்கள் சமயாநுட்டானங்களை இம்மியளவேனும் பிசகாது கடைப்பிடித்து வந்தனர். தென் பாரதத்தில், இப்பாரம்பரியவழியே கல்வி கேள்விகளில் வல்லவராய் நற்குண நலங்கள் மிக்கவராய், நல்லொழுக்கம் பேணுபவராய் விளங்கிய மகா

னுபாவராக ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்கள் திகழ்ந்தார்கள். அவர் சோமயாகம் வேட்டவர்; சாங்கிருதி கோத்திரமுடையார்; பாண்டி நாட்டில் காருக்குறிச்சி என்னுமிடத்தைத் தம் உறைவிடமாகக்கொண்டு வாழ்ந்து வந்தவர். படிப்படியாக ஆச்சிரமங்களைத் தாண்டிச் சென்று துறவறம் பூண்டார். சந்நியாசம் பெற்றதும் வேதாந்த விசாரணையை மேற்கொண்டு வேதாந்த தத்துவங்களைப் போதித்து வந்தார். காலக்கிரமத்தில் பிரம்மீபூத சமாதிநிலையை எய்தினார்.

இம்மகான் பூர்வாசிரமத்தில் ஆறு குமாரர்களை ஈன்றெடுந்திருந்தார். ஸ்ரீ சீதாராம தீக்ஷிதர் அவர்கள் மூத்த குமாரர். இவருக்கு மக்கட்பேறு கிட்டவில்லை. ஐந்தாவது புதல்வனாக அவருடன் பிறந்த ஸ்ரீ லக்ஷ்மணோபாத்யாயருக்கு மூன்று புத்திரர்கள் பிறந்தனர். இவர்கள் முறையே ஸ்ரீ யஜ்ஞநாராயணோபாத்யாயர், ஸ்ரீ சீதாராமோபாத்யாயர், ஸ்ரீ அநந்த சுப்ரமண்யோபாத்யாயராவர். இம்மூவருள் நடுவரான ஸ்ரீ சீதாராமோபாத்யாயர் பெரிய தந்தையான ஸ்ரீ சீதாராம தீக்ஷிதர் அவர்களின் சுவீகார புத்திரரானார். தம் இல்லக்கிழத்தி ஸ்ரீமதி ஜானகி அம்மாளுடனும் சுவீகார புத்திரனுடனும் இவர் இல்லறம் பேணி வரும் வேளை வாழ்க்கையில் பெரியதொரு திருப்பம் நேரிட்டது.

பாண்டிய மன்னன் உக்கிரசேனன் சிவபிரானிடத்தில் தளராத பக்திமேலிட்டவன். அவன் வேண்டுகோட்கிணங்க அருள்சுரக்கும் நோக்குடன் அண்ணல் ஒருகால் மருதமரங்களின் பொந்திலிருந்து தோன்றியருளினான். இவ்வாறு மருதச்சார்பு கொண்டமையால் இறைவனுக்குப் புடார்ஜுனன் என்னுந் திருநாமம் வழங்கலாயிற்று. இவ்வாறு தோற்றியருளிய இடத்திலேயே எம்பிரான் கோவில் கொண்டெழுந்தருளினார். இத்திருத்தலமும் இத்தலந் திகழும் கிராமமும் (புடார்ஜுனம்) திருப்புடைமருதூர் எனப் பெயர் பெறலாயின. அண்ணலின் இடப்பாகத்தில் கோமதி அம்பிகை வீற்றிருந்து அடியார்க்கருள்புரிந்து வருகின்றாள். மூர்த்தி விசேடமும் தாமிர பர்ணியாறு பிரவாகித்தோடும் தீர்த்த விசேடமும் ஒருங்கேகொண்ட இப் புனிதத்தலம் ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களைப் பெரிதும் ஈர்த்தது. தடாகங்கள் போன்ற நீர் நிலையங்களில் மட்டுமே நீராடும் வாய்ப்பை இதுகாறும் அளித்துவந்த காருக்குறிச்சிக் கிராமத்தை விட்டு நீங்கித் திருப்புடை மருதூரில் குடிபுகுந்தார்கள். இத்தலம் இவர்க்கும் இவர் வழித்தோன்றலார்க்கும் உறைவிடமாயிற்று. தினந்தோறும் அதிகாலையில் நீராடி மகிழ்ச்சியும், தூய்மையும், அகநிறைவும் பெற அரும் வாய்ப்புக் கிட்டிற்று. ஒன்பது கிருச்சிரதானங்கள் வழங்குவதனால் வரும் பலனை, காலையில் ஒருமுறை மட்டும் நிகழும் நீராடல் ஈட்டித் தருமன்றோ?

ஸ்ரீசீதாராமோபாத்யாயர் அவர்களின் புதல்வன் ஸ்ரீ கிருஷ்ணோபாத்யாயர் அவர்களாவர். இவர் பிரதேசவாசியான ஸ்ரீ ராமகிருஷ்ண ஐயர் அவர்களின் புதல்வி ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளைத் திருமணம் புரிந்து இல்லறம் இனிது நடாத்தி வந்தனர். திருப்புடை மருதூரண்ணலதும் கோமதி அம்பிகையினதும் அருளுக்கு இத்தம்பதிகட்குண்டாயிற்று. அவர்கள் விரோதிகிருது வருடம் தை மாதம் 17ந் திகதி சுபவேளையில் எங்கள் குருநாதரைச் சீமந்த புத்திரனாக ஈன்றெடுத்தனர். உரிய நியமங்களையும் சமயானுட்டானங்களையும் முறையாகக் கடைப்பிடித்து வந்த தந்தையார் தம் குமாரனுக்கு கோமதீ வல்லப சீதாராமன் என்னும் நாமஞ் சூட்டி வளர்த்து வரலாயினர். ஐந்தாண்டுப் பிராயம் நிரம்பியதும் தந்தையே அட்சராரம்ப குருவாக இருந்து எழுத்தோதுவித்துக் கல்விப் பயிற்சியைத் தொடக்கி வைத்தார். உரிய பருவத்தில் உபநயனம் நடைபெற்று வேதாத்யயனம் முறைப்படி நிகழ்ந்தது. சம்ஸ்கிருதக்கல்வியில் நாட்டம் பிறந்தது. திருக்குறுங்குடி வைஷ்ணவ க்ஷேத்திரத்தில் காவிய பாடப் பயிற்சியுடன் குருநாதர் அவர்களின் சம்ஸ்கிருதக் கல்வி வளர்ச்சி ஆரம்பமாயிற்று.

சம்ஸ்கிருதம் மேலும் கற்றல் வேண்டுமென்னும் வேணவா இவரிடத்து வளர்ந்து வந்ததைத் தந்தையார் கண்டனர். அருங்கலைகளின் புரவலனான சிதம்பரநாதன் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் சிதம்பரத் திருத்தலத்தில் கோயில் வீதியில் நிறுவப்பட்டு சம்ஸ்கிருதக் கல்வி வழங்கி R. M. S. பாடசாலை எனப் பெயரும் புகழும் பெற்ற பாடசாலையில் சம்ஸ்கிருதம் பயில ஏற்பாடு செய்தார். இங்கு கற்றவேளை இவருக்கு வியாகரணம் கற்பதில் பெருவிருப்பம் பிறந்தது. எனவே இப் பாடசாலையில் வியாகரண சாஸ்திரப் பயிற்சியும் ஆரம்பமாயிற்று. வியாகரண சாஸ்திர வல்லுநரான பிரமஸ்ரீ M. N. ராகவ சாஸ்திரிகளிடம் வியாகரண நூல்களைப் பயின்று வரலாயினர். பின்னர் சிரோமணிப் பட்டம் நாடிப் பல்கலைக்கழகம் புகுந்து உயர்தரக் கல்வி பயிலும் விருப்பம் பிறந்தது. இவ்வாறு புகுதற்குரிய பிரவேச பரீட்சையில் தேறி சம்ஸ்கிருத வியாகரணத்திற் சிறப்புப் பயிற்சி பெற அண்ணாமலைப் பல்கலைக் கழகம் புகுந்தார். அவ்வாறு புகுந்த காலம் தமிழும் சம்ஸ்கிருதமும் இரு கண்களெனத் திகழ்ந்த பொற்காலம்; சம்ஸ்கிருத பீடமும் பேரொளி பரப்பி அங்கு பொலியப் பிரகாசித்த காலம்; வியாகரணம், வேதாந்தம், மீமாஞ்சை, நியாயம், சாகித்யம் என்னுந் துறைகளில் துறைதோய்ந்த விற்பன்னர் விரிவுரையாளர்களாக விளங்கினார்கள். இவர்கள் ஆராய்ச்சியும் போதனையும் நிகழ்த்தி சம்ஸ்கிருதக் கல்வியை வளர்த்து இப்பீடத்

தின் பெருமையை உயர்த்தி வந்தார்கள். இத்துறைக்குப் பெருமதிப்பும் கௌரவமும் அளித்த பெரியார், பகவான் பதஞ்சலியின் மறு அவதாரமெனப் பாரதமெங்கணுமே கௌரவித்துப் பாராட்டப்பட்ட மகா மேதை மகாமகோபாத்யாயர் சிவ தண்டபாணி மகிந்திரர் அவர்கள். அவ்வாசிரியரேறு மகா பாஷ்யம் போதிக்கும் பொழுது பாடங்கேட்க வாய்ப்புப் பெற்ற மாணவர்கள் பெறற்கரும் பேறுபெற்ற பாக்கிய சாலிகளே, வியாகரணத்திற் போன்று வேதாந்த சாஸ்திரத்திலும் இவர் தலைசிறந்த பாண்டித்யம் பெற்று விளங்கினார். இவர்கள் காலடியில் அமர்ந்திருந்து முறைப்படி பாடங் கேட்கும் பெரும்பேறு எங்கள் குரு நாதருக்குக் கிட்டியது. வியாகரணத்தில் அவ்வவ் வுட்பிரிவுகளில் நூல்களையும் கோட்பாடுகளையும் நுணுகி ஆராய்ந்த வியாகரண நிபுணர்களான பிரமஸ்ரீ ராமசுப்பா சாஸ்திரிகள், பிரமஸ்ரீ நரசிம்ஹ சாஸ்திரிகள், பிரமஸ்ரீ சிவராம கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ற பெரும் பேராசிரியர்கள் பரந்து விரிந்த இலக்கணத் துறையில் அவ்வப்பகுதிகளைப் போதித்து வரும்பொழுது இவர் ஈட்டிவந்த வியாகரணக் கல்வி மேன்மேலும் வளரலாயிற்று. வியாகரணத்தில் மாத்திரம் சிறப்புப் பயிற்சி பெறுவதென்று நாட்டமாயிருந்த இடத்தும் பல்கலைக் கல்வி முறைக்கிணங்க ஆரம்ப நிலையில் ஈராண்டுகள் வேதாந்தம், நியாயம், மீமாஞ்சை, சாகித்தியம், வைதிக இலக்கியம், மேல்நாட்டுக் கல்வி முறையின் வாடைவீசும் இலக்கிய வரலாறு, இலத்தீன் கிரேக்கம் முதலான மேலைத்தேய மொழிகளுடன் சம்ஸ்கிருதத்தை ஒப்பிட்டு மொழியியல்பு கூறும் மொழியியல் போன்ற அடிப்படைத் துணைப் பாடங்களையும் பெருமளவிற் படிக்க நேரிட்டது. இதனால் அவ்வத்துறைகளில் சிறந்து விளங்கிய ஆசிரியர்களிடமும் கற்க நேர்ந்தது. பல்கலைக் கழகக் கல்விப் பேற்றினிறுதியில் வியாகரண சிரோமணி என்னும் உயர்தர விருதைப் பெற்றார். இவ்வாறு தலைசிறந்த ஆசிரியர்களிடம் வரன்முறையாகக் கற்ற எம்குருநாதர் அப்பரம்பரையில் தானும் ஒருவராக ஒன்றிவிட்டார் என்பதை அவரிடம் உயர்தரப் பாடம் கேட்ட மாணவர்களும், சாஸ்த்திரசர்ச்சை நிரம்பிய சம்பாஷணையில் ஈடுபடுபவர்களும் நன்குணர்வர். வியாகரண சாஸ்திரம் இவர் பெற்ற உயர்தரப்பயிற்சியால் இவருடைமை ஆயிற்று. இதனால் சாஸ்திரி என்னும் பெரும் பட்டத்திற் குரியவரானார். சிறந்த வியாகரண சாஸ்திரமுடையாரான எம் குருநாதரின் பெயருடன் சாஸ்திரி என்னும் உரிமைப்பட்டமும் இணைய சீதாராம சாஸ்திரிகள் என்னும் கௌரவம் பொருந்திய பெயர் வழங்கி விளங்கி வருகின்றது.

எம் குருநாதர் இல்லக்கிழத்தி ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மாளுடன்

இல்லறம் நடத்தி வரும் நாட்களில் மகவுப் பேறு கிட்டிற்று. இந்நாட்களில் இலங்கைக்கு வருகை புரிந்தார்கள். தாம் சம்ஸ்கிருதம் கற்றுப் பெற்ற இன்பத்தை மற்றவர்க்கும் பகிர்ந்து வழங்க விழைந்தார்கள். அதற்கேற்ற இடம் இலங்கையின் வடபால் விளங்கும் யாழ்நகரமென்பதை உணர்ந்தார்கள். அன்றுமுதல் யாழ்ப்பாணம் இவர்களின் உறைவிடமாயிற்று. மனையாளுடனும் புதல்வியுடனும் இலங்கையில் நிரந்தரமாகக் குடிபுகுந்தார்கள். உரிய சந்தர்ப்பம் நேரிட்டதும் இலங்கைப் பிரசா உரிமை பெற்றுத் தாய் நாட்டுத் தொடர்புகளையும் உரிமைகளையும் அறவே துறந்தார்கள். இலங்கையுடன் இரண்டற ஒட்டிக்கொண்ட இத்தியாகத்துக்கு நாம் செய்யுங் கைம்மாறுதான் யாது?

குருநாதர் பாடஞ் சொல்லுமழகே தனியழகு சித்திரப்பாவையின் அத்தகவடங்கிச் செவி வாயாக நெஞ்சங் களனாகப் பாடங் கேட்டல் பற்றி நூல்கள் கூறுகின்றன. மாணவர்களை வலிந்து வருந்தி இந்நிலையை வருவிக்கவிடாமல், குருநாதர் அவர்கள் தம்பாடஞ் சொல்லும் முறையாலேயே இதை மாணவர்களிடம் தாமே வருவித்துவிடுவர். இவர் பாடங்கூறும் வேளை கருத்துக்களைப் பல கோணங்களிலிருந்து படம் பிடித்துக் காட்டுவதாலும், கருத்துக்கள் தெளிவாக மாணவர்கள் மனத்தில் படிந்துவிடும். அவர் கூறும் கதைகள் வெறுங் கதைகளல்ல. அவை உண்மைக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை; திருட்டாந்தமாக அமைபவை; தெளிவு பிறப்பிப்பவை; இடித்து இடித்துப் படிப்பித்து, சிறிதளவேனும் கருத்துக்கள் நுழைய இடந்தராத மூளையை நெகிழ வைத்துக் கிரகிக்குமாற்றலை வளர்க்க வல்லவை. இவ்வாற்றற் பெருக்கால் போதனைகள் ஆழமாகப் பதியும். மேலும் குருநாதர் அவர்கள் குரலில் இயல்பாகவே அமைந்து விளங்கும் கம்பீரம் மாணவர்களை அங்குமிங்கும் அசையாதவாறு கட்டுப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது. தமக்குரிய கணீரெனுமொலியுடன் இனிமை நிறைந்த சீரிய உச்சரிப்புடன் சம்ஸ்கிருத வாக்கியங்களையோ பாடல்களையோ சொல்லும்பொழுது சம்ஸ்கிருதம் சிறிதளவேனும் பயிலாதாரும் அவ்வின்னோசையால் வசீகரிக்கப்பட்டு மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகமென்ன மயங்கிநிற்பர். இது ஒவ்வொருவருக்கும் நேரும் நேரடியனுபவம். இது மட்டுமா? சுவைகளுள், எளிதில் எவரையும் பற்றிக்கொள்ளும் இயல்பினது நகைச்சுவை. இந் நகைச்சுவை புகுத்தி எம் ஆசிரியப் பிரான் உரையாடும்பொழுதும் உயர் கருத்துக்களைப் பாடங்களாக வழங்கும்பொழுதும் நகைச்சுவைப் பின்னணியில் நிகழும் பேச்சுக்களும் பாடங்களும் கேட்போருக்கு உற்சாகமூட்டி அவர்க்கு அவதானிக்கும் ஆற்றலைப் பெருக்கிநிற்கும். மாணவர் மட்டுமன்றி அவர் நிகழ்த்தும்

பேச்சுக்களைக் கேட்பவருமே சித்திரப்பாவையின் அத்தகவடங்கிவிடுவர்.

குருநாதர் அவர்கள் உயர்தர இலக்கணக் கல்வி புகட்டும் வேளை சாஸ்திர உண்மைகளையும் நுணுக்கங்களைக் கிரகிக்க வைக்குந் திறமை ஈடிணையற்றது. சாஸ்திரங்கள் யாவற்றிற்கும் காணுதமென்னும் தருக்கமும் பாணினியம் என்னும் இலக்கணமும் யாவற்றிற்கும் துணை நிற்கும் சாஸ்திரங்கள் என எல்லோரும் விதந்து கூறுவர். நுண் மாண் நுழை புலத்துள் நுண்ணிய வாதங்களையும் பிரதிவாதங்களையும் படிப்படியாக வரிசைப்படுத்திக் காரணங் கூறி உண்மையை வலியுறுத்தி உணரவைப்பது, ஏதுசாத்திரமெனப்படும் நியாயம். வியாகரணமோவெனின், மொழியில் நிகழும் இலக்கண நிகழ்ச்சிகளை வரையறுத்துக் கூறும் விதிகளை வாதப் பிரதுவாதங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்து விளக்குவது. விதிகள் யாவும் எப்பொழுதும் பிரயோகம் பெறும் இயல்பு வாய்ந்தவை எனினும், வைப்பு முறை போன்ற சாஸ்திர நுணுக்கங்களுக்கு அமையவே அவை தொழிற்படுவன. இது நிகழற்பாலது இது தவிர்க்கற்பாலது என அறைந்து கூறிப் பொது விதிகளாயும் சிறப்பு விதிகளாயும் அமைந்து சுருங்கக் கூறிக் குறுகி அமைந்து விரிக்க விரிந்து விளங்க வைக்கும் இயல்பினவான சூத்திரங்களால் அமைந்த பாணினீய சாஸ்திரத்தை முறைப்படி கற்பவன், முறையாகத் தருக்கம் பயிலாதவனெனினும் செயன்முறையிற் பிரயோகம் பெறுந் தருக்கம் தானே கற்றுவிடுகிருன். சுருங்கக் கூறின், பாணிநீயம் முறையாகக் கற்பவனிடத்தில் நியாயங்கற்பவன் பெறும் முழு அனுபவமும் இயல்பாகவே பொருந்தி விடும். வியாகரண சாஸ்திரங் கற்போருக்கு வாதப் பிரதி வாதங்களடங்கிய நுண்ணிய சர்ச்சைகள் புத்தியைக் கூரியதாக்கிக் கிரகிக்கும் ஆற்றலைப் பெருக்கும். எல்லாந் தன்னுள்ளடங்கி விளங்கும் வியாகரண நுணுக்கங்களை அவ்வவற்றிற் கேற்ற உதாரணங்களையும் திருட்டாந்தங்களையும் கதை கூறுவது போற் கூறி விளக்கக் குருநாதர் அவர்கள் கையாளும் முறையை விளக்க இதோ ஒரே ஓர் எடுத்துக் காட்டு. இலக்கண ரீதியாக ஒரு நிகழ்ச்சி நிகழ்கின்றது. வேறு சூத்திர விதியால் இந் நிகழ்ச்சி கெடுகின்றது. அதாவது மொழியில் தோன்றிய புது அமிசம் ஒன்று மறைவுறுகின்றது. புதிதாகப் புகுத்தப்பட்ட அவ்வம்சம் தன் தேவையை நிறைவேற்றியதும் உடனே நீக்கப்படுகின்றது. ''உலக நெறிப்படி பார்க்கும் எமக்கு புதிதாகப் புகுத்தப்படும் அமிசமும் அது களையப்படுவதும் மட்டுமே புறக்கண்ணுக்குத் தெரிவதாலும் சாஸ்திரக் கண்கொண்டு பார்க்கும் பொழுது மட்டுமே அதன் சேர்க்கையால் நுண்ணிதாக குறிப்பிட்ட தேவை பூர்த்தி செய்யப்படுவது உணரப்படுவதாலும், இந் நுண்ணிய

நிகழ்ச்சி உணராதார் இவ்விலக்கண நிகழ்ச்சி பயனற்றதே என்றும் வாதாட இடமுண்டு'' என இலக்கண மரபை விளக்கிக்கொண்டிருக்கும் ஆசிரியர், இந் நிகழ்ச்சி முறையைத் தெளியவைக்கத் திருட்டாந்தமொன்று கூறுவர். நமது வேட்டி அழுக்கேறி இருக்கின்றது. அழுக்கைக் களைய வேண்டி அதில் சவர்க்காரத்தைத் தேய்த்துச் சுவற வைக்கின்றோம். சிறிது நேரத்தில் சவர்க்காரத்தின் சேர்க்கை துணியிலிருந்து அழுக்கை நெகிழ்த்திப் பிரிய வைக்கின்றது. துணியைக் கழுவுகின்றோம். அழுக்கைக் கழற்றி விடுகின்றோம். இங்கு அழுக்கு மட்டுமா கழலுகின்றது, விலை கொடுத்து வாங்கிப் புதிதாக நாமே புகுத்திய சவர்க்காரத்தையுமல்லவா கழுவிக் கழற்றி விடுகின்றோம்! அழுக்கு நீக்கம் என்னும் நோக்கம் நிறைவேறியதும் சவர்க்காரமும் கழல வேண்டியதே. இப்படி இலக்கண நிகழ்ச்சிகளை விளக்க அடிக்கடி எடுத்தாளப்படும் திருட்டாந்தங்களும் கதைகளும் பலப்பல. இவற்றில் அண்ணாமலைப் பேராசிரியர்களின் போதனைமுத்திரை அங்கங்கே பதிந்து கிடக்கும்.

சம்ஸ்கிருதக் கல்வி பயில விழைவோர் ஒவ்வொரு சாஸ்திரத்திலும் ஓரளவு நிறைவுதரும் பயிற்சிபெறப் பன்னீராண்டுக் காலம் ஈடுபடுவர். எனவே குறிப்பிட்ட ஒரு சாஸ்திரம் கற்கப் புகுந்தார்க்கு ஏனைய சாஸ்திரங்களிற் பழக்கம் ஏற்பட அதிகம் வாய்ப்புக்கிட்டாது. எங்கள் குருநாதரோ எனின், சாகித்யம், தத்துவம், சமயம் முதலியவற்றிலும் சிரௌத நூல்களிலும் ஸ்மார்த்த நூல்களிலும் விவரிக்கப்பட்டுள்ள கிரியைகள் பற்றியும் சந்தஸ், ஜ்யோதிஷம் முதலிய வேதாங்கத் துறைகளிலும் அயரா உழைப்பினாலும், திறமையாலும் அறிவை வளர்த்துப் புலமை பெற்றனர். சம்ஸ்கிருதத்தில் உரையாடும்பொழுதும் கடிதங்கள் எழுதும்பொழுதும் எம் குருநாதர் கையாளும் நடை களிப்பூட்டுவது; ஓசைநயந் தருவது; ரஞ்சகமானது; எளிமை வாய்ந்தது; கம்பீரம்மிக்கது; பாணினையும் தண்டியையும் மாறி மாறி நினைவூட்டுவது. அவர்கள் யாத்த சம்ஸ்கிருதக் கவிதைகள் சாஹித்யத்துறையில் உள்ள புலமையை மட்டுமன்றி நாமகளின் அருளாக்கின் சிறப்பினையும் பாரத தேவியின் அருட்பெருக்கு பிரவாகித்துக் கவிதைகளாகப் பெருக்கெடுப்பதையும் சுட்டும். பாரத நாட்டுத் திருத்தலங்கள்மீது பாடிய தனிப்பாடல்கள் காதையும் கருத்தையும் கவரும் வனப்பின; ஓசை நயமும், பொருணயமும் மிக்குப் பெருஞ் சுவை பயப்பன; பக்தியுணர்வைப் பெருக்குவன. கேதீஸ்வரப் பெருமான்மீது பாடிய சுப்பிரபாதம் பக்திச்சுவை பெருக்கும் குட்டிக் காவியமாகத் திகழ்கின்றது.

சமய சாஸ்திர விசாரணைகளே இவர்கள் பெரும் பொழுதுபோக்கு. இதனால் இத்துறையில் அனுபவமும் தேர்ச்சியும் பெருகலாயின. சாதாரண சம்பாஷணைகளிலேயே இப்

பெருக்கு நிகழக் கேட்டானந்தித் தவர்கள் ஏனையோர்க்கும் இவ்வானந்தத்தை வழங்க விரும்பி இவர்கள் மறுத்தும் விடாது வலிந்து அழைத்துச் சென்று மேடையேற்றிச் சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்துவிப்பர். அங்கு இவர்கள் வாரிவழங்கும் கருத்துக்கள் புது வடிவினுலும் புதுப்புது விளக்கங் களாலேறிய மெருகினுலும் சிந்தையைக் கவர்ந்து கேட்போர் மனத்தில் உறுதியாகப் படிந்து வரலாயின.

மேலும் இவர்கள் வைதிகக் கிரியைகளையும் திருக்கோவில்களில் நித்திய நைமித்தியக் கிரியைகளையும் வழிகாட்டிச் சிறப்புற நடாத்திவைக்கும் அழகும் திறமையும் இவர்க்கே உரியனவாய் இயல்பாகவே கைவந்தவை.

அறிவுலகில் மட்டுமன்றி உலகியற் பொது நிகழ்ச்சிகளின் பொழுதும் பலதர அறிஞர் ஒருங்குகூடிச் சல்லாபஞ்செய்யும் குழுவிலும் ரஞ்சகமாகப் பேசித் தன்னைச் சூழ உள்ளோரை மகிழ்விக்குமாற்றல் இவர்களிடம்மிகுந்து காணப்படுவதை இவருடன் சிறிது பழகியவர்களுமே அடிக்கடி எடுத்துப் பேசுவர்.

அரசியற் பிரமுகர்களும் மந்திரிகளும் சமயத் தலைவர்களும் வேற்றுமொழி பெரிதும் வழங்கும் தென்னிலங்கையிலிருந்து வட பகுதிக்கு வருகைதரும் பொழுதெல்லாம் அவர்களை இன்னெலி விரவி ஓசைநயம் பயக்கும் அழகு சொட்டும் சம்ஸ்கிருத மொழியில் கருத்துப் பொதிந்த வரவேற்புரைகள் கூறி வரவேற்றும், ஆசியுரைகள் கூறிக் கௌரவித்தும் இருக்கிருர்கள். முன்னுட் பிரதமர்களான சேனுநாயக்கா, தகநாயக்கா முதலியோரும் இவ்வகை வரவேற்பைப் பெற்றவர்கள். மல்வத்தை பீடாதிபதி அவர்கள் பலாலி விமான நிலையத்திலிறங்கியதும் சம்ஸ்கிருதத்தில் வரவேற்புரை கூறிப் பத்திரம் வாசித்தளித்துக் கௌரவித்தார்கள்.

குணக்குன்ருன எம் குருநாதர் அவர்கள் கருணை மிகுந்து வழங்கிய அறிவுச் செல்வத்தை எம் தகுதிக் கேற்பக் கிரகித்துள்ளோம்; எம்வல்லமைக்கேற்ப ஈட்டி மனநிறைவு பெற்ருேம். இப்பேற்றினும் பன்மடங்கு பெறுமதியானவை அவர்களுடன் அளவளாவியதால் நாங்களுமறியாதவாறே அவரிடமிருந்தே தாமே எங்களைச்சார்ந்து பற்றிக் கொண்ட நற்குண நலன்கள். இவர்களிடம் ஒழுக்கம் விரவிய சீரிய கல்வி பெற நாங்கள் பாத்திரமானதை நினைக்கும் பொழுது பெருமை பொங்குகின்றது. இதேபோன்று பல்வகைச் செல்வங்களும் பல்வேறு வளங்களும் நீண்ட ஆயுளும் பொங்கிப் பெருகும் வண்ணம் அநுக்கிரகிக்கும்படி அறுபது தாண்டு நிறைவு விழாவில் எல்லாம் வல்ல அப்பனையும் அம்பிகையையும் இறைஞ்சி, குருநாதருக்கு அஞ்சலி செலுத்துகின்ருேம்.

# சாஸ்திரியார் அவர்களின்

# சஷ்டியப்த பூர்த்திவிழா

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

சம்ஸ்கிருத விருத்தியை எடுத்துக் கொண்டு, யாழ்ப்பாணச் சரித்திரத்திற் சென்ற நூற்ருண்டின் மத்திய காலத்தை நோக்கினுல், அக்காலம் நீர்வேலிச் சிவசங்கரபண்டிதர் அவர்கள் காலமாயிருக்கும். அவ்வாறே இந்த நூற்ருண்டின் மத்திய காலத்தை நோக்கினுல் இக்காலம் பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரியார் அவர்கள் காலம் என்றே கூறத்தகும்.

இங்கே சம்ஸ்கிருதம் தெரிந்த ஒருவரை விசாரித்தால் அவர் சாஸ்திரியார் அவர்களோடு தொடர்புபட்டவராயே யிருப்பார். பரீக்ஷைக்குப் படிக்கிறவர்கள், ஆலயக் கிரியைகள் படிக்கிறவர்கள், அறிவுக்குப் படிக்கிறவர்கள் என்று பல திறத்தினர் அவர்களிடம் படிப்பவர்கள். வேத ஆகம சாத்திரங்களிற் சந்தேகந் தெரிவோர் பலர்.

சாஸ்திரியார் அவர்கள் தங்குமிடமெல்லாம் பழைய குருகுல ஆச்சிரமங்களை ஞாபகப்படுத்திக்கொண்டேயிருக்கும்.

நல்லொழுக்கம், தெய்வபக்தி, ஆன்மவிசாரம் என்றிவைகள், இருதயத்தோடு தொடர்புபட்ட அவர்கள் முகத்தில் ஒளிகாலுபவைகள்.

காவிய ரசனை சாஸ்திரியார் அவர்களின் புன்முறுவலில் தவழ்ந்து விளையாடுவதை எப்பொழுதுங் காணலாம். ஆசிரியன் ரசிக்க மாணவரின் உள்ளத்தில் தேன் சொட்டும் என்பர்.

சாஸ்திரியார் அவர்கள் நல்லாசிரியருள் வைத்து நல்லாசிரியர்; சமயிகளுள் வைத்துச் சமயி.

1936 ஆம் ஆண்டு தொடக்கம் ஆறுவருடகாலம் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலை சார்பில், மும்மொழிக் காவிய பாடசாலையொன்று நல்லமுறையில் நடைபெற்றது. அதில் சம்ஸ்கிருதப் பகுதியை வெகு திறம்பட நடத்திப் பலருக்குச் சம்ஸ்கிருதத்தில் ஆர்வத்தை வருவித்தவர்கள் சாஸ்திரியார் அவர்கள். அதன் மேல், அவர்கள் தங்குமிடமெல்லாம் சம்ஸ்கிருதக் கழகமாயே காட்சியளித்தன. ஸ்ரீ ராமன் தங்குமிடமே அயோத்தி யென்பர்.

முப்பத்தைந்து வருடத்துக்கு மேல் இங்கே தங்கிச் சஷ்டியப்த பூர்த்தி விழாவையும் இங்கேதானே கொண்டாட வாய்த்தது, யாழ்பாணம் செய்துவைத்த தவமேயாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ சங்காரபண்டிதர் அவர்

களும் ஆரியம், தமிழ் இரண்டனை யும் இரு கண்கள் என்று கொண்டவர்கள். அந்த மகாத்துமாக்களிருவரும் ஒருங்கு சேர்ந்து சாஸ்திரியார் அவர்களின் சஷ்டியப்த விழாவை முன்னிட்டு, தமிழிலும் ஆரியத்திலும் ஆத்மீகமான தங்கள் வாழ்த்துக்களை வழங்கி மகிழுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. சாஸ்திரியார் அவர்களின் தூய தகைமைப்பாடு, அம் மகான்களின் வாழ்த்துக்களுக்குத் தக்க பாத்திரமேயாம்.

அநுபவம் முதிர்ந்து கனிந்தவர்களான சாஸ்திரியார் அவர்கள், சாத்திர சமுத்திரங்களில் முழுகித் தாம்பெற்ற அரும்பெறன் மணிகளை, ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற முறையில் பெறுதற்குரியார் யாவர்க்கும் வழங்கிப் பல்லாண்டு காலம் இனிது வாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

---

# எது கடமை?

— ஸ்ரீராமகானசபை, கொழும்பு. —

"தர்மம் சர" என்பது ஒருவாக்கியம் அதற்குக் கடமையைச் செய் என்பது பொருள்.

கடமையைச் செய்யாமல் கடவுள் கூட இருக்க முடியாது, என்று கூறிக் கடமை செய்வதின் அவசியத்தை வலியுறுத்துகின்றார் கீதையில்.

பார்த்தா, மூவுலகிலும் எனக்குக் கடமையொன்றுமில்லை. அடையாத தொன்றை இனி அடைந்தாக வேண்டும் என்பதும் இல்லவேயில்லை. ஆயினும் நான் கர்மம் செய்து கொண்டேயிருக்கிறேன்.

அர்ச்சுனா, நான் அயர்வின்றி எப்போதும் கர்மத்தில் ஈடுபடாவிடில் மனிதர்கள் என்வழியையே யாண்டும் பின்பற்றுவர். (சோம்பித் திரிதல் முயற்சி குன்றுதல் மேலோரிடம் இருக்கிறதெனக் கூறி வாழா தொழிதல் பலரது நோக்கமாகும்)

யாண்டும் பற்றற்றுப் பண்புடன் பெருவினையாற்றுக. பற்றற்றுப்பணி புரிபவனே பெருநிலையைப் பெறுகிறான். ஓயாது இருதயம் இயங்கிக் கொண்டிருப்பதால் உடல் வாழ்க்கை நன்கு நடைபெறுகிறது. ஆனல் இதயம் இயங்குவதை மனிதன் கருதுவதில்லை. அதுபோன்று பலகருமங்களைப் பற்றற்றுச் செய்யவேண்டும்.

('ஸ்வர்கமணு தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:) —ஈஸ்வரனை சுய கர்மத்தால் வணங்கி மனிதன்

மேன்மையை எய்துகிருன் என்கின்றது கீதை. சுயகர்மம் அல்லது கடமை எது? நமது கடமை குறித்து விளக்கம் தரும் நூல்கள் சுருதியும் ஸ்மிருதியுமாகும் — உபநிடதங்கட்கு சுருதி என்று பெயர் காதால் கேட்டுக் காப்பாற்றி வைக்கப் பெற்றது என்ற காரணத்தால் அது சுருதி என்ற பெயர் பெற்றது. நெடுங்காலமாக ஒருவர் பின் ஒருவராகக் கேட்டு வந்தது எனினும் அதன் சொல் அமைப்பை யாரும் மாற்றிவிடவில்லை. எண்சுவடியை எங்ஙனம் யாரும் மாற்றிவிட முடியாதோ அங்ஙனமே, சுருதிப்பொருளை யாரும் மாற்றமுடியாது. மெய்ப்பொருளை விளக்குகின்ற சுருதிமொழி என்றென்றும் நிலையானது.

ஸ்மிருதி என்பது நினைவுக் குறிப்பு நினைவில் வைத்துக் கொள்ளப்பட்டது எனப்பொருள்படுகிறது. சமூக வாழ்க்கையைப் பற்றிய சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் சேர்ந்து ஸ்மிருதி எனப் பெயர்பெறுகின்றன. ஆயினும் ஸ்மிருதிகள் பரதத்துவங்களை அடிப்படையாகக்கொண்டவை. ஸ்மிருதிகள் காலத்திற்கும் இடத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பமாறியமையும். சமூகநடைமுறைகளை நன்கு அறிந்துள்ள மறைவல்ல ஆன்றோர் கூட்டம் ஸ்மிருதிகளைக் காலத்திற்கு ஏற்றவாறு திருத்தி அமைத்துக் கொள்வதுண்டு. எனவே ஸ்மிருயென்பது அப்போதைக்கப்போது மாறியமையும் தன்மையுள்ள சமூகக்கோட்பாடுகளாகும். குழப்பம் நிறைந்த காலமிது. சுருதிஸ்மிருதிகளைப் படிக்க நேரமில்லை; படித்தாலும் பொருள் உணரப் பொறுமையில்லை.

உலகியல் வாழ்க்கையில் அமைதி மறைந்துவிட்டது. இதற்கெல்லாம் காரணம் நாம் செய்ய வேண்டிய கடமை குறித்து நமக்குத் தெளிவு இல்லை என்ன செய்வோம்.

இப்படியெல்லாம் நிகழக்கூடும் என்பதனை நமது முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இன்றைய தேவையை அன்றே பூர்த்தி செய்து வைத்திருக்கின்றனர்.

மனிதன் செய்யவேண்டிய கடமைகளை வேதங்கள் அறுதியிட்டுக் கூறுகின்றன. வேதங்களைப் படிக்க நேரமில்லா விட்டால் வேதங்களைக் கற்றறிந்தமேலோர் வகுத்த ஸ்மிருதிகளினின்று கடமைகளை உணரலாம். அதிலும் விளங்காவிடில் மனிதனுடைய வாழ்நாளில் திகழும் சீலர்களான குருமூர்த்திகள் அருளும் நெறியைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறிப் போந்தனர்.

<u>உதாரணம்</u> : நீர்வீழ்ச்சியில் பொருத்தப் பெற்றுள்ள மின்பொறி மின் சக்தியை உற்பத்தி செய்ய, அது பல்வேறு சாதனங்கள் வழியாக நமது வீட்டில் அமைக்கப் பெற்றுள்ள பலவித விளக்குகளை எரியச் செய்கின்றது. நமது வீட்டில் ஒளி வேண்டுமானுல் வீட்டிலுள்ள (ஸ்விட்ச்) பித்தானை அழுத்தினுல் வெளிச்சம் கிடைக்கின்றது. மின்சக்தியின் தன்மையெல்லாம் உணர்ந்த பொறியரும் விளக்கை எரியச் செய்கின்ருர், அத்தன்மை உணராதோரும் பித்தான் உதவியால் விளக்கின் பயனை அடைகிருர்கள். அதேபோன்று—மின் சக்தியின் தன்மைபோன்று — வேத

வாயிலாகக் கடமையை உணரலாம். பித்தாளைப்போன்ற குருவருளாலும் கடமையை உணரலாம்.

பின்னது இக்காலத்திற் கேற்றதல்லவா ?

இதனால் கடமையாற்றிக் குழப்பம் எழுங்காலோ அன்றிக் கடமை இன்னதென அறியவேண்டிய நேரத்திலோ ஆசான் அருளால் கடமையை எளிதில் உணரலாம் என்பது காணக் கிடக்கின்றது.

வேதத்தின் உட்பொருளுணர்ந்து கடமையையறியக் காலமும் பொறுமையுமில்லாத இக்காலத்தில் குருவருள் வாயிலாகக் கடமையை அனைவரும் உணரச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் பல அறிஞர் உள்ளங்களிலே உறைந்து கிடக்கின்றது. குருவருள் பெறும் மறுமலர்ச்சி இந்நாட்டில் தழைக்கவேண்டும். சிதறுண்ட வகையில் சிற்சிலர் ஆங்காங்கே குருவருள் பெற்று நிற்பது போதாது கூட்டங் கூட்டமாய் குருவருள் பெற்று உலகினர் உய்ய வேண்டும். வாழ்வு நெறியில் நாம் தவித்தது போன்று நமது வருங்காலச் செல்வங்கள் வாடக்கூடாது.

ஆகவே நமது பாராட்டிற்குரிய ஸ்ரீ சீதா ராமசாஸ்திரியார் அவர்கள் மூலம் நாம் அறிய வேண்டியவற்றை இன்னும் அறிந்து வாழ வழிவகுக்க வேண்டும். சாஸ்திரியார் அவர்கள் எங்கள் சபைக்கு பன்னெடுங்காலமாக ஒத்துழைத்து இருக்கின்றார். அதுவுமன்றி எங்களால் நடாத்தப்படும் மகாநாடுகளுக்கும் விழாக்களுக்கும் குழந்தைகள் பரீக்ஷைக்கும் தகுந்த கடமையாற்றி இருக்கின்றார். சுருங்கக் கூறினால் சபைக்கு ஒரு கற்பகதரு போன்று இருந்து உதவி தந்துள்ளார். ஆகவே சபை அன்னாரைப் பாராட்டி மகிழ்கின்றது. அவர்கட்கு தீர்க்காயுள் செல்வம் இன்னும் பெருக வேண்டுமென்று இச்சபை ஸ்ரீராம கானத்தைச் செய்கின்றது.

சுபம்.

# தொண்டர்தம் பெருமை

பிரதிஷ்டா பூஷணம், சிவாகம ஞானபானு
சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்

தொண்டர்தம் பெருமை சொல்லுதல் அரிது. அதுவும் வேதநெறி தழைத்தோங்கவும் மிகுசைவத்துறை விளங்கவும் அவனருளால் அவன் தாள் வணங்கி ''மேன்மை கொள் சைவநீதி'' உலகெலாம் விளங்கவும் செய்த மெய்யடியார்களின் மேம்பாட்டைக் கூறுவதென்ருல் அரிதிலும் அரிது. செயற்கரிய செய்து பிறர்க்கென வாழும் பெரும் பேறுடைய தவசீலர்கள்தான் உண்மையான தொண்டர்கள். அவர்களைக் காண்பதுவும் நன்று, அவரோடு இணங்கி இருப்பதும் நன்று, அவருடைய சொற்களை கேட்பதும் நன்று, அவர்களுடைய குணங்களை உரைப்பதும் நன்று. எனவே காட்சியாலும், இணக்கத்தாலும், சொற்களாலும், குணங்களாலும் உவப்பத்தலைக்கூடும் உத்தமர்ராய ஸ்ரீ சீதாராம சாஸ்திரியாரைப் பற்றிக் கூறுவதில் இருக்கக்கூடிய உவகை பேருவகையாகவே இருக்கும். தூய்மை, எளிமை இவற்றுக்கு உறைவிடமானவர்சீதாராமர். தெய்வ சம்பந்தமும், சைவசம்பந்தமும் பெற்று, ஞானசம்பந்தத்தையும் அடைந்தவர் இந்தப் பெரியார்.

அவருடைய இல்லறம் ஆத்மீக தன்மை வாய்ந்த நல்லறமாய் மிளிர்கின்றது. சொல்தோறும் வடமொழியும் செந்தமிழும் கனிந்து உதிரும். மாட்சிமை தாங்கிய மனையாளொடு மக்களும் நிரம்பப்பெற்று ஆண்டுபலவாக நரையிலராக வாழ்ந்து இன்று அறுபது ஆண்டு நிறைவு விழா அவருக்கு நடைபெறுகின்றது. இந்நன்னுளிலே உற்ருரும், மற்ருேரும் களிபேருவகை அடைகின்றனர். கருத்தொருமித்து எல்லோரும் அவர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து இருக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றனர். வழி வழி வந்த திருக்கூட்டத்தின் மரபில் வந்த அவர் ''கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூடி'' ஈழவள நாட்டில் இன்னும் பலபல ஆண்டு பயனுள்ள பணியாற்ற வேண்டும் என்பதே சைவ அன்பர்களின் மேலான ஆசையும் கூட. உலகத்திலே அஞ்ஞானமும் நாத்திகமும் பரவி வரும் காலத்திலே மக்களிடையே அன்பும், அறமும், அமைதியும், இறைவழிபாடும் வளரச்செய்யும் நோக்குடன் சைவத்தின் தத்துவங்களைப் போதித்துச் சைவ இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அவர் வாழ வேண்டும்.

ஸ்ரீ சாஸ்திரியார் அவர்கள் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம். பலகலை அறிவும் நிறைந்த ஒரு கலைக்களஞ்சியமாக அவர் திகழ்கிருர். வேதங்களிலும் ஆகமங்களிலும் தர்மசாஸ்திரங்

களிலும் உள்ள உட்பொருள்களை அறிவுத்தாசமுடையவர் மிக எளிதாகப் புரிந்து சொள்ளும் வகையில் சொற்சுவையோடு எடுத்துச் சொல்லும் ஆற்றல் ஸ்ரீ சாஸ்திரியார் அவர்களுக்கே அமைந்த தனிச் சிறப்பு.

சமயம், தத்துவம், கிரியா முறைகள் பற்றி இவர்கள் எழுதிய கட்டுரைகளைப் பல மலர்களிலும் சஞ்சிகைகளிலும் படித்து அனுபவித்தவர்கட்கு இவருடைய ஆழ்ந்த வடமொழி அறிவும் மிகுந்த தமிழ்ப் புலமையும் புலப்படும். வேதாகம விற்பன்னர்கள் மிகக் குறைவாக உள்ள நமது ஈழ நாட்டிலே ஸ்ரீ சாஸ்திரியார் அவர்கள் மனமுவந்து குடியுரிமை பெற்று வாழ்ந்து வருவது நமது புண்ணியம் என்றே கூறுதல் வேண்டும். ''சிந்தனை அவன் தனக்கு ஆக்கி'' அவர் தமது இல்லத்திலேயும் வெளி யிடங்களிலேயும் செய்யும் பூசை வைதீக கருமங்களையும் நேரில் கண்ட அன்பர்கள் பலர் நேரில் சொல்லக் கேட்டும் அனுபவித்தும் இறும்பூதடைந்து இருக்கின்றேன். அவர் ஓதும் வேதத்தின் உட்பொருள் உள் நின்று ஒளிரும். பாடும் கீதத்தில் பக்திரசம் பண்ணமைந்து சொட்டும். இவற்றைக் கேட்கும் பாமரரும் ஊன் உருகி உள்ளொளி பெற்று ஆனந்தமாய பக்தி நிலையை அடைவர். சம்பிரதாய ரீதியிலே கிரியைகளைச் செய்யாமல் ஞானமும், ஆர்வமும், சிரத்தையும் நம்பிக்கையும் ஒருங்கே பொருந்திச் செய்வார்கள். அவற்றிலே தெய்வீகம் கமழும். சுருக்கமாகச் சொல்லின் அகிம்சை, சத்தியம், சௌசம், அஸ்தேயம், அபரிக்ரகம் முதலிய நற்பண்புகளெல்லாம் அவரிடம் உண்டு.

இறுதியாக ஒன்று: விழா எடுத்தலும் மலர் வெளியிடுவதும் இக்காலத்திலே பரவலாக மூலைமுடுக்குகளெல்லாம் தக்கார் தகாதவர் என்று நோக்காது பலருக்கும் எடுக்கப்படுகின்ற ஒரு நாகரீகமாக அமைந்து விட்டது. அது ஒரு வியாதியாகக் கூட அமைந்து விட்டது. ஆனால் இப்படியான பெரியாருக்கு நாம் நன்றிக் கடனைச் செய்யவேண்டுமானால் இவருடையநல்லகருத்துகளைத்தொகுத்தும் சேகரித்தும் மக்களுக்கு உபயோகம் ஆகும் வண்ணம் அச்சுயந்திரமேற்றவேண்டும். அன்னாரைக் கொண்டு ஆக்கபூர்வமாகச் செய்யக்கூடியவை யாதேனும் உண்டாயின் பொருள் உதவிசெய்து அவற்றை நூல்வடிவிலாக்குவோமானால் தமிழ் அன்னைக்கும் சைவநெறிக்கும் பெரும்தொண்டு செய்தவர்களாகுவோம். இப்பணிக்கு எல்லோரும் முன்வரவும், அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழ, பல்லாண்டு என்னும் பதம் கடந்தானைப் பிரார்த்திக்கின்றோம்.





ஷஷ்டியப்த பூர்த்தி விழாவில்
**மாங்கல்யதாரணம்**



ஆசிரியர் தம் முதன்மாணவர்
**கலாநிதி கைலாசநாதக்குருக்களுடன்**



**சாஸ்திரிகள் மனைவி மக்களுடன்**

# பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரி அவர்கள்

ஸ்ரீமதி இரத்தின நவரத்தினம் M. A.
(முன்னைநாள் உதவி வித்தியாதிபதி)

வித்வசிரோமணி சம்ஸ்கிருதப் பேராசான் பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரி அவர்களது ஷஷ்டியப்த பூர்த்தி விழாமலர் வெளியாவதைப் பற்றி அறிந்தேன். அன்னாருக்குச் செய்யப்படும் கௌரவத்தில் எனது சிறிய நன்றிக் கடனையும் அர்ப்பணிக்க விரும்புகிறேன். இந்நாட்டில் பிரம்மஸ்ரீ சீதாராமசாஸ்திரி அவர்களை அறிந்தவர்கள் மிகப்பலர். ஆனால் அவர்களது அடக்கமான சாதாரணமான வாழ்வினுள் காணும் பெரும் சிறப்புக்களை அறிந்தவர் ஒரு சிலரே ஆவர். அவர்களிடம் நான் அவதானித்துப் பெரிதும் வியந்தது அவர்கள் நற்குணமும் தயாளசிந்தையும் எளிய வாழ்க்கையின் இலட்சியமுமே ஆகும். அவர்கள் தமது குல ஆசாரங்களிலும் வடமொழியிலும் எவ்வளவு திட்ப நுட்பமாக இருக்கிறார்களோ அவ்வளவு தூரம் இந்து சமயக் கோட்பாடுகளிலும் தமிழ் மொழி இலக்கியம் ஆகியவற்றிலும் மேம்பட்ட அறிவுடையவராகவும் இருக்கிறார்கள். தாம் போதித்து வந்தவற்றைத் தாமே நடைமுறையில் நடந்து காட்டியும் மற்றவர்களை நடக்கத் தூண்டியும் எதுவித ஆடம்பரமுமின்றி அமைதியாகவே எண்ணரிய பெரிய கோட்பாடுகளைக் கடைப்பிடித்தும் வருகிறார்கள். சிறந்த தெய்வ நம்பிக்கையும் திட சிந்தனையும்உடையவர்கள். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பரந்த மனப்பான்மையுடன் வாழ்கிறார்கள்.

உண்மையில் வள்ளுவர் கூறிய: —

''வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

என்ற குறளுக்கு இலக்காக வாழ்ந்து வருபவர்கள்.

இவர்கள் எனக்கு ருத்திரம், சமகம், பகவத்கீதை ஆகியவற்றினைச் சம்ஸ்கிருத உச்சாரண முறையோடு ஓதும் முறையைப் போதித்தார்கள். அவர்களது உள்ளத்தூய்மையும் ஆர்வமும் அவர்கள் காட்டிச் செல்லும் முறையினை நான் நன்கு கைப்பற்றக் கூடியதாக இருந்த தோடல்லாமல், எனது ஆன்ம மகிழ்ச்சிக்கும் எனது குருநாதருடைய புகழ்ச்சிக்கும் இடமாக இருந்தது. இந்த அரிய உபதேசத்தை எனக்குச் சொல்லித் தந்தமைக்கு நான் மிகவும் நன்றியுடையேனாகஇருக்கிறேன்.

அவர்களிடம் நிறைந்த அனுபவம் உண்டு. நிறைந்த கல்வி ஞானமுண்டு. ஆனால் அவர்களது அரிய அறிவுச் செல்வத்தை நாம் தக்க முறையில் இன்னமும் பயன்படுத்திக் கொள்ளாமல் இருப்பது மிகவும் வருத்தமளிப்பதாகும். அவர்களிடம் பலரும் கற்கவேண்டிய பல சிறப்புகள் உண்டு. அவர்களது ஆழ்ந்த அறிவு, தெய்வபக்தி, தெய்வநம்பிக்கை, சுயநலமற்ற வாழ்க்கைநெறி பரந்த நோக்கு, எளிய தூயவாழ்வு, இனிய சுபாவம் எல்லாமே எமது சிறுவர்கள் பின்பற்றி வாழக் கூடிய வகையில் வழிகாட்டியாக அமைகின்றன. அத்தனையும் எமது இளைஞர் பெற்று நயம்பெறக்கூடியதாக அவர் பல்லாண்டு வாழவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# அண்ணாமலையான் அருள் பெருக!

# வியாகரணசிரோமணி வாழியவே!

பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை

நிலமிசை இரு சிவதலம்

"வான் உழை வாழம்பலத்தரன் குன்றென்று வட்கி வெய்யோன் தான் நுழையா'' மலை ஒன்றுளது எல்லாப் பூதங்களும் சென்று ஒடுங்குகின்ற ஆகாயம் என்ற பூதமும் சென்று ஒடுங்குகின்ற பேரொளி அப்புறம் உள்ளது. இப்புறம் அம்பலமாகிய பேரொளியாய் இருக்கின்றான் சிவன். ஆகையால் சூரியன் இந்த ஒளிகளுக்கு முன்னே இயங்க மாட்டாது இடர் உறுகிறான். முன்னொரு போது தன் அறிவின்மையால் பேரொளிமுன் பிரகாசிக்கத் தொடங்கி தன் ஒளியுடன் பல்லும் இழக்கிறான் சூரியன். எல்லா ஒளிக்கும் ஒளியாகிய பெரும்பேரொளிமுன் சூரியன் ஒளி எம்மாத்திரம்? ஆகவே அதன் முன்னிலையில் சூரியன் தன் கிரணங்களை ஒடுக்குவான் அன்றி என்றுமே விரிப்பதில்லை.

தில்லைச்சிற்றம்பல ஒளி பரன் பேரொளி கலக்கும் இடமாய் இருப்பது போலத் திருவண்ணாமலையும் எல்லா ஒளிக்கும் தாயாகிய பெரும் பேரொளியாகையால்,

"வெம்புந்திய கதிரோனொளி
விலகும் விரி சாரல்
அம்புந்தி மூவெயி லெய்தவன்
அண்ணாமலை ........"

என்று அண்ணாமலையைப் போற்றுகின்றார் திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள். வெப்பம் செலுத்தும் சூரியன் தன்னொளியைத் திருவண்ணாமலையின் மீது வீசக் கூசி அண்ணாமலையின் பக்கல் சாய்ந்து சரிந்து செல்லுகின்றான். ஓரம்பால் முப்புரமதிலும் எய்த பரனது அண்ணாமலைக்கு இத்தகைய சிறப்பு உண்டு. சிதம்பரமும் அண்ணாமலையும் ஒளிமிஞ்சிய இரு சிவ தலங்களாக மண்ணுலகில் நிலவுகின்றன.

கண்ணாரமுது :

பிரம விஷ்ணுக்கள் இறைவனைத் தேடி அடைய ஒண்ணாது களைத்து இளைத்து விட்டனர். செருக்கடங்கிப் பலம் குன்றி இறைவனைத் தோத்தரித்த நிலையில் அவர்களுக்கு நடுவே எல்லை காணரிய அனற் பிளம்பொன்று குன்றாக நின்று மண்ணையும் விண்ணையும் ஊடுருவி ஒளிர்ந்தது. அத்தழல் தூண்நடுவே லிங்கம் ஒன்று தோற்றி அயன்மால் இருவருக்கும் அயர்ச்சி போக்கி உயர்ச்சி அளித்த தலமே திருவண்ணாமலையாகும்.

இது அதியற்புத தலம். எனவே இத் தலத்தின் புகழ் தாலம் எங்கும் பரவி யுள்ளது.

''அண்ணுமலை எம் அண்ணு போற்றி
கண்ணூர் அமுதக்கடலே போற்றி''

என்று அண்ணுமலைப் பெருமானை கண்ணுரமுதக் கடலாக மணிவாசகர் போற்றுகின்ருர்.

''அண்ணு மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணேர் முடியின் மணித் தொகை வீறற்ருற்போல்
கண்ணுரமுதமுமாய் நின்ருன்.....

என்று திருவெம்பாவையிலும் மணி வாசகஞர் அண்ணுமலையானை அன்ன விதமே போற்றுகிருர். பெரிய புரா ண ஆசிரியரும் திருஞானசம்பந்த சுவாமிகள் அண்ணுமலையைக் கும் பிடுமிடத்து,

'' அண்ணு மலைஅங் கமரர் பிரான் வடிவு போன்று தோன்றுதலும் கண்ணுற் பருகிக்கைதொழுது கலந்து போற்றுங் காதலிஞல் உண்ணு முலை யாள் எனும் பதிகம் பாடிஞர் ''

என்று அம்மலை கண்ணுக்கு அமுத மாய் நின்ற நிலையை நமக்குக் காட்டு கிருர். இப்படிக்கண்ணுக்குப் பேரமு தமாய் நிற்கும் இம்மலை பலராலும் புகழ்ந்து போற்றப்படுகின்றது. கண் ணுக்கு அமிர்தமாய் இஃது இருத்த லால் அடியார்கள் இம்மலையைக் கண் ணுற் பருகியே கையால் தொழுதார் கள். இங்குள்ள பெருமானை

'' உண்ணுமுலை உமையாளொடும் உடஞகிய ஒருவன்
பெண்ணுகிய பெருமான்......''

எனச் சிறப்பிக்கின்ருர் சம் பந்த சுவாமிகள் அண்ணுமலைத் தேவாரத் திருப்பதிகத்தில். மிகக் கனிவுள்ள பெருமான் ஆகையால் அவனைப் பெண்ணுகிய பெருமான் என்றே சம்பந்தப் பெருமான் போற் றும் நயத்தை நாங்கள் ஓர்ந்து கொள் ளுதல் அவசியம். திருவாதவூர் அடி களார் புராணத்திலும் ''விண்ணவர் மண்ணேர், பச்சைப்பாலுடன கலந் துட் கொள்ளும் பனிமலை மருந்தே'' என்று அதன் ஆசிரியர் பிரானையும் பிராட்டியாரையும் பொல்லா நோய்க்கு நல்ல பாலமுத மருந்தாக நமக் குக் காட்டி '' மாமலையிலுள்ள மருந்தே பிணி தீர்க்கும்'' என்று உறுதிப்படுத்துகின்ருர்.

இவ்வாற்ருல் அண்ணுமலை எல் லோராலும் போற்றிப் புகழப்படும் அணிமலையாக மணிமந்திர ஔஷதப் புகலிடமாகப் போற்றப்படுதலை திரு நாவுக்கரசு சுவாமிகள் புராணத்தி லும் சேக்கிழார் விதந்தோதுகிருர்.

''அண்ணு மலைமேல் அணி மலையை
ஆரா அன்பின் அடியவர்தங்
கண்ணூர் அமுதை .......'' என்

னும் (313-ம் அப்பர் புராணம்) பாடலும் அண்ணுமலையை கண்ணுர முத மலையாக மீட்டும் பெரியோர்கள் காட்டுதலை நாம் நோக்கும்போது கண்ணுக்கும் நாவுக்கும் உளத்திற் கும் இன்சுவை ஊறிக் கொண்டே இருக்கிறது.

பண்டும் இன்றும் என்றும்
உள்ள ஞானமாமலை :

இப்படி பெரும் கனிவிஞேடு

பெரியாரெல்லாம் வாயூறிப் போற்றும் திருவண்ணுமலை பெரும் ஞான மலையாகவே தொன்றுதொட்டுமிளிர்ந்து வருகிறது. இஃது இடையீடு படாத பெருஞானக்குன்று. இறைவனுடைய சாந்நித்தியம் இதன் கண் சிறப்பாக ஒளிர்வதால் இது மனத்தால் நினைந்து வாயாற் போற்றப் படுவ தொன்ருய்ப் பண்டு தொட்டே துதி பெறுகிறது. திருப்புகழ் தந்த பெருமாஞரும் இக்கிரியின் பெயரையேதாங்கி நிற்கின்ருர். அண்ணமலையில் ரமண மகாரிஷிகள் இதன் மேல் எண்ணற்ற பாடல்கள் தந்துள்ளார். அம் முனிவர் பெருமானும் சேஷாத்திரி சுவாமிகளும், விடோபா சுவாமிகளும் இத் திருத் தலத்தையே தமது தமது தவத் திருத் தலமாகக் கொண்டனர். தமிழரல்லாதவராய் இருந்தும் தமது காலத்தில் பெரும் பாகத்தை சமையல் வேலையிலே கழித்தவராயிருந்தும் முருகன் அதி அற்புதத் திருவருளுக்கு இலக்காகி திருப்புகழைச் சுரவரிசைப் படுத்திப் பதிப்பித்தும் அதனை எங்கும பரப்பியும் வாழ்ந்த வெள்ளிமலைச் சுவாமிகள் திருவண்ணுமலையில் பெற்ற அனுபவம் சொல்லளவைக் கடந்தது.

**வியாகரண சிரோமணி பல்லாண்டு வாழியவே!**

இத்தகைய தொன்று தொட்டு ஞான உருவாய் இலங்கும் மலையைப் பற்றி நினைக்கும் போது குன்றனைய துளங்காக் கல்விச் சிறப்புடைய இரு பெருமக்கள் நமக்குமுன் தோற்றம் தருகின்றனர். ஒருவர் யாழ்ப்பாணத்தின் இலக்கண பரம் பரையில் தோற்றி அது வாழத் தொண்டு செய்த அமரர் கணேசையர் அவர்கள். மற்றையவர் சஷ்டி அப்த பூர்த்தி விழாநாயகராகிய பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகள் என்ற வியாகரண சிரோமணி. இருவரும் 'கற்ருேர் அறியா அறிவினர் கற்ருேர்க்கு தாம் வரம்பாகிய தலைமையர்' கல்வியோடு சமயப் பேரறிவும் வாய்ந்து ஒழுக்கச் சிறப்பும் மிக்குடைய சீதாராம சாஸ்திரிகள் பல்லாண்டுகளாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து சிவாகம விற்பன்னராக விளங்கி வருகிருர்கள். குழந்தை உள்ளம் படைத்த தூயவர் அப்பெருமகனுர். அவர்கள் வியாகரணமும் சைவ ஆகமமும் ஓங்க இன்னமும் பல்லாண்டு வாழ வேண்டு மென்று பெரு மருந்தாய் இலங்கும் அருணுசலேசுவரர் உண்ணுமுலையம்மைத் தாயார் இருவரையும் மனமொழி மெய்களால் வேண்டுகின்ருேம்.

''அண்ணுமலை எம் அண்ணு போற்றி
கண்ணுர் அமுதக் கடலே
போற்றி.....?''

# குருமணி வியாகரணசிரோமணி

# ஸ்ரீ கி. சீதாராமசாஸ்திரி அவர்கள்

பிரம்ம ஸ்ரீ சு. ஷண்முகரத்தின சர்மா, சுழிபுரம்

பாரத புண்ணிய பூமியின் தென் பாகம் தெய்வீக திருத்தலங்களும் தீர்த்தங்களும் மூர்த்தி விசேஷங்களும் நிறைந்தது. செந்தமிழ்மொழி வழங்கப்பெறுவது. சம்ஸ்கிருதம் என்னும் உயர் மொழிக் கலைகளும், சாஸ்திரங்களும் இணைந்திருப்பது. காலங்களுக்கெல்லாம் முற்பட்ட பனித நாகரிகச் சிறப்புடையது.

இத்தமிழ் நாட்டின் வளமிக்க புகழ்பெற்ற ஒரு நதி தாமிரவர்ணி. இது ஆதிமுதல் அந்தம்வரை தமிழ் நாட்டின் ஒரு காட்சிச்சாலை போல் விளங்குவது. இதன் கரையில் சிறந்த சிவஸ்தலம் திருப்புடைமருதூர். எம்பெருமான் திருநாமம் புடார்ஜுனேசுவரர். அம்பிகையின் அழகுப் பெயர் கோமதிஅம்பிகை. சந்நிதித் தெருவில் இருபக்கங்களிலும் வரிசையான அந்தணர் இல்லங்கள். வேதங்களையும் அவற்றிற் கூறப்பட்ட ஒழுக்க நெறிகளையும் கற்றும், கற்றபடி ஒழுகியும் வரும் பிராமணோத்தமர்களுள் ஸ்ரீ சுப்ரமண்ய தீட்சிதர் பரம்பரையில் வந்த ஸ்ரீ கிருஷ்ன உபாத்யாயர் தெற்கு நோக்கிய ஒரு பெரிய வீட்டின் தலைவர். வேத நெறியின் பூர்வ அபர வழிகளில் மற்றவர்களை ஒழுங்குபெற நடாத்தி வைக்கும் பேரறிஞர். ஆற்று வளமிக்க நெற்கழனிகளிலிருந்து வந்த நெற்களஞ்சியச் செல்வர். அவருடைய வாழ்க்கைத் துணைவியார் ஸ்ரீமதி லக்ஷ்மிஅம்மாள். அவர்கள் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். மூத்த குமாரனை வடமொழிப் புலமை மிக்கவராக்க விரும்பினார். வித்தியாரம்பம், உபநயனம் நடந்து, வீட்டிலேயே ஆரம்பப் பயிற்சிகள் முடிந்து, திருக்குறுங்குடியில் காவியபாடப் பயிற்சிகள் நடந்தன. முத்தியளிக்கும் சிதம்பரத்தில் வியாகரணம்வரை கற்று உயர்கல்விக்காகிய அண்ணாமலை சர்வகலாசாலையின் ''வியாகரண சிரோமணி'' பட்டம் பெற்று **தி. கி. சீதாராம சாஸ்திரிகள்** ஆனார். அக்கால வழக்கப்படி தாய் மாமனார் தோள் மீதிருந்து மாலை மாற்றும் இளம் பருவத்திலேயே ஆற்றின் மறுகரையிலுள்ள சாட்டுப்பத்து கிராமத்தில் வேத வேள்விகள் செய்து தீட்சிதர்கள் எனும் புகழ் பெற்ற ஸ்ரீ ஹரிஹரதீக்ஷிதர் மகளான சீதாலட்சுமி அம்மையாரைத் திருமணஞ் செய்திருந்தார்.

சாஸ்திரிகள் சர்வகலாசாலையிலிருந்த காலத்தில் கூடப்படித்தவர் வைக்கம் மகாதேவன் என்ற ஒரு நல்லவர். அவர் திருச்செந்தூராண்டவன் திருவருளால் அங்குள்ள வேத பாடசாலையில் முன்பே என்னோடு

பழகியவர். சர்வகலாசாலையில் ஒரு நாள் மாலை மூவரும் சந்தித்து அறிமுகம் செய்து கொண்டோம். சிதம்பரம் கனகசபாபதியாகிய ஸ்ரீமந் நடராஜப்பெருமானைத் தர்சிப்பதற்காகப் புறப்பட்டோம். எனது கவனமெல்லாம் இவர்களுடைய தோற்றத்திலும் பேச்சிலுமே லயித்திருந்தது. கோவிலுள் மிகுந்த பயபக்தியுடன் சென்று நடராஜமூர்த்தியின் ஆனந்த தர்சனத்திலாழ்ந்திருந்தோம். எம்பெருமானுடைய திருவருட் பிரசாதங்களை சாஸ்திரிகள் தர நானும் மிக்க பணிவுடன் இரு கைகளையும் நீட்டிப் பெற்றுக்கொண்டேன். அப்போதைய அம்முகபாவம் இவர் ஒரு நல்லவர் என்ற நம்பிக்கையை என் மனத்திலேற்படச் செய்தது.

திருவருட்செயலினால் 1935ம் ஆண்டு சித்திரை மாசம் சாஸ்திரிகளவர்கள் என்னுடன் யாழ்ப்பாணம் வரநேர்ந்தது. ஒருசில பிள்ளைகளாவது வடமொழி கற்க வசதியேற்படும் என்பது நம்பிக்கை. இவர்களைக் கண்ட என் தந்தையார் அளவு கடந்த பேரன்பு காட்டி தம் பிள்ளையினும் மிக்க பரிவுடன் ஆதரித்து அணைத்துக்கொண்டது மறக்கமுடியாத ஒரு செயலாயிற்று. ஒரு ஆண்டின்பின் மனைவியாரும் மகளும் அழைத்து வரப்பெற்றனர்.

குரு பகவானுடைய நோக்கு ஏற்பட்டால் எல்லா நலன்களும் நிறைவு பெறுவதே போன்று எனது வணக்கத்துக்குரிய குருவும் சைவாசிரியர்களுக்கும் சைவத்தமிழுலகுக்கும் குருவும் ஆக விளங்கும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நோக்கு சாஸ்திரிகள்பால் வீழ்ந்தது. வனவாசம் நகரவாசமாயிற்று. சிஷர்கள் பலர் ஆயினர். அந்தணர்கள் வீடுகளிலெல்லாம் மங்கள கார்யங்கள் சிறப்புற்றன.

இக்காலத்தில் அரசியல் வாழ்விலும் பொதுவாழ்விலும் சிறந்து பிரகாசித்த கௌரவ நடேசபிள்ளை அவர்கள் தமது பரமேஸ்வரக் கல்லூரியில் சம்ஸ்கிருதப் பேராசிரியராக நியமித்து இலங்கைப் பிரஜையாக ஆக்கி எமக்கே நிரந்தரமானவராகச் செய்து வைத்தார்கள்.

வாழ்க்கை பயனுடையதாயிற்று. குழந்தைகள் பிறந்து வளர்ந்து கல்வி கேள்விகளிற் சிறந்து பிரகாசிக்கிறார்கள். பெண்கள் மங்கள வாழ்வு பூண்டு இல்லத்தரசிகளாகத் திகழ்கிறார்கள்.

சாஸ்திரிகள் தமது நிரம்பிய வடமொழிப் புலமையினால் தமிழ் ஆங்கில மொழிகளிலும் பூர்வ அபரக்கிரியைகள் சம்பந்தமான நூல்களிலும் வேத ஆகம உபநிடத ஜோதிஷ நூல்களிலும் பரந்த ஆராய்வும் விளக்கமும் பெற்று சந்தேக விபரீதங்களின்றி உறுதியான முடிபுகளைத் தக்க சாஸ்திர மேற்கோள்களுடன் கூற வல்ல பிரமாணிகர் ஆகத் திகழ்கிறார்கள். வடமொழி இலக்கண இலக்கியங்களை இலகுவாகவும் மிகுந்த இரசனையோடும் நல்ல உபமானங்களோடும் கற்பிப்பதில் நிகரற்று விளங்கு

கிருர்கள். இவர்கள் நடாத்தி வைக்கும் எக்காரியங்களிலும் மந்திரலோபம், கிரியாலோபம் முதலிய எக்குற்றங்களும் சிறிதேனும் அணுகா. சூழ்ந்திருந்து சம்பாஷித்தால் குலுங்கக்குலுங்கச் சிரிக்கலாம். நல்ல கதைகள் கேட்கலாம். சிறந்த உண்மைகளை அறிந்து திருந்திக் கொள்ளலாம்.

இவைகளெல்லாவற்றினும் அடிப்படையாக இவர்களிடம் காணப்பெறும் மிகப்பெருஞ்சிறப்பு தெய்வபக்தி. எதைச்செய்தாலும் எப்போது செய்தாலும் யாருக்காகச் செய்தாலும் அங்கெல்லாம் ஈசுவர பக்தியே அஸ்திபாரமாக அமைந்து நிறைந்திருக்கும்.

அதனுற்ருன் இவர்கள் கற்பிக்கிருர்கள். அவர்கள் கலைஞர்களாகிருர்கள். திருமணம் செய்து வைக்கிருர்கள்; மனமொன்றிய தம்பதிகளாகி பதிஞறு பேறும் பெறுகிருர்கள். வாழ்த்துகிருர்கள்; வாழ்த்தியபடி வளமெலாம் பெற்றுத்திகழ்கிருர்கள்.

அறிஞர்கள் இன்னும் பல சிறப்புகளை இவர்களிடம் கண்டு வியந்து கூற முடியும்.

அறுபதாண்டு நிறைவு பெற்ற சாஸ்திரிகள் அவர்களும் அவர்கள் தர்ம பத்தினியாரும் வசிட்டரும் அருந்ததியும் போன்று பல்லாண்டு காலமும் ஞான குருமணிகளாகத் திகழ்ந்து மேன்மைகொள் சைவநீதி உலகெல்லாம் விளங்க இறைவன் திருவருள் பாலிப்பாராகுக.

# எமது குருநாதர்

சிவஸ்ரீ ஸாமி விசுவநாதக்குருக்கள், நவாலி.

அலைகடலை ஆடையாக அமைந்தது உலகம். இதுவே பூமியும் நீரும் வானமும் சேர்ந்த நிலையான தோற்றம். குருலிங்க சங்கமம் என்பதும் இதே போல சேர்ந்த தோற்றமாமும்.

இதில் சகல ஆன்மாக்கள் தாவரம் முதலான யாவும் காலத்திற்குக் காலம் தோற்றுதல் வாழ்தல் மறைதல் காண்கிறோம்.

இவையாவும் முறையே உலக பிதா மாதா என்ற நிலையில் எல்லாம் வல்ல ஈஸ்வரன் ஈஸ்வரி என்னும் சிவசக்தி ஐக்கிய முறையில் செயல் அருள் நோக்குடன் இயங்கி வருகின்றன.

பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் எனனும் பஞ்ச பூதங்களும் உலகில் தோற்றப்படும் ஜீவராசிகளும் தாவரங்களும் அவனருளாலே இயங்கி வருவதைக் காண்கிறோம்.

இந்த நிலையில் உலகத்தில் பிரம்ம க்ஷத்திரிய, வைசிய சூத்திராதியாம் வருணங்கள் வருணத்திற்கேற்ப ஆச்சிரமதர்மங்கள் ஒழுக்கங்கள் ஆசாரங்கள் கல்வி அறிவு தொழில் செயல் யாவும் தொன்று தொட்டே வழி வழியாக நடைபெற்று வருகின்றன,

பிரம்ம குலத்தவர் வேத சாஸ்திரங்களை முறைப்படி குரு குலவாசம் செய்து ஓதி அதன் வழியே கிரியைகளையும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்ற நியதி வழுவாது செய்வதுடன் சமய விதிப்படி ஒழுகுவ்தாலும், வேதியர் என்னும் சிறப்பான பெயர் கொண்டு போற்றப்படுகின்றனர்.

இவரே கிரியாகுரு, வித்தியாகுரு, உபதேசகுரு தீக்ஷாகுரு, ஞானகுரு என்றெல்லாம் போற்றுதற்குரியாராவர்.

குரு என்னும் பதத்திற்கு இருளை நீக்கி ஒளியைத் தருவது. அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞானத்தைக் கொடுப்பது என்பது பொருள்.

இத்தகைய குருவின் பெருந்தன்மையைக் கீழே காண்க.

## ஸ்துதி குருவந்தனம்

குருர் பிரம்மா குருர் விஷ்ணுர் குருர்
தேவோ மகேஸ்வர ஹ
குரு: ஸாக்ஷாத் பரம் ப்ரம்ம தஸ்மை
ஸ்ரீ குரவே நமஹ.

நாம் எந்தக் கருமங்களைத் தொடங்கும் போதும் முதலில் குருவணக்கம் இரண்டாவது விநாயக வணக்கம் மூன்றுவது சபா வணக்கம் கூறியே கருமங்களை ஆரம்பிக்கும் முறையைத் தொன்று தொட்டே பெரியார்களும் சாஸ்திரங்களும் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

மறப்பினு மோத்துக்கொளளாகும்
பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக்கெடும்—

அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலால்—
திருவள்ளுவர்.

இவ்வித சிறப்புக்களுடன் வாழ்க்கை நடாத்திய பெரியார் அந்தணச் செம்மல் எமது குருநாதர் வியாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள்.

இப்பெரியார் சுமார் முப்பத்தைந்து வருஷங்கட்கு முன் தாய்நாட்டிலிருந்து சுளிபுரம் பருளை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி சன்னிதிக்கருகில் வந்து அமர்ந்தார். இப்பெரியாரை பருளை பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்கள் ஷண்முகரத்தினசர்மா அவர்கள் அழைத்து வந்தார்கள். இப்பெரியார் கலியுகத் தெய்வமாகிய ஸ்ரீமுருகப்பெருமான்மீது அளவிடற்கரிய பக்தி நிறைந்தவர். இவரின் சம்ஸ்கிருத அக்ஷரஒலி அந்த முருகன் சந்நிதியில் நடக்கும் கிரியா நிகழ்ச்சிகளில் பெரிதும் இடம்பெற்று மக்களை எல்லாம் மெய்சிலிர்த்து வணக்கம் செலுத்த அருள் கூட்டி வைக்கும் தன்மையை நாம் எல்லோரும் அறிவோம்.

இது மாத்திரமன்றி அங்குள்ளபிராமணப் பிள்ளைகட்கும் சிறந்த முறையில் கல்வி பயிற்றி வந்தார்கள்.

பின்பு பரமேஸ்வரக்கல்லூரி சம்ஸ்கிருத ஆசிரியராகவும் பல்லாண்டு கடமையாற்றினார்கள். அன்றியும் தனியாகப் பல ஆசிரியர்களுக்கும் காவியம் இலக்கணம் முதலான பாடங்களையும் போதித்தார்கள். பல அன்பர்களிடம் – நோயுற்றுக் கஷ்டமுற்றவர்களிடம் அன்பு கொண்டு அவர்கள் சக்திக்கு ஏற்றவாறு தெய்வ வழிபாடு சாந்தி ஹோமம் முதலான வழிவகை செய்தும் க்ஷேமமடைய அறிவுரைகள் செய்தும் வினைகளை நீக்கும் வழிவகைகளைப் போதனை செய்துவைக்கும் தன்மை வாய்ந்தவராவார்.

அவர்களின் குணம், செயல், பக்தி, ஜபம், தியானம், சந்தியாவந்தனம், ஆன்மார்த்த பூசை, சூக்தாதி பாராயணம் இவைகளின் சக்தியே அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள், அறிவுரை கேட்டவர்கள், வைதீக கிரியைகளைச் செய்வித்தவர்கள் சிறப்பாகக் கீர்த்தியுடன் வாழ்க்கைநடத்துவதை நாம் காண்கிறோம்.

அவரது நிறைந்த முருகநாமபாராயண பக்தியால் நாடெங்கணும் உள்ள ஆலயங்களிலும் வைதீக ஆகம கிரியைகளிலும் சமய செயல் சபைகளிலும் அவர்பெயர் இளந்தென்றற் காற்றுப்போல நறுமணங்கமழும் தூபமாகப் பரிமளிக்கின்றது.

இவ்வித தவப்பயன் நிறைந்த குருவின் உவந்த உபதேசங்கள் கிரியா விளக்கம் இவைகளை நானும் அவரிடம் அருட்பிரசாதமாகப் பெற்று அவரின் உறுதுணையுடன் ஒரு சிறு குருவாக இருந்து நடத்தக்கூடிய தன்மையைச் செய்து வைத்தது பெரும் அருட் செயலாகும்.

எத்தகைய கல்வி அறிவு உள்ள குருமாராக இருந்தாலும் இப் பெரியாரிடம் சென்று கிரியா விளக்கம் கேட்டுச் செய்யும் தன்மை அளவிடற்கரியதாகும்.

இவ்வழியில் நம்மைச் சிறப்பித்து வழிவகுக்கும் சாஸ்திரிகளின் ஷஷ்டியப்தபூர்த்திவிழாவில் நாம் இருந்து பங்குபற்றி அவரை வணங்கி ஆசி பெற்று வாழவேண்டியது எமது கடமையாகும். இத்துடன் அவரினதும் பத்தினியாரினதும் உபய பாதங்கட்கு வணக்கத்தைச் செலுத்தி இக்கட்டுரையை சமர்ப்பிக்கிறேன். முருகன் துணை.

# கற்பிக்கப் பிறந்த உபாத்தியாயர்

ஆ. சபாரத்தினம் B.A., ஆசிரியர்,
புனித அந்தோனியார் கல்லூரி, கரம்பன், ஊர்காவற்றுறை.

"இவ் வாயிலில் நுழைந்து, 'எனக்குப் பாடம் சொல்லித்தரல் வேண்டும்' எனக் கேட்ட எவரையும் நான் 'முடியாது' என்று சொல்லித் திருப்பியனுப்பியதில்லை; இப்போது உடல் நலம் குன்றியமையால் அப்படிச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது; ஆகவே அரசாங்க சேவையிலிருந்து ஒய்வுபெற நினைக்கின்றேன்."

ஐந்து ஆண்டுகட்குமுன் எமது ஆசிரியப்பெருந்தகை கூறிய வசனங்கள் இவை. அவர்கள் பேர் புகழுக்காகவோ, காசு பணத்துக்காகவோ படிப்பிக்கவில்லை. வடமொழி வாசனை யாழ்ப்பான மண்ணினின்றும் அற்றுவிடுமோ என்று நினைக்க வேண்டியிருந்த ஒரு கால கட்டத்திலே, அவர்கள் தெற்கு நோக்கி வந்தார்கள். அந்தணச் சிறூர் மட்டுமன்றி, அனைவரும் அவர்களது வருகையைப் பயன்படுத்தினர். இலண்டன் சர்வகலாசாலையார் தொன்மொழியொன்றைக் கற்றல் அவசியம் என விதித்தமையால், இளைஞர் மட்டுமன்றி முதியோர் பலரும் அவர்களிடம் படிக்க வந்தனர். அவர்களும் பயன்கருதாது தம்மாலான மட்டும் வித்தியாதானம் செய்து வந்தார்.

பரீட்சைக்கு மட்டும் பாடம் படிப்பிக்காமல், எடுத்துக்கொண்ட பாடத்தை மிக விஸ்தாரமாக, இலக்கியச்சுவை சொட்டச் சொட்டக் கற்பித்தார். வைதிகநெறியின்

மாண்மையும் இடையிடையே விளக்கினார். யக்ஞம் கிரியை முதலிய விஷயங்களைப் பற்றித் தாம் அனுபவபூர்வமாகக் கண்டவற்றையும் சேர்த்து விளக்கினார். அவரிடம் கற்ற பரம்பரையினர் பாக்கியவான்கள். இம்மையில் பொருளும் இன்பமும் பெற்றதோடு, மறுமையிலும் நற்கதியடையும் திசையில் திருப்பி விடப்பட்டனர்.

கலியின் கொடுமை முற்ற முற்றக் கல்வியின் மதிப்பும் குறைந்து கொண்டே வருகிறது. கல்வி ஒரு தொழிலுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடனேயே சகலரும் கற்கின்றனர். மிலேச்ச சர்வகலாசாலையினரின் தூண்டுதலால் அருமந்த வடமொழியைக் கற்ற நம்மவர் இப்போது அதனையும் கைவிட்டனர். கணிதமும் விஞ்ஞானமும் கற்றுப் பொறியியலாளராயும் வைத்தியராயும் பணம் சம்பாதித்துச் சமுதாயத்தில் பெரிய அந்தஸ்தை அடைவதே அனைவருக்கும் கருத்தாயிற்று. இனி வடமொழியும் தமிழும் கற்று, அவற்றுட் புதைந்து கிடக்கும் கருவூலங்களைத் தமதாக்கித் தம் வாழ்க்கையைத் திருத்திப் பண்படுத்தும் நோக்கம் நம்மவரிடையே மீண்டும் தழைக்குமோ என்பது ஐயத்துக்கிடமானதே.

''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தாற்'' போல நம் உபாத்தியாயர் அவர்கள் திகழ்கிறார்கள். நற்கனியிருக்க எட்டிக்கனியை நாடிச்செல்லும் நம்மவர் அவர்களைப் பயன்படுத்துவரோ? 'வடமொழியும், தென்தமிழும், மறைகள் நான்கும் ஆயவ'னாகிய சிவபிரான் நம்மவருக்கு நற்சிந்தையை அருள்க. அவன் புகழ்பாடி அடக்கமாகப் பணிசெய்து வரும் நம் ஆசிரியர்பிரான் கொழுத்தித்தந்த அறிவுச்சுடர் விளக்கை அணையவிடாது நாம் நமது பிற்சந்ததியினர் கையிற் கொடுப்போமாக. நம் தாயகத்திலிருந்து பிற நாடுகளுக்குச்சென்று, வடமொழியையும் நம் மதத்தையும் வளர்த்து, அந்நாடுகளின் வரலாற்றில் இடம்பெற்ற பெரியார்களைப்போல நமது ஆசிரியர் அவர்களும் ஈழத்துக் கல்வி வரலாற்றில் இடம்பெறுக.

# ஆலய வழிபாடு

**ஆ = ஆன்மாக்கள்; லயம் = வந்து ஒடுங்குதல் என்ற கருத்தைக் கொண்டுதான் ஆலயம் என்ற பெயர் வழங்கலாயிற்று. எங்கும் வியாபகமான பரமேஸ்வரனை மனத்தில் ஒருமுகப்படுத்தித் தியானிக்க எல்லோராலும் இயலாது. ஆகவே எல்லா ஜீவான்மாக்களும் கடைத்தேறும் பொருட்டுப் பரமேஸ்வரன் ஆலய மூர்த்திகளில் அதிட்டித்து நின்று அருள் புரிகின்றார். ஆ—(தம்பம் விம்பம் கும்பம்) எங்கும், லீயதே—மறைந்து நின்று அருள்புரிகின்றார் என்ற முறையாகவும் கருத்து வழங்கப்படுகின்றது. ஆகவே ஆலயம் முழுவதும் சிவஸ்வரூபமாகக் கருதப்படல் வேண்டுமென்பதே முனிவர்களின் கருத்தாகும். ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியிலும் சிவனின் பிரமதகணங்கள் அருவமாக நின்று சிவத்தை சேவித்து வருகின்றன. ஆகவே நாம் அப்பகுதிகளிற் செல்லும்போது வீண் வார்த்தை பேசாதும் ஆடம்பரங்கள் இல்லாதும் அடக்கத்துடனும் பக்தியுடனும் நடக்கவேண்டும். ஆலயத்தின் எப்பகுதியில் நின்று தவறுசெய்தாலும் சிவகுற்றத்திற்கு நாம் ஆளாவோம். சிவபெருமானுக்கு ''ஆசுதோஷி'' என்று வடமொழியில் ஒரு பெயர் உண்டு. இதன் கருத்து விரைவில் சந்தோஷமடைபவர் என்பதாகும். ஒருதரம் அவருடைய பெயரை உச்சரித்தாலுமே சந்தோஷமடைந்து அடியார்களுக்கு அருள்புரிவார். ஒரு சிறுதொண்டு செய்தாலுமே மிகுந்த சந்தோஷமடைந்துவிடுவதே அவரது இயல்பானதன்மை. அர்த்தாபத்தி நியாயத்தால் ஒரு சிறு தவறு செய்தாலும் விரைவில் கோபங்கொண்டு தண்டனை கொடுத்துத் திருத்தமுயல்வார் என்பது பெறப்படுகின்றது. ஆகவே எப்பொழுதும் நாம் ஆலயம் செல்லும்பொழுதும், வணக்கம் செலுத்தும் பொழுதும், சிறுதொண்டுகள் செய்யும்பொழுதும் அடக்கத்துடனும், பக்தியுடனும் அமைதியுடனும் நடந்து வரல் வேண்டும்.

ஆலயத்தில் விசுவரூபமாக — தூலவடிவமாக அமைந்திருக்கும்ராஜகோபுரம், துவஜஸ்தம்பம், ஸ்தூபி, பலிபீடம், மூர்த்தி இவ்வைந்தையும் ஐந்து லிங்கங்களாக கருதி வழிபடல் வேண்டும். முதல் மூன்றும் ஸ்தூல லிங்கங்களாகும். தூலமான புலன்களால் கண்டு தரிசித்து வழிபடக் கூடியதாய் அமைந்திருப்பதால் ஸ்தூல லிங்கங்களென்று வழங்கலாயிற்று. பலிபீடம் பத்ரலிங்கமாகும். ''பத்ரம்'' என்ற சொல்லுக்கு மங்களம், நன்மை என்பது கருத்தாகும். சீவனுக்கு மங்களத்தை உண்

டாக்க வல்லமை பொருந்தியதால் பத்ரலிங்கம் என்று வழங்கலாயிற்று. பலிபீடத்தின் அருகே நின்று பன்னிரண்டுமுறை அல்லது ஐந்துமுறை அல்லது மூன்றுமுறை வணக்கம் செலுத்த வேண்டும். அவ்விடத்தில் நான் எனது என்ற ஆணவம் பலியிடப்படுகின்றது. அப்பொழுது அறிவு சுத்தமாகிறது. சுத்தமான அறிவு சிவஸ்வரூபத்தைத் தியானிக்கச் சாதகமாகின்றது. ஆகவே நன்மை பயக்கும் தன்மையைக் கொடுப்பதால் இதற்கு ''பத்ரலிங்கம்'' எனப் பெயர் வழங்கலாயிற்று. மூர்த்தி, சூக்குமலிங்கம் ஸ்தூபி முதலியவைபோன்று ஸ்தூலப்புலன்களால் தரிசிக்கக்கூடியதன்று. சூக்குமமான அறிவினால் மூர்த்தியை உள்ளத்திலே தியானித்து வாக்கினால் அவருடைய துதியை ஓதி வழிபடவேண்டும். பரமபதி ஆலயத்துனுள் அமர்ந்திருக்கும் மூர்த்தியில் நின்று அருள்புரிகின்றார். இவ்வழிபாட்டுமுறை சூக்குமலிங்க வழிபாடு எனக் கூறப்படும்.

பரமேஸ்வரனுக்குப் பஞ்ச பூதங்களாலான சரீர அமைப்புக் கிடையாது. பக்தர்களுக்கு அருள் செய்வதற்காகவே சரீரத்தைத் தாங்கியுள்ளார். ''அநுக்கிரகாய பக்தாநாம் ஸ்வேச்சயா கிருஹ்ணதே தநும்'' என்று ஆகமநூல் இவ்வுண்மையை விளக்குகின்றது.

அறியாமை இருள் போன்றது. அறிவு விளக்கின் ஒளி போன்றது. அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவொளியைச் சிவத்தோடு கலந்துவிட சிவசோதியாக மிளிர்கின்றது. அப்படிப்பட்ட சிவசோதியை எப்பொழுதும் நாம் உள்ளத்தில் சிந்தனை செய்துகொண்டிருத்தல் வேண்டும். ''அந்தகாரவத் அஞ்ஞானம் தீபவத்ஞானமுச்யதே ! த்யக்த்வாச அக்ஞான திமிரம் சிவதீபம் ப்ரசிந்தயேத்!!'' என்ற சுலோகம் இக் கருத்தையே விளக்குகின்றது.

பஞ்ச பூதங்களின் குணப் பொருளைக் காணிக்கையாகக் கொடுத்துப் பஞ்சபூத சரீரத்துடன் எடுக்கும் பிறவியை இல்லாமற் செய்து கொள்ள வேண்டும்.

அதாவது சந்தனம், கஸ்தூரி, பழவகை, கற்பூரம், சாமரை, தூபம், சங்கு, மணி இவைகளைப் பெருமானுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

மனம், வாக்கு, காயம் என்ற மூன்று கரணங்களால் சிவனை வழிபடல் வேண்டும். சிவாலயத்தை வலம் வருதல் வணங்குதல் காயிக வழிபாடாகும். சிவலிங்கத்தின் சந்நிதியிலிருந்து சித்தத்தைச் சிவன்பால் செலுத்தி அவனது துதிகளைப் படித்தல் வாசிக வழிபாடாகும். அடுத்தது மானசிக வழிபாடு. தட்சிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்து கொண்டு மனத்தை ஒருமைப்படுத்தி '' நாஸாக்ரே ந்யஸ்ததிருஷ்டி: ''

என்றபடி மூக்கின் நுனியில் பார்வையைச் செலுத்திக் கொண்டு அமைதியான மனத்துடன் சிவசோதி ரூபத்தை உள்ளத்தில் ஒருகால அளவுகுறிப்பிட்டுத் தியானிக்க வேண்டும். இதுவே மானசிக வழிபாடாகும். இவ்வாறு மூன்றுவகையானவழிபாடுசெய்தபின் குருவழிபர்டு செய்யவேண்டும்.

பொதுவாக ஆகமசாஸ்திரங்கள், சரலிங்கவழிபாடு அசரலிங்கவழிபாடு என்று இருவகையான வழிபாடுகளை விளக்குகினறன. ஆலயம் சென்று மூர்த்தியை வழிபடுதல் அசரலிங்க வழிபாடாகும். அம்மூர்த்தியைத் தினமும் பூசித்து வழிபட்டு வரும் அர்ச்சகர் குரு ஆவர். அவரை வழிபடுவது சரலிங்க வழிபாடாகும். குருவானவர் ஆகம நூல்களை ஐயமுறக் கற்றுணர்ந்து விதிமுறை தவருது சிவபூசை செய்து சிவானுபூதி பெற்று சமய உண்மைகளை உலகுக்கு எடுத்துப் போதிப்பவராவர். அவரை நடமாடும் சிவமாகக் கருதிப் பக்தியுடன் வணங்கல் வேண்டும். குருவின் உள்ளம் மகிழ்ந்த தென்ருல் சிவபெருமானுள்ளம் சந்தோஷம் அடைந்ததற்குச் சமனுகும்.

''சிவே ருஷ்டே குருஸ்த்ராதா குரௌ ருஷ்டே நகஸ்சன'' சிவன் கோபித்தால் குரு காப்பாற்றுவார். குரு கோபித்தால் காப்பாற்றுவார் யாருமில்லை என்று சான்ருேர் வழக்கு ஒன்று உண்டு.

இதன் கருத்து சிவாபசாரம் நேர்ந்துவிட்டால் குரு அதற்குரிய பிராயச் சித்தத்தை விளக்கி பரிகாரம் கூறுவார். அதனுல் சிவகோபம் தணிந்து சிவனருள் கிடைக்கும். குருவுக்கு அபசாரம் நேர்ந்து விட்டால் அந்தக் குற்றத்தை நீக்குவதற்குரிய பிராயச்சித்த விதிகளைக் கூறுவார் யாருமில்லை என்பதே. ஆகவே குரு வழிபாடு சிவவழிபாடாகவே கருதப்பட்டுள்ளது.

பிறப்பெடுத்த மக்கள் அனைவரும் தங்களைப்பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். புல் பூண்டு முதலாக எத்தனையோ பிறவிகளை நாம் கண்ணுற் காண்கிருேம். அவைகளுள் தலைசிறந்ததாக காணப்படுவது மானிடப்பிறவியாகும். ''ஜந்தூனும் நரஜன்ம துர்லபமிதம்'' என்பது சான்ருேர் வாக்காகும். சிறப்பாக அறிவு என்னும் பகுதி மானுடனுக்கே உரிமையாக இருப்பதால் மானுடப்பிறவி சிறந்ததாகக் கருதப்பட்டது. அந்த அறிவு வெள்ளம் கீழ்நோக்கிச் செல்லும் இயல்புடையது. ஆகவே அதற்குத்தக்கபடி அணையிட்டு அறிவை நல்வழியில் மேல்நோக்கிச் செலுத்துபவர் குரு ஆவர். ஆகவே நல்ல குருவை நாடிச்செல்ல வேண்டும். அந்தக் குருவும் அறிவுக்கு நல்ல வழிகாட்டி, நல்ல உண்மைகளை எடுத்து விளக்கி சாஸ்திர சித்தாந்தங்களைப் போதிப்பார். சாஸ்திர தத்துவங்களை ஆராயப் புகும்பொழுது பரமேஸ்வரனுடைய விக்கிரக ஆராதனை முறைகளையும் அதன் பயன்களையும் ஆலய வழிபாட்டையும் முறைபடியாக எடுத்துக்கூறுவர். அதன்வழி பின்பற்றி மக்கள் ஆலய வழிபாடு செய்துவரல் வேண்டும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை மார்க்கங்களைப் பின்பற்றுவதற்கு ஆலயவழிபாடே முதற்படியாக அமையும். ஆலய வழிபாட்டினால் சித்தசுத்தி உண்டாகும். ஐம்புலன்களை நேர் வழிப்படுத்த ஆலயவழிபாடு சாதனமாக அமையும். ஐம்புலன்கள் தங்கள் தொழிலைச் செய்யாதவாறு தடைப்படுத்த முடியாது. ஆகவே அவைகளை அவற்றின்போக்கில் விட வேண்டும். அப்படி விடும்பொழுது கடவுளுடைய திருமேனியைக்காண் அவருடைய புகழைக் கேள், அவரைப்பற்றியே நினை என்று புலன்களின் போக்கைத் திருப்பிவிட வேண்டும். அப்பொழுது புலன்கள் நேர்வழிப்பட்டுவிடும்.

விக்கிரகங்களை ஆராதிப்பது நீண்டகாலத் தொடர்பாகவே இருந்து வருகின்றது. வேதங்களில் மறைபொருளாகவும் ஆகமங்களில் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கின்றது. வேதங்களில் பல தேவர்களுடைய சொரூபங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. யசுர் வேதத்தில் பரமேஸ்வரனுக்கு வணக்கம் கூறப்பட்டுள்ளது. அவைகளுள் முதலாவதாக அமைந்தது ''நமோ ஹிரண்ய பாகவே'' என்பது. பொற்கையனுக்கு வணக்கம் என்பது கருத்தாகும். மற்றொரு இடத்தில் ''நம:கபர்தினேச'' என்று கூறப்பட்டிருக்கிறது. சடைமுடியோடு கூடிய சிவனுக்கு வணக்கம் என்பது கருத்தாகும். ''நமோ நீலக்கிரீவாயச'' கறுத்த கழுத்தை உடையவனுக்கு வணக்கம். இவைபோன்ற பல வேத வாக்குகளைக் கொண்டு விக்கிரக ஆராதனை வேதத்தில் விளக்கப்பட்டுள்ளது என்பது தெரிகின்றது.

ஆகமங்களில் உருவத்திருமேனிகளுக்கு நான்கு புஜங்கள் அமைத்து மேல்நோக்கிய இருகைகளிலும் அபயவரதமும் அமைத்து வழிபடுமாறு விளக்கப்பட்டிருக்கின்றது. அன்பும் அதிகாரமும் கலந்தது சிவபெருமான் உருவத்திருமேனி என்பதை இது எடுத்துக்காட்டுகின்றது. வேதாகம முறைகளைப் பின்பற்றுபவர்களுக்கு திருவடிச்சேவையும் அதற்கு மாறாக நடப்பவர்களுக்குத் தண்டனையும் கொடுத்து ஆன்மபரிபக்குவத்தையும் அளிக்கின்றார் என்பதே இதன் கருத்தாகும்.

ஆகவே விக்கிரக ஆராதனை தொன்றுதொட்டு வழமையாக உள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். சகுணப்பிரம்மமாகிய விக்கிரகமூர்த்தியை ஆராதிப்பதின் வழியாகவே நிர்க்குணபிரம்மமாகிய சிவஸ்ரூபத்தை அடையமுடியும் என்று முனிவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்.

மக்கள் யாவரும் சமய குருமார்களை அடைந்து அவர்களிடமிருந்து சமய சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து அதன் வழி பின்பற்றித் தவறாது ஆலயம் சென்று முறைப்படி ஆராதித்து சிவனருளுக்குப் பாத்திரமாக வேண்டும். சமய வழிபாடும் பக்தியும் நிறைந்தநாடு செல்வமும் சிறப்பும் பெற்று பொன்னாடாக விளங்கும். அமைதி நிலவும். அந்நாட்டுமக்கள் ஆனந்தவாழ்வு பெறுவர்.

''லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து''

ஓம் தத் ஸத்.

# வியாசரும் புராணமும்

ஆடி மாதத்துப் பூரணை வியாச முனிவரின் பெருநாளாகும். வியாசர் வேதங்களை வகுத்துத் தந்தமையால் வேதவியாசர் என்றும் அழைக்கப்படுவார். இம்மகான் பதினெண் புராணங்களையும் பாரதம் என்னும் இதிகாசநூலையும் இயற்றியுள்ளார். இதனால் வைதிக சைவ சமயத்தைப் பின்பற்றி ஒழுகுபவர் யாவராலும் போற்றிவணங்கப்படவேண்டியவர். வேத தர்மங்களை யாவரும் அறிந்து பயன் பெறுவதற்காகப் பாரதம் என்னும் இதிகாசநூலில் சிறு சிறு கதைகள் மூலம்தர்மங்களைவிளக்கியிருக்கின்றார். வியாச முனிவர் இயற்றிய புராணங்களும் வேதக் கருத்துக்களை விரித்து விளக்குகின்றன. ஒவ்வொரு கற்பத்திலும் முதல் மூன்றுயுகங்களில் வேத மந்திரங்கள் யாவும் ஒருங்கே அமைந்திருக்கும். அக்காலத்தில் முனிவர்கள் வேத முழுவதையும் கற்றுப் பின் வழிபாட்டிற்குரிய மந்திரங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுவார்கள். கலியுகத்தில் மக்களுக்கு நூல்கள் முழுவதையும் கற்பதற்குக் காலம் போதாமையாலும் மக்களின் மனவலிமை குன்றி வருவதாலும் அவர்கள் பயன் பெறுவதற்கு ஏற்றபடி முறையாக வேதங்களை வகுத்துத் தரும்படி முழுமுதற் கடவுளாகிய பரமேசுவரன் தனது கிரியாசத்தி வடிவமான நாராயணனை அவதரிக்கும்படி அருள் செய்தார். அந்த நாராயணனே வியாசராக வந்து வேதத்தை வகுத்துத் தந்தருளினர். இவருடைய தந்தையார் பெயர் 'பராசரர்' என்பது. தனயனின் பெயர் சுகர் என்பதாகும். பராசரமுனிவர் ஒரு சமயம் கங்கையாற்றிற் படகில் சென்றுகொண்டிருந்தார். படகோட்டியின் வளர்ப்பு மகள் அப்படகில் தந்தைக்கு உதவி புரிந்து வந்தாள். அவள் பெயர் மச்சகந்தி. அப்சரப் பெண் ஒருத்தி அயனின் சாபத்திற்காளாகி மானுடப் பிறவி எடுத்துப் படகோட்டியால் வளர்க்கப்பட்டு, மச்சகந்தி என்னும் காரணப்பெயர் பெற்று விளங்குகின்றாள் என்பதைப் பராசரமுனிவர் தம் அகக்கண்ணால் அறிந்தார். பரமபதியே பரம் என்று வழிபட்டு வரும் பராசரரின் உள்ளத்தில் பரமேசுவரனின் திருவுள்ளம் பிரதிபலித்தது. இத்தருணத்தில் உற்பவிக்கும் மைந்தன் உயர்ந்த பண்பு நிறைந்து புகழ் பெற்று உலக மக்களுக்கு நன்மை புரிவான் என்று உணர்ந்தார். இதுவும் சிவன் செயலே என்று கருதி அப்பெண்ணின் தந்தையின் அனுமதியுடன் தவ வலிமையால் மச்சகந்தி என்ற காரணப் பெயரை நீக்கி பரிமளகந்தி என்று காரணப் பெயரிட்டு அவளிடம் பராசரர் வியாச முனிவரைத் தோற்றுவித்தார். இவருக்கு துவைபாயனர், கிருஷ்ணர், பாதராயணர் என்றுபல பெயர்கள் உண்டு. நான்கு பக்கமும் தண்ணீர் சூழ்ந்த திடலில் உற்பவித்ததால் இவர் துவைபாயனர் எனப்பட்டார். துவி = இருமருங்கிலும்—ஆபம் = தண்ணீரையுடையது துவீபம் எனப்படும். அத்துவீபத்தை

(திடலை) அயனமாக (பிறப்பிடமா க)க் கொண்டமையால் துவைபாயனர் என்று பெயர் பெற்றார்.

கருமை நிறம் பொருந்தியவரானமையின் கிருஷ்ணர் என்று காரணர் பெயர் ஏற்பட்டது. பதரிகை (இலந்தைக்காடு) என்னும் இடத்தில் ஆசிரமம் அமைத்து அதை உறைவிடமாகக் கொண்டமையால் பாதராயணர் என்னும் பெயர் பெற்றார். இங்ஙனம் பல காரணப் பெயர்கள் இவருக்கு வழங்கப்படலாயின.

ஐந்தாம் வேதம் என்று போற்றப்படும் மஹாபாரதம் என்னும் நூலை வியாசர் இயற்றியருளினார். பரமேசுவரன் நடராசத் திருவுருவத்திலே நின்று உலகுக்கு ஆனந்தரசத்தையும் வக்ரதுண்ட விநாயகர் திரு உருவத்திலே நின்று அற்புதரசத்தையும் அருளுகின்றார் என்பது சான்றோர் கருத்தாகும். ஆகவே விநாயகப் பெருமானை முன்னிட்டே வியாச முனிவர் இயற்றிய மகாபாரதம் உலகத்தில் பரவலாயிற்று. நான்குவேதங்களும் நாதவடிவத்தில் வெளிவந்தன. ஐந்தாம் வேதம் எழுத்து வடிவத்தில் எங்கும்பரவியது. இதுபற்றி ஒருகதை வழங்குகின்றது.

வியாசமுனிவர் விநாயகப் பெருமானைவணங்கித் தான்இயற்றும்இந்த இதிகாசத்தை ஏட்டில் எழுதியருள வேண்டுமென்று வேண்டினார். விநாயகப்பெருமானும் அவருடைய வேண்டுகோளை ஏற்றருளினார். ஆனால் காலதாமதம் செய்யாமலும் இடைவிடாது தொடர்பாகவும் கூறவேண்டுமென்று தெரிவித்தருளினார். வியாசர் அவ்வாறே செய்கிறேன் என்று வினயத்துடன் வேண்டிக் கொண்டு மேலும் ஒன்றுகூறினார். 'நான்கூறும் செய்யுளைத் தாங்கள் பொருள் தெளிந்து எழுதியருள வேண்டும்' என்றார். விநாயகப் பெருமானும் 'அங்ஙனமே ஆகுக' என்றார். வியாச முனிவர் பல செய்யுள்களுக்கிடையில் எளிதில் உணர்ந்துகொள்ள முடியாத மறைவான கருத்துக்கள் கொண்ட ஒவ்வொரு செய்யுளைக் கூறுவார். அப்பொழுது விநாயகப் பெருமான் சிறிது காலம் ஆழ்ந்து சிந்தித்திருப்பார். இதற்கிடையில் வியாசருடைய உள்ளத்தில் பல செய்யுள்கள் பெருக்கெடுக்கும்.

இம்முறையாக மகாபாரதம் முழுவதும் எழுதி முடிக்கப்பட்டது. இதிலும் நாம் ஓர் உண்மையைக் காணலாம். விநாயகப் பெருமான் அறிந்துகொள்ள முடியாதது ஒன்றுமில்லை. ஆகவே இது தன் பக்தன் இடையிடையே களைப்பாறுவதற்காக அவர் புரிந்த திருவிளையாட்டேயாகும். உதாரணத்திற்கு ஒரு செய்யுளைப் பார்ப்போம்.

''பய: பாஸ்யாமி ராஜேந்திர கோமயம் ந து கோமயம்'' இதில் பய: என்பது பாலையும் தண்ணீரையும் குறிக்கும். கோமயம் என்பது பசுவிலிருந்து கறந்த எனவும் பூமியிலிருந்து ஊற்றெடுத்த எனவும் பொருள்படும். பசுவிலிருந்து கறந்த

பாலைக் குடிக்கப்போகிறதில்லை. நிலத்தில் ஊறிய தண்ணீரையே குடிக்கப் போகின்றேன் என்பதே இச்செய்யுளின் பொருளாகும். இது போல பல கருத்துக்கள் கொண்ட செய்யுள்கள் பாரதத்தில் உண்டு.

வியாசர் பல இடங்களிலும் சென்று பல தர்மப்பிரசாரம் செய்திருக்கின்றார். வியாசமுனிவர் பிரம்ம சூத்திரம் என்னும் நூலையும் இயற்றியுள்ளார். அதற்கு பாஷ்யம் (விரிவுரை) சங்கரபகவத்பாதாள் இயற்றியுள்ளார்கள். ஒரு சமயம் வியாச முனிவர் மாறுவேடம் பூண்டு சங்கரரிடம் சென்று பிரம்ம சூத்திரத்தில் சில ஐயப்பாடுகள் இருக்கின்றன வென்று மூன்று நாள் சாஸ்திரவாதம் செய்தார். சங்கருடைய சீடர்களுள் ஒருவர் இவருடைய திறமையைக் கண்டு இவர் வியாச முனிவராகத்தான் இருக்க வேண்டும் என்று கருதி ''விஷ்ணுவின் அம்சமான தாங்களும் சிவாம்சமான சங்கரரும் விவாதம் செய்துகொண்டு போனால் முடிவு ஏது?'' என்று துதி செய்து அவர்களுடைய வாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். பின் வியாச முனிவர் சுயரூபம் பெற்று ''பிரம்ம சூத்திரத்தில் பலருக்கு பல ஐயங்கள் உண்டாகும். அதனை உன் வாயிலாக உலகுக்கு அறிவப்படுத்த வேண்டும் என்று கருதியே இந்த வேடம் தாங்கி வந்தேன். அவைகளை உலகுக்கு பயனுடையனவாகச் செய்'' என்று ஆசி கூறித் திரும்பிச் சென்றார்.

வியாசபகவான் சாஸ்திர வாதம் செய்வதிலும் வல்லுநராக இருந்தார். ஒருசமயம் வியாசபகவான் தனக்கு ஒரு மைந்தன் வேண்டுமென்று பரமேசுவரனிடம் பிரார்த்தனை செய்துகொண்டார். அவரோ பிரம்மசாரி. மைந்தன் பிறப்பது எங்ஙனம்? அத்தருணம் ஓர் அழகிய தேவமாது அவர்முன் தோன்றி அவரைச் சஞ்சலத்திற்குள்ளாக்கினாள். வியாசமுனிவரும் கலங்கிய மனத்துடன் வாது செய்து காமனை வென்றார். அம்மாதை அவர் விரும்பவில்லை. வேறொரு சமயம் அவர் வேள்விக்காக நெருப்புண்டாக்கப் படும் ஒருவகை வைரமரத்தைக் கடையும்பொழுது அதிலிருந்து சுகர் என்ற மைந்தன் பிறந்தான். இவ்வாறு வியாசர் காமக் குரோதங்களை வென்றமை தெளியப்படும்.

பரீக்ஷித் என்னும் மன்னவன் வேட்டைக்காகக் கானகம் புகுந்தான். அங்கே தவம்புரிந்துகொண்டிருந்த ஒரு முனிவரின் கழுத்தில் இறந்த பாம்பொன்றை வில்லாலெடுத்து மாட்டிவிட்டுச் சென்றான். முனிகுமாரன் தன் தந்தையைக் கண்டு துணுக்குற்றான். இவ்வநீதியைச் செய்தவன் ஏழுநாட்களுள் அரவம் தீண்டி இறக்கக்கடவன் என்று சாபமிட்டான். முனிவரும் யோகம் கலைந்து கண்விழித்து நிகழ்ந்தயாவையும் அறிந்துகொண்டார். அவர் மகனை நோக்கி, 'மகனே, எவருக்கும் கோபம் கொடியது. அதுவும் தவத்தில் வாழும்

யோகிகளுக்குச் சினம் கூடவே கூடாது' என்று கூறி அச்சாப வரலாற்றை மன்னர் அறியச்செய்தார். மன்னனும் தன் செயலை நினைந்து வருந்தி முனிவர்களுடன் கலந்தாலோசித்தான். அம்முனிவர்கள் 'ஏழு நாட்கள் புராணம் கேட்டால் நற்கதி பெறுவாய் என்றறிவுறுத்தினர். அங்ஙனமே செய்து நற்கதி பெற்றான்.

அவனது மைந்தனாகிய ஜனமேஜயன் ஒருசமயம் வியாசரை வணங்கித் தன் தந்தையைத் தனக்குக் காட்ட வேண்டுமென்று வேண்டினான். வியாசரும் தன் தபோவலிமையினால் அவரை அழைத்துக் காண்பித்தார். இவ்வாறு தவத்திலும் வலிமை பெற்று விளங்கினார் வியாசர்.

அநுபூதியிலும் மிகச்சிறந்தவர் என்பதற்குச் சான்றுகள் பல உள. ஒருசமயம் வியாசமுனிவர் காசி க்ஷேத்திரத்தில் இருடிகளுக்குப் புராண விளக்கம் செய்துகொண்டிருந்தார். எல்லாத் தேவர்களுள்ளும் விஷ்ணுவே மேலான பரம்பொருள் என்று கூறினார். அப்பொழுது சிவபக்தர்கள் இஃது உண்மையாயின் விசுவேசுவரருடைய சந்நிதானத்தில் இதனைக் கூறவேண்டுமென்று வேண்டினர். வியாசரும் அதற்குச் சம்மதித்துப் பல முனிவர்களுடன் கூடி விசுவேசுவரர் ஆலயம் சென்று இரு கைகளையும் உயர்த்திக் கொண்டு கோவிந்தனைவிட மேலான தெய்வம் இல்லை என்று உரத்துக் கூவினார். உடனே நந்திபகவான் வியாசரை விழித்துப் பார்த்தார். இரு கைகளும் அசையாது ஸ்தம்பித்துவிட்டன. வியாசரும் சிவாபராதத்தை மன்னிக்கும்படி இறைஞ்சினார். இரு கைகளும் விடுதலை பெற்றன.

''பராத் பரதரோ ப்ரம்மா தத்பராத் பரதோ ஹரி: தத்பராத் பரதோ தீச: தந்மே மந: சிவசங்கல்பமஸ்து''

இதன்பொருள்:– பரமான தேவர்களைக் காட்டிலும் மேலானவர் பிரம்மா. அந்தப் பரமான பிரமாவைக் காட்டிலும் மிக மேலானவர் விஷ்ணு. அந்தப் பரமான விஷ்ணுவைக் காட்டிலும் மிக மேலானது சிவம். ஆகவே என்மனம் எப்பொழுதும் சிவன் நினைவாகவே இருக்கட்டும் என்பது.

இது யஜுர் வேதத்திலுள்ள ஒரு மந்திரம் இதனையறிந்த வியாசமுனிவர் கோவிந்தனைவிட மேலான தெய்வம் உளதோ என்று கூறித் தன் அநுபவமூலமாகவும் சிவபெருமானின் பெருமையை உலகத்துக்கு எடுத்துக்காட்ட எண்ணி இவ்வற்புதத்தைச் செய்தாரேயன்றி அறியாமையாலன்று. இத்துணைப் பெருமை வாய்ந்த வியாசமுனிவர் இயற்றிய புராணங்கள் மூலமாகவே நான் வேதத்தின் கருத்துக்களைத் தெளிவாக உணரக்கூடியதாக இருக்கும். இந்திரனைப்பற்றிக் கூறும் ஒரு மந்திரம் யஜுர் வேதத்தில் உள்ளது.

''விருத்திரக்: விமிருதோ வசீ வ்ருஷா இந்திர: புர ஏது ந'' விருத்திரன் என்ற அசுரரைக் கொன்றவன் தீயவரைத் தண்டிப்பவன், புலனடக்கமுள்ளவன், இடபரூபம் தாங்கியவன் இந்திரன் எங்கள் முன்னிலையில் சென்றுகொண்டிருக்கட்டும் என்பது இதன் கருத்தாகும்.

விருத்திரன் யார்? ஏன் அவனைக் கொன்றான். இந்திரன் இடபரூபம் தாங்கியது எப்பொழுது இவைகளுக்கு உரிய விடையைப் புராண மூலமாகத்தான் அறியவேண்டும். விண்ணுலகத் தலைவன் இந்திரன். தீயவர்களை அழித்து நல்லவர்களைப் பாதுகாப்பது இவன் தொழில். துவஷ்டா என்பவனின் மைந்தனை இந்திரன் ஒருசமயம் கொன்றுவிட்டான். இந்திரனை அழிப்பதற்குத் துவஷ்டா ஒருவேள்வி செய்தான். இந்திரனை அழிக்க வல்லமை பொருந்திய ஒரு மைந்தன் இந்த வேள்விக குண்டத்தில் தோன்றுவானாக என்று மந்திரம் கூறி அவிர்ப்பாகமளித்தான். ஆனால் அவன் மந்திரத்தின் ஒலியை மாறாகக் கூறியதனால் இந்திரனாலேயே அழியவேண்டிய ஒரு மைந்தன் தோன்றட்டும் என்று. மந்திரத்தின் பொருள் அமைந்துவிட்டது. இதுதான் கடவுள் செயல். தீயசக்தி ஓங்கிவரும் நேரம் அவன் செயலால் அதுவே தெய்வசக்திக் குரியதாக ஆகிவிடுகின்றது. அந்த வேள்வித் தீயிற்றோன்றியவன்தான் விருத்திரன் என்ற அசுரன். சாதாரணமாக அசுரர்கள் மக்களுக்குத் துன்பத்தை அளிப்பர்; ஆனால் விருத்திராசுரனோவெனில் எல்லாச் சீவர்களுக்குமே துன்பம் செய்துவந்தான். சூரியனை மறைத்து உலகை இருளில் மூழ்கடித்தான். மேகத்தை மறைத்து மழையைப் பொழியவிடாமல் தடுத்தான். பகலிரவு தெரியாமல் மக்கள் செயலற்று நின்றனர். ஆற்றின் குறுக்கே படுத்து ஆற்றுநீரைப் பெருகவிடாது தடுத்தான். தண்ணீரின்மையால் நிலம் வளம்பெறமுடியவில்லை. அதனால் சீவராசிகள் வருந்தின. இங்ஙனம் பலவகையான இடுக்கண்கள் புரிந்தான் விருத்திராசுரன். தீயோரை அழிக்கும் வல்லமை பெற்ற இந்திரன் விருத்திரனைக் கொன்றான். இந்திரனுடைய பெருமையைக் கூறும்பொழுது விருத்திரனைக் கொன்ற பெருமையுடையவனே என்று சிறப்பித்துக் கூறப்படுவது வழக்கம். இவ்வாறு அவனது பெருமையை எமக்கு விளக்குவன புராணங்களேயாம்.

மற்றொரு சமயம் காலகேயர் என்ற அசுரர்களால் துன்புறுத்தப்பட்டுத் தேவர்கள் பாற்கடலிற் பள்ளிகொள்ளும் திருமாலைச் சரணடைந்தனர். திருமாலும் அவர்கள் கருத்தை அறிந்து திருவாய் மலர்ந்தருளினார். ''நான் அவ்வசுரர்களை நேர்முகமாகக் கொல்லக் கூடாது. சூரிய குலத்தில் புரஞ்சயன் என்ற ஓரரசன் ஆட்சிபுரிகின்றான் அவனிடம் என் அம்சத்தைச் செலுத்தி அவன் மூலமாகவே அசுரர்களை அழிப்பேன். ஆகவே நீங்களும் அவனுதவியைக் கோருங்கள்'' —

என்றார். தேவர்களும் மன்னரிடம் உதவியை நாடினர். அப்பொழுது மன்னர் கூறினார். ''நான் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றுவேன். ஆனால் உங்களரசன் எனக்கு வாகன மாக வரவேண்டும்'' என்றான். தேவர்கள் இந்திரனுக்கு இதனைத்தெரிவித்தனர். இந்திரனும் அவர்கள் வேண்டுகோளை ஏற்று இடபருபம் தாங்கிப் புரஞ்சயனைச் சுமந்தான். மன்னனும் அசுரரை அழித்தான். இடபத்தின் கழுத்தின் மேற்பகுதிக்கு வடமொழியில் ''ககுத்'' என்று பெயர். அதில் நின்று போர் செய்தமையால் ககுத்தன் என அம் மன்னன் காரணப் பெயர் பெற்றான். அவனுடைய வம்சத்தில் தோன்றிய இராமனைக் காகுத்தன் என்று வழங்கலாயினர். புராணங்களின் உதவியின்றேல் இந்திரன் இடபருபம் தாங்கிய வரலாற்றை நாமறிவதெங்ஙனம்?

''க்ருதேந த்யாவா ப்ருதிவீ வ்யுந்தி'' என்பது இருக்குவேதத்தின்கணுள்ள இன்னொரு மந்திரம். இதன்பொருள்: ஓபர்ஜன்ய'' தேவனே, வானத்தையும் நிலத்தையும் நீரால் நனைப்பீராக என்பது. கிருதம் என்பதற்கு இலக்கிய வழக்கில் நெய் என்றே கருத்து. இந்த மந்திரத்திலோ தண்ணீர் என்ற பொருளிலே பிரயோகிக்கப்படுகின்றது. பொதுவாக நெய் நெருப்பை எரியச்செய்கின்றது. அதுபோல தவச்செல்வர்களின் உள்ளங்கையில் அருவமான அக்நி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. முனிவர்கள் சாபமிடும் சமயம் அங்கையில் நீரேந்தி சாபவசனம் கூறி நீரைத் தெளிப்பர். இந்த அருவமான அக்நியைத் தண்ணீர் நெய்யாகிச் சுவாலிக்கச்செய்கின்றது. குற்றம் செய்தவர்கள் அந்த அக்நியின் வெப்பத்துக்கு ஆளாகின்றனர்.

ஒரு சமயம் சூரியகுல மன்னர் ஒருவர் வசிட்டமுனிவரைத் தலைமைக்குருவாக வைத்துக்கொண்டு வேள்வியொன்று வேட்டார். இடையூறின்றி வேள்வி முடிந்தது. வசிட்ட முனிவர் மன்னரிடம் உச்சிநீராடி வருகின்றேன் என்று கூறி ஆற்றுக்குச் சென்றார். மன்னரிடம் நீண்ட நாள் பகைமை பூண்ட அசுரன் ஒருவன் மன்னருக்குத் தீமைசெய்யத் தருணம் பார்த்திருந்தான். இதுவே தக்க தருணம் என்று கருதி அவ்வசுரன் முனிவர் வேடம் தாங்கி மன்னவனை யடைந்து ''மன்னவ, இன்று மாமிச உணவை யான் விரும்புகின்றேன் ஆய்த்தம் செய்க. இதனைக் கூறவே திரும்பவும் வந்தேன்'' என்றான். அரசன் ''போற்றத்தக்க குருவே, இதுவரை தாங்கள் இதுபோன்ற செயலில் ஈடுபடவில்லையே. தகாதகாரியத்தைச் செய்விக்கத் தூண்டுவது இருவருக்கும் பாபமல்லவா?'' என்றார். ''குருவின் வார்த்தையைக் கேட்டு நடப்பதே மாணவரின் கடமை. அதன் பலாபலன்களை ஆராய்வது அவசியமில்லை'' என்றார் குரு. மன்னவரும்

மௌனியானார். அரக்கன் மீண்டான். மாமிச உணவைச் சமைப்பதற்கு யாரைத் தேடுவேன் என்று மன்னவன் மனம் கலங்கிநிற்க, அரக்கன், சமையற்காரன் வேடம்பூண்டு மன்னரிடம் சென்று நான் மாமிச உணவு தயாரிப்பதில் வல்லவன். உங்களுக்கு உகந்தபடி உணவு தயார் செய்வேன் என்றான். அரசனும் சம்மதம் கொடுத்தான். முனிவர் ஆற்றிலிருந்து திரும்பி வந்தார். அரசனும் வழமைபோல் உபசரித்து முனிவருக்கு அமுது படைத்தான். முனிவர் உணவில் புதிய மாற்றத்தைக்கண்டு சீற்றங்கொண்டு கமண்டலத்திலிருந்த தண்ணீரைக் கையிலிட்டு ''மன்னவா, என்ன காரியம் செய்தாய்! உனக்கு ஏற்பட்ட துணிவுதான் என்னே? நீ பிரம்மராட்சதனாகுவாய்!'' என்று சாப வசனம் கூறித் தண்ணீரைத்தெளித்தார். மன்னனும் ''குருவே, முன்பின் முரணாகக் கூறுகின்றீர்கள். தாங்களே பணித்துவிட்டுத் தாங்களே சாபமிடுவதாயின் சத்தியம் எவ்வாறு நிலைபெறும்?'' என்று கூறிக் கோபம் மேலிட்டுக் குருவுக்கு மறுசாபமிடக் கையில் தண்ணீரை ஏந்திச் சாபவசனம் கூறத் தொடங்கினான். அண்மையில் நின்ற மனைவி கணவனை நோக்கி ''தலைவ, இது என்ன அக்கிரமம்? மலை அசைவதுண்டா? தண்ணீர் சுடுமா? தந்தை மகனைத் தண்டிப்பதற்கு உரிமையுண்டு. மகன் தந்தையைத் தண்டிப்பதுண்டா? குரு சீடரைத் தண்டிப்பதற்குரிமையுண்டு. ஆனால் சீடன் குருவைத் தண்டிப்பதுண்டா? இயற்கைக்கு மாறாக உங்கள் காரியம் இருக்கின்றதே. சினத்தை விடுங்கள். யாவும் நன்மைக்கே'' என்று கூறினாள். மன்னனும் சினம் தணிந்து கையில் எடுத்த தண்ணீரை என்னசெய்வது என்று சிந்திக்க, தங்கள் பாதங்களில் அதனைத் தெளியுங்கள் என்று மனைவி கூறினாள். உடனே அப்பாதங்கள் எரிந்து கருகி விட்டன. தண்ணீருக்கும் உள்ளங்கையில் உள்ள நெருப்புக்கும் தொடர்புண்டு. அத்தண்ணீர் நெய்யாகி நெருப்பைச் சுவாலிக்கச் செய்து மன்னனின் கால்களை எரித்தது. நெய்யாக மாறும் தன்மை தண்ணீருக்கு இருப்பதால் ''க்ருதேந'' என்ற சொல் தண்ணீருக்கு வேதத்தில் வழங்கப்பட்டது. புராணம் மூலமாகவேதான் இதன் கருத்து விளங்கக்கூடியதாக இருக்கின்றது.

''யுவம் ச்யவானம் ஜரசோ விமுக்தம்'' என்பது இருக்குவேதம். ''ஓ அசுவினீதேவர்களே, நீங்களிருவரும் சியவனர் என்ற முனிவருக்கு முதுமைநீக்கி இளமையளித்தீர்கள்'' என்பது இம்மந்திரத்தின் கருத்தாகும். அசுவினீதேவர்கள் யார்? சியவன முனிவர் எப்படிப்பட்டவர்? இவர்கள் முனிவருடைய அருளைப் பெற்று அடைந்த இலாபம் என்ன? என்பவைகளைப் புராணம் மூலமாகவேதான் நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. சூரியபகவானுக்கு சம்ஞை என்று ஒரு மனைவி உண்டு.

கணவருடைய அண்மையிலிருந்து சேவை செய்யமுடியாதவளாய் வெப்பத்தால் துன்புறுத்தப்பட்டுத் தனது தந்தையான துவஷ்டாவிடம் சென்று முறையிட்டாள். ''பதியை விட்டு உத்தரவு இல்லாமல் சதி பிரிந்து வந்தது தப்பானது. ஆகவே பதியினிடமே செல். துன்பம் யாவற்றையும் பொறுக்கவேண்டியது சதியின் கடமையாகும்'' என்று மகளைத் திருப்பி அனுப்பிவிட்டார் துவஷ்டா. சம்ஞை கணவனிடம் சென்று தனது நிழலைத் தன்போல உருவம் செய்து சாயை என்று பெயரிட்டு சூரியனுக்குப் பணிவிடை செய்ய அண்மையிலிருத்தி இருளடர்ந்த காட்டினுள் குதிரை வடிவத்துடன் புகுந்து நீண்டகாலம் தவம் செய்தாள். பரிதியும் உண்மையை அறிந்து சம்ஞையைத் தேடிப் புறப்பட்டுச் சென்றார். முடிவில் சம்ஞை இருக்குமிடமறிந்து குதிரை வடிவம் தாங்கிக் கானகத்தினுள் புகுந்தார். இருள் நீங்கியது. சம்ஞையின் தவம் முற்றுனது. இருவரும் நல்லறம் நடத்தினர். அவர்களுக்கு இரு புதல்வர் தோன்றினர். அவர்கள் இரட்டையர்கள். அழகில் மன்மதனை வென்றவர்கள். தேவர்கள் அவ்விருவரையும் வானுலகிற்கு வைத்தியர்களாகச் செய்தனர். மண்ணுலகத்தில் கானகத்தில் சியவனர் என்னும் தவச்செல்வர் நெடுங்காலம் கடுந்தவம் புரிந்து வந்தார். அவரைப் புற்றுமண் மூடிவிட்டது. அக்கானகத்திற்கு அருகில் சூரியதல மன்னன் ஒருவன் தன்மகளுடனும் பரிசனங்களுடனும் வேட்டையாட வந்து தங்கியிருந்தான். அவ்வமயம் மன்னனின் மகள் தனிமையில் உலாவி வரும்பொழுது புற்றினுள் மறைந்திருக்கும் முனிவருக்குத் தீங்கு செய்துவிட்டாள். இதனை அறிந்த தந்தை மகளின் குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினுன். முனிவரும் தங்களின் மகளை எனக்கு அர்ப்பணிப்பதே மன்னிப்பாகும் என்றுர். மன்னனும் சத்தியம் தவருது தன் மகளை அம்முனிவருக்குஅர்ப்பணித்துவிட்டுத்தன் நகரம் புகுந்தான். அரசிளங்குமாரியும் முனிவருடைய மனம் நோகாமற் பணிவிடை செய்துவரும்நாளில் அவளுக்கு அசுவினீகுமாரர்களுடைய காட்சி கிடைத்தது. தன் கணவருக்கு இளமைப் பருவம் கொடுக்க வேண்டுமென்று வேண்டினுள். அவளுடைய வேண்டுகோளுக்கிணங்கி அசுவினீகுமாரர்கள் முனிவருக்கு முதுமையை நீக்கி இளமையளித்தனர். முனிவர் அகமகிழ்ந்து வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என்றுர். அசுவினீகுமாரர்கள் ''வேள்விகளில் எங்களுக்கு உணவு கிடைக்கவேண்டும். இந்திரன் முதலியோருடன் சமபோஜனம் அளிக்க வேண்டும்'' என்று வேண்டினர். முனிவரும் வேள்வி செய்து அசுவினீ தேவர்களுக்கு வேள்வியில் அவிர்ப்பாகம் அளித்து இந்திரன் முதலியோருடன் சமபோஜனம் செய்வித்தார்.

"மா த்வா ருத்ர சுகிருதம் நமோபி மா துஷ்கிருதீ: விருஷபமாசஹூந்தி! உந்நே வீரான் அர்பயபேஷஜீபி: பிஷக்தமம் பிஷஜாம் சிருணோமி" என்பது இன்னொரு மந்திரம். ஓ பரமேசுவர, உம்மை கோபமூட்டாமலிருப்போம். உம்மை எப்பொழுதும் வணங்குவோம். உம்மை இகழமாட்டோம். வேண்டுவார் வேண்டுவதை அளிப்பவரே. உம்மை மற்றத் தேவதைகளுடன் சமமாக வைத்து வணங்கமாட்டோம். பல வகை உணவுகளுடன் வீரம்வாய்ந்த மக்களை எங்களுக்கு அளிப்பீராக. உடலுக்கு வைத்தியம்செய்யப் பலருண்டு. அவர்கள் எல்லோரையும் விடப் பெரும்வைத்தியராகத் தாங்கள் விளங்குகிறீர்கள் என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். பிறவிப் பிணியை நீக்கி வைப்பவர் தாங்கள் ஒருவரே" என்பது இதன் பொருளாகும். இதில் சில விஷயங்களை நாம் ஆன்றிக் கவனிக்கவேண்டும். பரமேசுவரனுக்கு கோபமூட்டுவதனால் வரும் குற்றம் என்னை? இகழ்வதனால் வரும் இழுக்குத்தான் என்னை? மற்றைய கடவுளருடன் சமமாகக் கருதுவதனால் வரும் தீமை என்ன? இவைகளை நாம் தெளிவுபடுத்தவேண்டுமானால் புராணங்களையே சரணடையவேண்டும். பிரஜாபதி என்ற பட்டம் பெற்ற தக்கன் என்பவன் சிவபிரானை மதியாது வேள்வி ஒன்றைச் செய்யத் தொடங்கினன். அவருக்குக் கோபமுண்டாயிற்று. ஏனைய முனிவர்கள் சிவபெருமானை அழைக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால் தக்கன் அவர்களை இகழ்ந்தான். அதனால் அறிவிழந்தான். சிவபெருமான் இருக்கவேண்டிய இடத்தில் வேறொருவரைத் தலைவராக வைத்து வேள்வியைத் தொடங்கி நடாத்தினன். அதனால் நிலையிழந்தான். பின் குற்றமுணர்ந்து அவரைப் போற்றினன். கணத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டான். வேதமந்திரங்களின் கருத்தைப் புராணம் தெட்டத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

"யம்ஸ்ம பிருச்சதி குஹ இதி கோரம் உத ஈம் ஆஹு: ந ஏஷோ அஸ்தீத ஏகம்". இந்திரன் என்பவன் எங்கே இருக்கிறான், அப்படிப்பட்டவன் ஒருவன் இல்லையென்று சிலர் நாத்திகவாதம் பேசுகின்றார்களல்லவா? அப்படிப்பட்ட இந்திரனைத் தேடிக்கொண்டுதானே நீங்கள் வந்திருக்கிறீர்கள்? என்றார். நாத்திகவாதத்தின் விளக்கத்தையும் புராணம் கொண்டுதான் அறியலாம். அதனால்வருந் தீமையையும் புராணம் மூலமாகத்தான் அறியலாம்.

இரணியாக்ஷன் என்ற அரக்கன் பலமுறை தண்டித்தும் தன் மகன் பிரகலாதன் நாராயண என்னும் நாமத்தை இடைவிடாதுச்சரிப்பதைக் கேட்டு அளவிலாச் சினம் கொண்டு "உன் நாராயணன் எப்படி இருப்பான்? அவனுக்கும் இருக்க இடம் உண்டா? அவன் எப்படிப்பட்டவன்?" என்று பலமாக நாத்திகம்

பேசினன். அப்பொழுது மைந்தன் பிரகலாதன் பணிவுடன் கூறினன்: ''நாராயணன் அடியார்களுக்கு ஆபத்து வரும் நேரம் உதவி புரிபவன். கருணை உள்ளம் உடையவன். எங்கும் நிறைந்தவன்'' என்ருன். மேலும் இரணியன் அதிகம் கோபம் கொண்டு ''அங்ஙனமாயின் இவ்அத்தாணி மண்டபத் தூணிலும் உறைவானே?'' என்று கேட்டான். பிரகலாதனும் அவன் வியாபியாத இடமில்லை என்ருன். அவனை இப்பொழுதே அழித்துவிடுகிறேன் என்று கூறி இரணியன் தூணை உதைத்தான். தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி வெளிவந்தது. நாத்திகவாதியின் நாவை அடக்கியது. இரணியன் தான்பெற்ற தவச்செல்வங்களை இழந்தான். நாத்திகவாதியின் தன்மை, நாத்திகவாதிக்குக் கிடைக்கும் பயன் இரண்டையும் நாம் புராணம் மூலம் அறியக்கூடியதாக அமைந்துள்ளது.

யசுர்வேதத்தில் ஒரு மந்திரம் உள்ளது.

''கேவலாகோ பவதி கேவலாதீ''

உணவைத் தனக்காகவே சமைத்துத் தான் மட்டிலும் உண்பவன் (விருந்தினர்க்கும் தெய்வத்திற்கும் கொடாதவன்) முழுப்பாவியாகின்ருன் என்பது இதன் கருத்தாகும்.

பாவம் செய்பவர் எத்தன்மையான பாவத்தைச் செய்திடினும் அதற்குப் பரிகாரமுண்டு. பரிகாரங்களால் நீக்கமுடியாத பாபம் என்று இங்கே கருதப்பட்டிருப்பது ஆண்டவனுல் அளிக்கப்பட்டுள்ள உணவை மற்ற ஆன்மாக்களுக்கும் கொடுத்து ஆண்டவனுக்கும் அர்ப்பித்து நன்றிப்பெருக்கைக் காண்பிப்பது நமது கடமையாகும். ''நன்றி மறப்பது நன்றன்று'' என்றும் ''எந் நன்றி கொன்ருர்க்கும் உய்வுண்டு செய்நன்றி கொன்ருர்க்கு உய்வில்லை'' என்றும் வள்ளுவர் கூறிய வாக்கு இதனை உறுதிப்படுத்துகின்றது. செய்நன்றி மறப்பது மிகக் கொடிய பாவம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது இந்த மந்திரம்.

ஒரு சமயம் துர்வாச முனிவர் துரியோதனன் சபைக்கு எழுந்தருளினர். துரியோதனன் அவரைத் தக்கபடி மரியாதை செய்து உபசரித்தான். துர்வாசர் அகமகிழ்ந்து உனக்கு வேண்டிய விருப்பத்தைக் கேள் என்று கூறினர். வஞ்ச எண்ணம் கொண்ட துரியோதனன் ''முனிசிரேட்டரே, என்னிடம் வந்து உபசாரம்பெற்றதுபோல என் சகோதரர் வனத்தில் வாழும் ஐவரிடமும் சென்று உபசாரம் பெற்று அவர்களுக்கும் ஆசி கூறவேண்டும் என்று கேட்டுக் கொண்டான். மறுநாள் துர்வாசமுனிவர் பாண்டவர்வசிக்கும் கானகம் சென்ருர். அங்கே தருமர், தன்னுடன் கூடவாழும் முனிவர்களுக்குத் தினமும் நான் எவ்வாறு உணவளிப்பேன் என்று மனம்நொந்து சூரியனைத் துதித்தார். சூரியன் அட்சயபாத்திரம் ஒன்றை அளித்தார். அதிலிருந்து பெறும்

உணவினால் தனது விருந்தினர்களை உபசரித்து வந்தார்.

யாவரும் உண்டு இளைப்பாறும் நேரம் துர்வாசமுனிவர் சென்றார். தர்மர் அவரை வரவேற்று நன்கு உபசரித்தார். துர்வாசரும் நீராடி வருகிறேன் என்று கூறிக் கங்கைக்குச் சென்றார். தர்மர் தர்மபத்நியை அழைத்து துர்வாசரின் வருகையைத் தெரிவித்தார். நீராடச் சென்றிருக்கின்றார், உணவருந்த வருவார் என்றும் தெரியப்படுத்தினார். ''கிருஷ்ணா! இது என்ன சோதனை. யாவருக்கும் உணவளித்து அட்சய பாத்திரம் சுத்தப்படுத்தப்பட்டுவிட்டதே! என்ன செய்யலாம்?, துர்வாசரின் சாபத்திற்கு நாம் ஆளாக வேண்டும் போலும். கிருஷ்ணா, நீ தான் தஞ்சம்'' என்று எண்ணி துரௌபதி கண்ணனைச் சரண்புகுந்தாள். கண்ணன் முன் தோன்றினான். ''ஏன் கவலை அடைகிறாய்? நீ வைத்த பாத்திரத்தில் ஒரு பருக்கையாவது மீதம் இருக்கும். அதை என் கையில் போட்டு ஒரு துளி தண்ணீர் விடு. கிருஷ்ணார்ப்பணம் என்று கூறு'' என்று கண்ணன் கூறியதும் துரௌபதி அவ்வாறே செய்தாள். கண்ணன் அந்தப் பருக்கையை உட்கொண்டான். அதனால் துருவாச முனிவரின் வயிறும் நிரம்பியது. துர்வாசமுனிவர் தர்மரை அடைந்து ''என்பசி நீங்கிவிட்டது. தர்மம் வெல்லும் அதர்மம் அழியும். உனக்கு சகல நன்மைகளும் உண்டாகும்'' என்று ஆசி கூறித் திரும்பிச் சென்றார். பாண்டவர் தமக்குக் கிடைத்த உணவை விருந்தினர்க்கும் கொடுத்து வந்தார்கள். முடிவில் கடவுளுக்கு அர்ப்பணம் செய்து நற்பயனைப் பெற்றார்கள்.

முற்கூறிய மந்திரத்தின் கருத்துக்கு நல்லவிரிவுரையாக வியாசர் இயற்றிய புராண இதிகாசங்கள் அமைந்துள்ளன. ஆகவே வைதிக சைவசமயத்தவர் யாவருக்கும் இன்றியமையாதவைகளாய் வேதங்களும் அவற்றிற்கு விரிவுரையாகப் புராண இதிகாசங்களும் அமைந்துள்ளன என்பது விளங்குகின்றது.

பூதங்கள் ஐந்து. அவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், இவைகளுக்குத் தோற்றுவாயாக உள்ளதை பரமாகாசம், மகாபூதம் என்று வழங்குவார்கள். அந்த மகாபூதம் பரமேசுவரன் ஆவார். அவருடைய மூச்சுக் காற்று நான்கு வேதங்களும் புராணங்களும் என்று பிரகதாரண்ய உபநிடதம் கூறுகின்றது.

''அஸ்ய மகாபூதஸ்ய நிஸ்வஸிதமேதத் ருக்வேதோ யஜுர்வேதஸ் ஸாமவேத: அதர்வாங்கீரச இதிகாச புராண வித்யா: உபநிஷத:.''

ஆகவே வேதபுராணங்களை இகழுபவர் பரமேசுவரனுடைய மூச்சுக் காற்றுக்குத் தடைசெய்பவராவார். உறுப்புக்களுக்கு ஊனம் செய்தால் சிறிய குற்றம். உயிருக்கு ஊனம் செய்தால் பெரும் குற்றம் ஆகும். ஆகவே நாமெல்லோரும் பெரும் குற்றத்திற்கு ஆளாகாது பரமபதியின் மூச்சுக்காற்றைப் பேணிவளர்ப்போமாக. இதனை வகுத்துத்தந்த பெரியார் வியாசபகவானை நினைவு கூர்ந்து பரம்பொருளின் பேரருளுக்குத் தகுதியாவோமாக.

சுபம்.

# பாரமேசுவர தத்துவம்

அங்கிங்கெனுதபடி எங்கும் பரந்து விளங்கும் பரமேசுவரனின் உண்மைக் கருத்துக்களை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பரமேசுரன் மைந்தனுன குமாரக் கடவுளின் தத்துவத்தை எடுத்து விளக்குவதாயும் இக் கட்டுரை அமையும்.

இரு கருத்துக்களையும் விளக்கும் ஒரே சொல்லாகிய பரமேசுவரத் தத்துவம் என்ற தலைப்புப் பெயருடன் இக்கட்டுரை அமைந்துள்ளது. சிவனும் முருகனும் ஒன்று. அபின்னமானவர் என்பதை விளக்கப்போகும் இக்கட்டுரைக்கு முகப்புப் பெயர் இவ்வாறு அமைந்தது பொருத்தமே. முருகனும் சிவனும் என்று கூறி வணங்கும் வணங்கும் ஒரு மெய்யன்பரின் வணக்கத்தை எடுத்துக் காட்டாது எவ்வாறு கட்டுரையை விவரிக்க முடியும்.

''ஏமநாயகன் ஏர்மறைநாயகன்
சேமநாயகன் தேவர்கணுபகன்
ஆமென்ஞயகன் அறுமுகச் சிவன்
பூமலர்ச் சரண போற்றி.

இந்த வணக்கத்தில் ஆறுமுகச் சிவன் என்ற ஒரே சொல் இரு கருத்துக்களையும் விளக்குவதாக அமைந்துள்ளது. ஆறுமுகத்தை அடைமொழியாகக்கொண்டு ஆறு முகங்களுடைய சிவபெருமான் என்னுங் கருத்து வெளிப்படையாகத் தெரிகின்றது.

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பனவற்ருேடு அதோமுகமும் சேர்ந்து ஆறு முகங்களுடன் இறைவன் விளங்குகின்ருன் என்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆறு முகங்கள் பொருந்திய முருகனுகிற சிவன் என்று உருவகமாகவும் கருத்துக் கொள்ளலாம். சிவனும் முருகனும் பேதமற்றவர் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு இவ் வணக்கம் செலுத்தப்பட்டிருக்கின்றது.

## இருவரும் ஒருவரே

''திசோ தச'' என்று தைத்திரீயாருண சாகையில் ஒரு வசனம் கூறப்பட்டிருக்கின்றது. அதன் கருத்து இறைவன் பத்து திசைகளையும் நோக்கியிருக்கின்ருர் என்பதாகும். கிழக்கு தெற்கு வடக்கு மேற்கு என்ற நான்கு பெருந் திசைகளை நோக்கி விளங்கும் இறைவனுடைய முகங்கள், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்று பெயர்பெறும்.

நான்கு கோண திசைகளும் நான்கு பெருந் திசைகளில் அடங்கிவிடு மாதலால் எண் திசைகளை நோக்கி நான்கு முகங்களும் அமைந்துள்ளன வாகும். மேல்நோக்கிய ஈசானமுக மும் கீழ் நோக்கிய அதோமுகமும் சேர்ந்து ஆறு முகங்களும் பத்துத் திசைகளில் விளங்குகின்றன என்ற கருத்தை வேதம் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றது. பத்துத் திசைகளை நோக்கி விளங்கும் ஆறு முகங்களும் பூரணத்துவம் பெற்றுப் பொலிவுடன் விளங்குகின்றன. யசுர்வேத முக்திகோப நிஷதத்தில் பின்வரும் வாக்கியம் காணப்படு கின்றது.

''ஊர்த்துவ பூர்ணம்அத: பூர்ணம்
மத்திய பூர்ணம் சிவாத்மகம்''

சிவஸ்வரூபம் மேலும் கீழும் நடு விலும் பூரணப் பொலிவுடன் விளங்கு கின்றது என்பது பொருளாகும். ஆகவே எத்திசையிலிருந்து வழிபட்டாலும் அந்த வணக்கம் பூரணத் துவம் பெறும். இக்கருத்தை அடிப் படையாகக்கொண்டு மெய்யடியார் ஒருவர் முருகனைக் குறித்து, ''ஓம் முருகா, பத்து திசைகளில் நின்று தரிசிக்கவரும் அடியார்களுக்குத் திரு வருள் செய்யத் திருவுள்ளம்கொண்டு கருணை பொழியும் ஆறு முகங்க ளுடன் நீ காட்சி தருகின்றாய் அல் லவா'' என்று போற்றிப் புகழ்ந்து பாடியிருக்கின்றார். ஸ்காந்த புரா ணம் சம்பவ காண்டத்தில் பின் வரும் பாட்டு காணப்படுகின்றது.

''த்வன்மயோ மன்மயோ யஸ்மாத்
ஷட்வக்த்ர: பரிகீர்த்தித:''

உனது சொரூபமும் எமது சொரூபமும் சேர்ந்து உருவாகியதே ஆறுமுகன் வடிவமாகும் என்று உமையம்மையாரைப் பார்த்து சிவ பெருமான் கூறியுள்ளார். சிவசக்தி யின் ஐக்கிய ரூபமாக முருகன் விளங்குகின்றான் என்பது இந்த வச னத்தால் அறியக் கிடக்கின்றது. பாட்டில் எமது வடிவமும் உனது வடிவமும் என்று கூறாமல் உனது வடிவமும் எமது வடிவமும் சேர்ந்து என்று அமைந்துள்ள சொல் ஒழுங்கு முறை — அமைப்பு — சக்தி தத்துவம் வெளிப்படையாகவும் சிவதத்துவம் மறைவாகவும் ஐக்கியப்பட்டு முருக னிடம் அமைந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. ''சக்தி தரன்'' என்று பெயர் தாங்கி ஞான சக்தியாகிய வேலாயுதத்தை வலக் கையிலணிந்து காணப்படுவதே இதற்குச் சான்றாகும். அவுணரின் அட்டூழியத்தால் அவதியுறும் அம ரர்களுக்கு அருள்பாலித்து அபய மளித்து அசுரரை அழித்து முடிவில் இன்ப வாழ்வை முருகன் அருளினார். இந்நிகழ்ச்சி மூலமாகவும் சக்தி தத் துவம் வெளிப்படையாக நின்று திருவருள் பாலிக்க, சிவ தத்துவம் மறைந்து நின்று இன்ப வாழ்வை அளித்திருக்கின்றது என்பதை நாம் அறியலாம். ஆறுமுகப் பெருமான் திருஉருவ அமைப்பிலும் சக்தி தத் துவம் வெளிப்படையாக அமைந் துள்ளதைக் காணலாம்.

ஆறு முகங்களும் ஆறு மதத்தின் ஐக்கியத்தை உணர்த்துகின்றன. கணபதி, சூரியன், விஷ்ணு, சக்தி, சிவம், குமாரன் என்ற ஆறு உருவத் திருமேனிகளுக்குரிய ஆயுதங்கள் ஆறுமுகப் பெருமானிடம் பொருந்தியிருக்கின்றன. கணபதிக்குரிய ஆயுதம் பாசமும் அங்குசமுமாகும். சூரியனுக்குரிய ஆயுதம் கத்தியும் கேடயமுமாகும். விஷ்ணுவுக்குரிய ஆயுதம் சக்கிரமும் சாரங்கம் என்னும் வில்லுமாகும். சிவனுக்குரிய ஆயுதம் சூலமும் வச்சிரமுமாகும். முருகனுக்குரிய ஆயுதம் சக்தியும் குக்குடமுமாகும். இவ்வாறு பத்துக் கைகளிலும் இவ்வாயுதங்கள் விளங்குகின்றன. சக்திக்குரிய ஆயுதம் அன்புகாட்டி அபயமளித்து அருள் பாலித்தலாகும். அதுவே பிரதான முகத்திற்குரிய ஆயுதமாக அமைந்துள்ளது. இக்கருத்தையே ஆறுமுகப் பெருமானின் தியான சுலோகம் தெளிவுபடுத்துகின்றது. தியான சுலோகத்தின் முடிவில் ''சிவசுதம் ஸ்கந்தம் சுராராதிதம்'' என்ற வாக்கியம் அமைந்துள்ளது. சகல தேவர்களாலும் ஆராதிக்கப்பட்டு விரும்பியதை அளிக்கும் சிவகுமாரனுகிய கந்தனைத் தியானிக்கக் கடவன் என்பது இதன் கருத்தாகும்.

சு என்ற வினையடிக்கு வெளிவருதல் என்று கருத்தாகும். சிவம் என்ற பெரும் ஜோதியிலிருந்து வெளிவந்த (ஸ்கன்னமாகிய) சிறுபொறியாகிய கந்தவேளைத் தியானிக் கடவன் என்றும் விளக்கம் கூறலாம். இந்த வாக்கியம் சிவாபின்னன் முருகன் என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. பிரவணப்பொருள் தெரியாது விழித்த பிரமனைத் தலையிற் குட்டிச் சிறையிலடைத்த செயலும் முருகனிடம் சக்தி தத்துவம் வெளிப்படையாக நிற்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. அன்றொருநாள் பரமபதிக்கு ஐந்து தலை; பிரஜாபதியாகிய (மக்களைப் படைப்பவர்) எனக்கும் ஐந்து தலை என்று கருதி அயன் இறுமாப்படைந்து கைலாயம் சென்று இறைவனை வணங்காது நின்ருர். பரமபதியாகிய சிவபெருமான் அயனின் ஆணவத்தை ஒடுக்க மேல்நோக்கிய ஈசானமாகிய தலையை விரலால் புல்லைக் கிள்ளி எடுப்பதுபோலக் கொய்து கையில் தாங்கினுர். மற்ருெருநாள், நான்முகன் தேவர்களுடன் தேவதேவனைத் தரிசிக்கக் கைலாயம் சென்ருர். கைலாயத்தின் கோபுர வாயிலில் வீற்றிருக்கும் முருகப் பெருமானை தேவர் யாவரும் தலை வணங்கி ஆலயத்தினுட் புகுந்தனர். நான்முகன் ஆறுமுகனைச் சிறு பாலகன்தானே என்று கருதி, சிவாபின்னன் முருகன் என்பதனை உணராமல், அச்சிறுவனை வணங்குவது தன் தகுதிக்கு ஏற்றதன்று என்று கருதி, மௌனமாக ஆலயத்தினுட் புகுந்தார். முருகப்பெருமான் அயனை அழைத்து ஆசனத்திலமர்த்தி பிரவணப் பொருளை வினவினுர். கருத்து விளங்காது பிரமா விழித்தார். அப்பொழுது முருகப் பெருமானிடம் சக்தி தத்துவம் வெளிப்

படையாக நின்று தத்புருஷம் என்னும் கிழக்கு நோக்கிய தலையை தந்தை செய்தது போலச் செய்யாமல் குட்டிச் சுட்டிக் காட்டியருளியமை, எமது ஐயன் அறிந்தால் தத்புருஷம் என்னும் இத்தலைக்கும் ஆபத்து வருமல்லவோ என்பதை உணர்த்தாமல் உணர்த்தியுள்ளது.

கைலாயம் வந்து தரிசிப்பவர்ருக்கு மலபந்தம் கிடையாது. அறியாமல் அயனிடம் வந்து புகுந்த ஆணவ மலத்தை அருட் கரத்தால் குட்டி நீக்கியருளினர். பின் மறைவாய் நின்ற சிவ தத்துவம் பிரமனுக்குப் பழைய பதவியை அளித்தது. குற்றம் செய்தவரையும் திருவருள் காட்டி மன்னித்துப் பின் நல்ல பதவியையளிப்பார் என்பதை இந்தச் சரிதம் எடுத்துக் காட்டுகின்றது.

## குகன்

முருகப் பெருமானுக்கு குகன் என்னும் ஒரு சிறப்புப்பெயர் உண்டு. அப்பெயர் சிவாபின்னம் என்பதை வலியுறுத்துகின்றது. குகன் என்பதன் வினையடிக்கு மறைவு என்று கருத்தாகும். அதிலிருந்து வந்த சொல் குகை என்பதாகும். மறைவான இடம் என்பதே அதன் பொருள். அணுவுக்குள் அணுவாயும் மஹத்தினுள் மஹத்தாயும் விளங்கும் பரமான்மாவாகிய சிவம், சகல சீவராசிகளின் குகையில் (மறைவான இடத்தில்) மறைந்து நிற்கின்றது என்று தைத்திரீய ஆரண்யசாகை கூறுகின்றது. பரமாத்ம சொரூபம் எத்தகையது என்று விளக்கும் பொழுது நிஷ்களமானது சரிநிகரான இரண்டாவது பொருளற்றது, சகல சீவர்களின் குகையில் மறைந்து நிற்பது என்று யசுர்வேத கைவல்யம் கூறுகின்றது. பரம் பொருளாகிய சிவம் ஆன்மாக்களின் இருதய குகைகளில் உறைகின்றது என்று யஜுர்வேத தைத்திரீயம் கூறுகின்றது. குகையில் மறைந்து நிற் நம் பரமபதிக்கு குகன் என்று இடப்பெயர் வழங்கலாற்று. வேதாந்தநூல்களிற் இருதயாகாசம் குகையென்று கூறப்படுகின்றது. அக்குகையில் உறைவதால் குகன் என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்முன் என்று ஸ்காந்த புராணம் சம்பவகாண்டத்தில் கூறப்படுகிறது. குகன் என்ற சொல் உபநிடதங்களில் சிவத்தைக் குறிப்பதாக அமைந்துள்ளது ஸ்காந்தபுராணத்தில் முருகனைக் குறிப்பதாக சிவன் உமையம்மைபருக்கு கூறுகின்முர். இவ்விரண்டையும் ஆராயும் பொழுது பிரித்துக்காணும் நிலையில் (யோகநிலையில்) குகன் என்ற சொல் சிவத்தைக் குறிப்பதாகும். பிரித்தும் சுட்டியும் காணும் நிலையில் (யோக ரூடி நிலையில்) குகன் என்ற சொல் சிறப்பாக முருகனையே குறிக்கின்றது, குகன் என்ற சொல்லைக் கேட்டவுடன் உள்ளத்தில் முருகனுடைய தோற்றம் உருவாகின்றது. அவ்வளவு (ரூடியாக) சுட்டிக் காட்டப்படும் பொருளாக அமைந்து விட்டது. சிவா பின்னமே முருகன் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்? சிவலிங்கம் (சிவன்) சாளக்

கிராமம் (விஷ்ணு) சோணலிங்கம் (கணபதி) மரகதப்பச்சை (தேவி) ஸ்படிகக்கல் (சூரியன்) என்ற பாவனையில் ஐந்து மூர்த்திகளை வணங்கி வரும் அந்தணப் பெரியார்கள் முருகனைத் தனியாகப் பிரியாமல் சிவலிங்கத்திலேயே முருகனைப் பாவித்து வணங்கி வருவதைக் காணலாம்.

முருகனுடைய அர்ச்சனையில் ஒன்று குஹா ப்ரியாயநம: என்று உள்ளது. வள்ளியினிடத்தில் விருப்பமுடைய கந்தனுக்கு வணக்கம் என்பதே அதன் கருத்தாகும். இது வெளிப்படையான கருத்து. சகல ஜீவான்மாக்களின் இருதய குகையில் வசிப்பதில் விருப்பமுடைய முருகனுக்கு வணக்கம் என்பதே விசேட கருத்தாகும்.

தெய்வயானை அம்மையாரை விதி முறைப்படி தேவர்கள் முருகனுக்குத் திருமணம் செய்வித்தனர். சதி பதியினிடம் சென்றாள். இங்கு விரும்புகின்றவர் தெய்வயானை அம்மையார். விரும்பப்படுகின்றவர் முருகப் பெருமான். ஆனால் வள்ளியை விரும்பிச் சென்று மணம் முடித்தார். ஆகவே விரும்புகின்றவர் முருகன். விரும்பப்படுபவர் வள்ளியம்மையானார். முருகனுக்கு விருப்பமான இடம் சகல சீவராசிகளின் இருதய குகை என்பதை உபநிடதங்கள் மூலம் அறிந்தோம். ஆகவே வள்ளியம்மையாருக்கு குஹா என்ற பெயர் வழங்கப்பட்டது மிகப் பொருத்தமானதே. குஹா வடிவமான வள்ளியம்மையாரிடம் விருப்பமுடையவன் முருகன் என்பது மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது.

## சிவாபின்னன் முருகன்

சிவன் வேறு முருகன் வேறல்ல. இருவரும் ஒருவரே இந்த உண்மையை உபநிடதவாக்கியங்கள் கொண்டு நாம் அறியலாம்.

''பூர்ணமத: பூர்ணமிதம்
பூர்ணாத் பூர்ண முதச்யதே''.
பூர்ணஸ்ய பூர்ணமாதாய
பூர்ணமேவாவ சிஷ்யதே.

இது உபநிடத மங்கல பாடத்திலுள்ளது. அது என்பதனால் சுட்டிக் காட்டப்படும் சிவம் பூர்ணப் பொருளாகும். அந்தப் பூர்ணப் பொருளிலிருந்து தோன்றிய சிறு பொறியே இது என்று சுட்டிக்காட்டப்படும் முருகன் ஆகும். இந்த முருகனும் பூரணப் பொருளாகும்.

ஆகவே பூர்ணமான சிவஜோதியிலிருந்து வெளிவந்த குகஜோதியும் பூர்ணமானதே. பூரணமான சிவஜோதியிலிருந்து குகஜோதி வெளிவந்தும் சிவஜோதி குறைவுபடவில்லை. சிறு பொறியாக வந்த குகஜோதியும் குறைவுபடவில்லை. இரண்டிலும் எஞ்சி நிற்பது பூரணத்துவமே என்பது இதன் கருத்தாகும். இந்த வாக்கியத்தின் மூலம் சிவாபின்னம் முருகன் என்று தெளிவாகக் கிடைக்கின்றது. பின்வரும் கதையும் இக் கருத்தைத் தெளிவுபடுத்துகின்றது.

பிரமனைச் சிறையிலடைத்து படைப்புத் தொழிலை முருகன்தானே செய்யத் தொடங்குகிறான். இறைவன் முருகனிடம் வந்து யாவையும்

அறிந்த உனக்குப் பிரணவப்பொருள் தெரியுமாயின் அதனைக் கூறுவாய் என்று இயம்பினார். முருகன் விநயத்துடன் பதிலுரைத்தான். "அன்னைக்குத் தாங்கள் பிரணவப்பொருளை உபதேசிக்கும்பொழுது அன்னையின் மடியிலிருந்து யாவையும் கேட்டறிந்தேன். அன்னை முறையாக நின்று கேட்டது போலத் தாங்களும் கேட்பதாயின் அறிந்த பிரணவப் பொருளை கூறுவேன்" என்றார். அங்ஙனமே யாகுக என்று கூறிக் குருவின் முன் மாணவன் நிற்பதுபோல நின்று இறைவன் முருகன் கூறிய பிரணவப் பொருளைக்கேட்டு மகிழ்ந்தார்.

இறைவன் பிரணவப் பொருளை அறியாது முருகனிடமிருந்து அறிந்து கொண்டதல்ல. பூரணமான சிவத்திடமிருந்து தோன்றிய முருகப் பெருமானுக்குப் பூரணத்துவத்தை விளக்குவதே இக்கதையின் சாரமாகும். உலக சமுதாயம் ஜன்யன் ஜனகன் என்றும், அநுக்கிராஹ்யன் அநுக்கிராஹகன் என்றும், சிக்ஷ்யன் சிக்ஷகன் என்றும் தொடர்பு கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றது. பிறக்கின்றவன் பிறப்பிக்கின்றவன் அருளுபவன் அருளப்படுபவன் கற்பிக்கின்றவன் கற்பிக்கப்படுபவன் என்ற தொடர்பிலேயே உலகம் அமைந்துள்ளது. தந்தையின் மூலம் மகன் பிறப்பை அடைகின்றான். மகன் ஜன்யன்; தந்தை ஜனகனுவான். காலஞ்செல்ல, மகன் மக்களைப் பெற்றுத் தந்தையாகின்றான். உபதேசிப்பவர் மூலம் உபதேசத்தைப் பெறுகின்றான். பெறுபவன் உபதேசியன்; கொடுப்பவன் உபதேசகன் ஆவான். உபதேசத்தைப் பெற்றவன் சிறிது காலம் செல்லப் பிறருக்கு உபதேசிக்கின்றான். அப்பொழுது அவன் உபதேசகன் ஆகின்றான். இவ்வாறு சங்கிலித் தொடர்பு கொண்டு உலகம் அமைந்துள்ளது. உபதேசம் பெறுபவன் உபதேச்யன் என்று பெயர் பெற்று, பிறருக்கு உபதேசிக்கும்பொழுது உபதேசகன் என்று பெயர் பெறுகின்றான். ஆனால், தனக்கு உபதேசம் செய்த குருவுக்கு எப்பொழுதும் இவன் மாணவன் தான். இந்தக் குறைபாடு சகல ஜீவ ராசிகளிடமும் காணப்படும். இந்தக் குறைபாட்டை நீக்கி முருகப் பெருமானுக்குப் பூரணத்துவத்தை அளிப்பதற்காகவே இறைவன், மாணவர் போல நின்று கேட்டு முருகனை உபதேசகனுக்கும் உபதேசம் செய்பவனுக விளக்கினார். இறைவன் இப்பொழுது உபதேசமளிப்பவராகவும் உபதேசம் பெறுபவராகவும் ஆனார். "உபதேச்ய உபதேசகபாவ சம்பந்தம்" என்று வடமொழியில் கூறுவார்கள். பூரணத்துவத்தை முருகனுக்கு அளிப்பதின் நிமித்தமாகவே இந்த நாடகம் நடந்தது. எவ்வளவு அழகாக இந்த உண்மையை நடித்துக்காட்டியிருக்கிறார்கள்!

## முருகன் ஞான வடிவமானவன்

பின்வரும் கதையின் மூலம் இந்த உண்மை தெளிவாக விளங்கும். சுர முனிவர் நாரதர் மாங்கனி ஒன்றைப் பெற்றார். அதனை இறைவனுக்கு

அர்ப்பணிக்க வேண்டுமென்று கருதிக் கைலாயம் சென்றார். சக்தி தத்துவத்தை வெளிப்படையாகக் கொண்டுள்ள முருகப்பெருமான் அன்னையின் அருகிலமர்ந்திருக்கச் சிவ பெருமானுடன் இணைந்து நிற்கும் விநாயகப் பெருமான் ஐயனின் அருகிலிருக்கத் தேவனும் தேவியும் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கோலம் கண்டு அகமகிழ்ந்து அடிபணிந்து ஐயனின் கையில் அக்கனியை அன்பளிப்பாக அளித்தார். கனியைக் கண்ட பாலகர் இருவரும் தந்தையின் முன் சென்றனர். ஐயன் புன்முறுவல் செய்து "நாரதா, ஒரு கனியைத் தந்து பேதத்தை உண்டாக்கிவிட்டாயே!" என்று கூறினார். "ஐயனே, தாங்கள் அறியாததா? இக்கனி மூலம் உலகத்திற்கு ஓர் உண்மையை வெளிப்படுத்துவீர்கள் என்று கருதியே இக்கனியை இங்கு கொண்டுவந்தேன்" என்று நாரதர் கூறினார். பரமன் திருவுளங் கொண்டார். பழத்தைப் பங்கிட்டுக் கொடுக்காமல் பந்தயம் வைத்தார். "குழந்தைகாள், இவ்வுலகத்தைச் சுற்றிக்கொண்டு முதலில் எவர் வருகின்றாரோ அவருக்கே இக்கனி" என்று கூறினார். இருவருள் இளையவராகிய முருகப்பெருமான் உலகம் சுற்றப் புறப்பட்டு விட்டார். மூத்தவன் ஆறுதலாக எழுந்து ஐயனையும் அம்மையையும் மும்முறை வலம் வந்து வணங்கி "உலகம் முழுவதும் தங்களிடம் அடங்கியுள்ளதன்றோ! தங்களை வலம் வருவது உலகத்தையே வலம்வருவதற்கு சமமாகும்" என்று விநாயகப் பெருமான் விளக்கங் கூறிக் கனியைப் பெற்றுக்கொண்டார். இங்கே இருவருடையசெயலும் உலகத்திற்கு ஒரு பெரும் உண்மையை விளக்குகின்றது. முருகன், இறைவனிடம் யாவும் அடங்கியுள்ளது என்பதை அறியாதவரல்ல. ஆயினும் உலக மக்களுக்கு ஓர் உண்மையை விளக்கவே உலகம் சுற்றிக் காட்டினார். உலகத்தையே தந்தையாகக்கருதி வலம்வரப் புறப்பட்டார். ஒவ்வொருவரும் முதலில் அறிந்து கொள்ள வேண்டியது, உலகத்தையே இறைவன் சொரூபமாகக் காண வேண்டும் என்பது. அதன் அநுபவ ஞானம் முதிர்ச்சி பெற இறைவனில் உலகத்தைக் காணலாம் என்பதையே விநாயகப் பெருமான் காட்டியருளினார்.

தச்சனொருவன் அழகிய ஒரு வைரமரத்தைக் கண்டவுடன் யானையின் உருவம் அமைக்கலாம் என்று கருதுகின்றான். கண்ணுக்குத் தெரிவது மரம். அதனுள் மறைந்து நிற்பது யானை. பின் தன் அநுபவஞானம் கொண்டு யானை யுருவம் அமைத்து விடுகின்றான். யானை உருவமாகியபின் மரத்தைக் காணவில்லை. மரம் அதனுள் மறைந்து விடுகின்றது. இந்த உண்மையையே,

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதற் பூதம்

எனத் திருமூலர் திருமந்திரம் கூறுகின்றது. விநாயகப் பெருமான் கனியைப் பெற்றுவிட்டார் என்பதை உணர்ந்த

முருகன் ஆண்டிக்கோலம் தாங்கி மலையில் தங்கி விடுகின்றான். இறைவனும் இறைவியும் சென்று ''நீ ஞானப்பழம் அல்லவோ? சகல ஜீவர்களுக்கும் ஞானக்கனியை அளிக்கும் வல்லமை உனக்கல்லவோ இருக்கின்றது?'' என்று மைந்தனின் சினத்தை ஆற்றினார். இந்த நாடகத்திலும் ஒருண்மை காட்டப்பட்டது. விநாயகப் பெருமான் வேதமந்திர சொரூபியாக விளங்குகின்றான். ''யோ வேதாதௌ ஸ்வர: ப்ரோக்த:'' என்ற வேதவாக்கியம் நான்கு வேதங்களுக்கும் ஆதியில் பிரணவம் அமைந்துள்ளது என்பதைக் கூறுகின்றது. அந்தப் பிரணவ வடிவந்தாங்கிக் காட்சி தருகின்றான் விநாயகப் பெருமான். ஆகவே விநாயகப் பெருமான் வேத மந்திர சொரூபியாகின்றான்.

சொல்லும் பொருளும் போல சிவசக்திகள் ஐக்கியப்பட்டுள்ளன. (வாகர்த்தாவிவ ஸம்ப்ருக்தௌ) என்று ஒரு தெய்வீகப்புலவன் கூறுகின்றான். இதில் சொல் சக்தி. பொருள் சிவம். சொல் வடிவமான சக்தியில் நின்று உதித்தவர் விநாயகப் பெருமான். ஆகவே விநாயகப் பெருமான் வேதமந்திர சொரூபி என்று கூறுவதும் மிகப் பொருத்தமே. பாரதம் ராமாயணம் இவ்விரண்டும் இதிஹாசம் என்று யாவரும் அறிந்ததே. பாரத: பஞ்சமோ வேத: (பாரதம் ஐந்தாம் வேதம்) என்று சான்றோர் வாக்குக் காணப்படுகின்றது. அதன் காரணம் வேதமந்திர சொரூபியாகிய விநாயகப்பெருமானால் பாரதம் வரையப்பட்டது. எழுதாமறையினால் எழுதிய மறை வெளியிடப்பட்டது. விநாயகப் பெருமான் வேதமந்திர சொரூபி என்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது. அந்த வேத மந்திரத்தின் பொருள்தான் இறைவன். மணிவாசகப் பெருமான் திருவாசகம் எழுதிமுடித்த சமயம், இதன் பொருள் யாதென்று தில்லைவாழந்தணர் வினவ, தில்லையம்பதியில் திருநடம் புரியும் கூத்தப்பிரான்தான் இதன் பொருள் என்று மணிவாசகர் கூறியதைச் சைவ உலகம் அறியும். ஆகவே இறைவன் வேதப் பொருள் என்பதில் யாதொரு மறுப்புமில்லை. பசு என்று ஒரு சொல் இருக்கின்றது. அதற்கு நான்கு கால்களும் வாலும் மடியும் அலைதாடியும் பொருந்திக் கிராமத்தில் வாழும் சாந்தமான ஒரு பிராணி என்பதே பொருளாகும். இப் பொருளுக்கு ஏற்ற சொல் பசு. இச் சொல்லுக்கு ஏற்ற பொருள் இதுவே என்பதை உணர்த்துவது ஞானம். சொல் தெரிந்து பொருள் தெரியாவிட்டாலும், பொருள் தெரிந்து சொல் தெரியாவிட்டாலும் பயனில்லை. சொல்லையும் பொருளையும் இணைப்பது ஞானம். அந்தஞானப்பழமே முருகன். வேதப் பொருளில் மறைந்து நின்ற ஞானம் திருவுருவம் தாங்கி ஆறு முகத்துடன் விளங்குகின்றது. ஆகவே முருகனை வழிபடுபவர் சிவஞானத்தைப் பெறுவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இக்கருத்தை சுப்பிரமணியன்

என்ற சொல் தெளிவாக விளக்குகின்றது. பிரஹ்மன் என்ற சொல்லுக்கு வேதம் என்று கருத்து. வேதத்தின் பொருளாய் விளங்குபவர் பிரஹ்மண்யர் ஆவார். பிரஹ்மண்யாய நம: என்று சிவனுக்கு ஓர் அர்ச்சனை வழங்கப்படுகின்றது. இறைவன் வேதப் பொருளாவான். ஸு — அழகாக, பிரஹ்மண்யன் — வேதப் பொருளை உணர்த்துபவன் என்று முருகனுக்கு ஸுப்ரஹ்மண்யன் (சுப்பிரமணியன்) என்று சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஸ்காந்தபுராணம் சம்பவகாண்டம் 35-ம் அத்தியாயத்தில் பின்வரும் பாட்டுக் காணப்படுகின்றது.

பிராஹ்மணாநாம் அஹம் தேவ:
சுதராம் மத்ஸுத: ப்ரியே
ஸுப்ரம்ஹண்ய: ஸமாக்யாத:
ஸுராஸுர நமஸ்க்ருத: !!

இதன் கருத்து ''அன்புக்குரியவளே, வேதம் கூறி வழிபடும் அந்தணர்க்கு யான் தலைவன். (ஆகவே யான் பிரம்மண்யன் ஆவேன்) என் மைந்தன் (என்னை அறிந்துகொள்ள ஞானத்தை அளிப்பவனாதலால்) ஸுப்ரஹ்மண்யன் என்று சிறப்புப் பெயர் பெற்றுள்ளான். தேவராலும், அசுரராலும் வணங்கப்படுபவன்'' என்று உமையம்மையாருக்கு இறைவன் கூறியருளுகின்றான். மைந்தனின் சிறப்பைக் கண்டு தந்தை அகமகிழ்வதுபோல முருகனுடைய சிறப்புப் பெயரைக் கண்டு அகமகிழ்ந்து இறைவிக்குக் கூறுவதாக இது அமைந்துள்ளது. ஞானப் பழமாகிய முருகனை வழிபட்டு சிவஞானம் பெற்று சிவசாயுஜ்யத்தை அடைவோமாக.

ஓம் தத் சத்

# இந்துகலாசாரம்

## 1. வழிபாட்டு அறை

இந்து சமயத்தவர் ஒவ்வொருவர் வீடும் ஆலயமாக விளங்கவேண்டும். வழிபாட்டிற்குத் தனியாக ஒரு அறையை நியமித்துக்கொள்ள வேண்டும். இடவசதிக் குறைவுள்ளவர்கள் நகரங்களில் வசிப்பவர்கள் மூன்று தட்டுக்களுள்ள சிறிய அலமாரி ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். அந்த அலமாரியை வீட்டின் தென்பாகத்தை நீக்கி வடபாகத்தில் கிழக்கு முகமாக வைத்து வடக்கு முகமாக இருந்து வழிபாடு செய்ய வேண்டும். வசதிக்குத்தக்கபடி அமைத்துக்கொள்ளவேண்டும. அக்கினியும் யமனும் நிருதி என்றஅசுரனும் வசிக்கும் இடமாதலால் தென்பாகம் நீக்கப்பட வேண்டும்.

## 2. திருவுருவம்

நடுத்தட்டில் அவரவர் வழிபட விரும்பும இறைவனின் சித்திரப் படத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். மனம் ஒருமைப்படுவதற்காக உருவத் திருமேனியை வைத்தல் அவசியமானது. புகைப் படம், இடுப்புவரை உள்ள அரைப் படம் இவைகளை விலக்க வேண்டும். கண்ணுடியில் எழுதிய படம் மத்திமமாகும். இவை மூவர்ணப் படங்களாக இருக்க வேண்டும். ஸ்வரூபநிலைவிட்டுத் தடஸ்த நிலையில் நின்று ஐந்தொழில் புரியும்பொழுது பிரம்ம விஷ்ணு உருத்திர பாகமாக நின்று அருளுகின்ருர் இறைவன். அம்மூவரின் வர்ணமாக அமைந்திருக்க வேண்டும் என்பதே அதன் கருத்தாகும்.

இறைவன் இறைவியின் திருவடியை நாம் வணங்குவதுதான் நம் குறிக்கோள். அதனுல், திருவடிஇல்லாத அரைப்படம் விலக்கப்பட வேண்டும். கண்ணுடியில் எழுதிய படம் தற்செயலாக உடைந்தால் மனத்திற்குக் கஷ்டமாக இருக்கும். படம் வைத்துக் கண்ணுடி போட்டிருந்தால் கண்ணுடி உடைந்தாலும் மீண்டும் கண்ணுடி போட்டுக் கொள்ளலாம். தோஷமில்லை. கண்ணுடியின் ஊடாக உருவத் திருமேனியைத் தரிசித்து வழிபடுவது முறையாகும். ஆலயங்களில் கருவறையில் இறைவனின் உருவத் திருமேனியும், மகாமண்டபத்தில் தர்ப்பணம் (கண்ணுடி) என்ற பொருளும் வைக்கப் பட்டிருப்பதைக் காணலாம். நல்லூர், வண்ணுர்பண்ணைச் சிவன் கோவில் முதலியவற்றில் இவ்வாறு வைத்திருப்பதைக் காணலாம். அடியார்கள் வெளியில் நின்று தரிசிக்கும் பொழுது கண்ணுடியின் ஊடாகத் தரிசிப்பார்கள். அதன் கருத்து : மூக்குணங்கள் பொருந்திய தர்சனம், கண்ணுடியில் பட்டு ரஜோ குணம், தமோகுணம் சிதறுண்டு

சத்துவகுணம் மட்டும் சத்துவகுண மூர்த்தியான இறைவனின் திருவடிகளில் பதியும். பிம்பத்திற்குத் தோஷமில்லை. அடியாரின் ரஜோ குணம், தமோகுணம் நீங்கி சத்துவ குணம் சேரவேண்டிய இடத்தில் சேர்ந்ததாக அமையும். ஆகவே தான் கண்ணாடி போடப்பட்ட சித்திரப் படம் வேண்டுமென்று கூறப்பட்டது. தர்ப்பணம் என்பதற்குக் கண்ணாடி என்று கருத்து. இது செம்பினால் செய்து வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

## 3. திருவிளக்கு

இறைவனை வழிபடும்போது விளக்கேற்றி வைத்து வழிபடுதல் அவசியமானது. பொதுவாக மாலை நேரம் விளக்கேற்றி ஒரு மணி நேரமாவது எரிந்து கொண்டிருக்க வேண்டும். முடிவில் ஒரு அரிசியைத் தீபத்தின் மேல் தட்டில் வைத்துத் திரியை உள்ளே இழுத்து ஒளியை எண்ணெயில் மறையச்செய்ய வேண்டும். கையால் வீசியும், வாயால் ஊதியும் அணைக்கக்கூடாது. விளக்கிற்கு உத்தமம் நெய்; மத்திமம் நல்லெண்ணெய்; அதமம் தேங்காய் எண்ணெய். வசதி போல் உபயோகிக்கலாம். தீபச் சுடரின் ஊடாகப் பரஞ்சுடராகிய இறைவனை வழிபாடு செய்வதே தீப வழிபாட்டின் தத்துவமாகும். ஆலயங்களில் சாதாரண நேரத்தில் இறைவனைத் தரிசிக்கும் பொழுது எமக்கு ஏற்படுகின்ற உள்ள உணர்ச்சியை விடத் தீபாராதனை நடக்கும் போது உள்ளத்தில் வரும் உணர்வு எத்தகையது என்பதை நமது அநுபவத்தில் காணலாம். ஆகவே வழிபாடு செய்யும்போது தீபம் ஏற்றி இருக்க வேண்டும். எண்ணெயை ஸ்நேஹம் என்றும், திரியை தசை என்றும் வடமொழியாளர் கூறுவர். தசை என்ற சொல்லுக்கு உடல் என்றும், ஸ்நேஹம் என்ற சொல்லுக்கு பக்தி என்றும் மற்றொரு பொருள் உண்டு. பக்தி எவ்வளவு இறைவனிடம் பதிகிறதோ அவ்வளவு ஆத்ம ஜோதி பிரகாசிக்கின்றது. பரஞ்சோதியிடமிருந்து ஒளியைப் பெறுகின்றது. ஒளியின் பிரகாசம் கூடக்கூடச்செயற்கரியசாதனைகளைப் பெரியோர் செய்து முடிப்பர். ஆகவே அந்த ஜோதி பக்தியாகிய எண்ணெயில் மறைந்து பின் தோழிற்படும்பொழுது வெளிவந்து பிரகாசமடைகின்றது என்ற உட்கருத்தைக் கொண்டுதான் திரியை உள்ளே இழுத்து சோதியை எண்ணெயில் மறைக்க வேண்டும் என்று சான்றோர் கூறியுள்ளனர். அன்புக் காணிக்கையாக ஒரு அரிசியை வைத்து எப்பொழுதும் என் உள்ளொளி பெருக்க வேண்டுமென்று பிரார்த்தனைசெய்து முடிப்பதே அதன் கருத்தாகும். அருளொளி பெண்மையைக் குறிப்பதால் பெண்கள் விளக்கு ஏற்ற வேண்டுமென்றும் அவர்களே முடிவில் மறைக்கவேண்டுமென்றும் சான்றோர் வகுத்துள்ளனர். தீபஜோதி கிழக்கு முகமாக விளங்க வேண்டும். தெற்குமுகமாக எரிய விடக்கூடாது.

பிதிருலோகம் தென்திசையில் உள்ளது. எப்பொழுதும் இருளாக இருக்கும். அத்திசையை நோக்கி உயிர் பிரயாணம் செய்யும்பொழுது மாத்திரம் அதற்கு உதவியாகத் தீப ஜோதியைத் தெற்குநோக்கி வைத்து வழிபட வேண்டும் என்று விதி அமைந்துள்ளது.

ஐந்து முகத்திலும் ஜோதி விளங்குமாயின் தென்திசைக் குற்றம் இல்லையாகும். இரு விளக்குகள் வைத்துத் தெற்கு வடக்குத் திசை நோக்கி அமையுமாயின் குற்றமில்லை. இடக் கையால் எக்காரியமும் செய்தால் குற்றமாயும், வலக்கையுடன் சேர்ந்து செய்தால் அக்காரியம் தூய்மையாகவும் கௌரவமாகவும் கருதப்படுவது போல, ஏனைய திசைகளிலும் சுடர் சுவாலிக்கும்பொழுது தென்திசைக் குற்றம் உண்டாகாது. வழிபாட்டிற்காக வைக்கப்படும் தீபத்தை வெள்ளிக்கிழமை தோறும் தேய்த்துச் சுத்தமாக்கிக் குங்குமப் பொட்டிட்டு பின் எண்ணெய்விட்டு ஏற்ற வேண்டும். மலர்கிடைத்தால் அம்மலரை விளக்கின் பாதத்தில் வைத்தல் வேண்டும். சரமாகத் தொடுத்தால் விளக்கின் மேற் பாகத்தில் அதனை அணியவேண்டும். விளக்கின் முடியில் மலர்வைத்தல் கூடாது.

## 4. தானியபீடம்

ஒரு பீடத்தில் விளக்கை வைத்தல் வேண்டும். அந்தப் பீடம் சற்சதுரமாக இருக்க வேண்டும். அதில் ஒன்பது அறைகள் அமைக்க வேண்டும். நடுவில் கோதுமை, கிழக்கில் நெல், தென்கிழக்கில் நெல், தெற்கில் துவரை, தென்மேற்கில்உழுந்து, மேற்கில் எள்ளு, வடமேற்கில் கொள்ளு, வடக்கில் கடலை, வடகிழக்கில் பயறு. இவைகளால் நிரப்பி அதனைப் பலகையால் மூடி அதன் மேல் தீபத்தை வைத்து வழிபட்டு வரவேண்டும். இதனால் வரும் பயன் தான்ய லட்சுமியின் அருளால் என்றும் குறையாத உணவு கிடைக்கும். நாட்டில் தானியங்கள் செழிப்பாக வளரும். பசிக்கொடுமை நீங்கும். உடல் புஷ்டியாக வளரும். நோய் பிணிகள் அணுகமாட்டா. அந்தத் தானியங்களை வருஷத்திற்கொருமுறை மாற்ற வேண்டும். பழைய தானியங்களை நீரில் போட்டுவிடவேண்டும்.

## 5. சமய நூல்கள்

சமய நூல்களைப் பூசையில் வைக்க நீள்சதுரமான பெட்டி ஒன்று அமைக்க வேண்டும். அதில் இறைவனின் பெருமையை விளக்கும் திருமுறைகளை ஒழுங்கு முறையாக அடுக்கி வைக்க வேண்டும். இதனால் வீட்டில் வசிக்கும் யாவருக்கும் பக்தியும் ஞானமும் வளரும். கந்தபுராணம், பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் ஆகிய மூன்று புராணங்களும் இருக்க வேண்டும். கந்தபுராணம் கலக்கத்தை நீக்கி மனச் சாந்தியை அளிக்கும். அடியார் பெருமையையும், இறைவன் அருட் செயலையும் விளக்கும் மற்றைய இரு புராணங்களும் மனிதனிடம் தெய்வப்பண்பை வளர்த்து சாரூப்பிய நிலையைச்

கொடுக்கும். திருக்குறள் முதலிய நீதி நூல்களும் இருக்க வேண்டும். இவை நேர்மையான வழியில் மனிதனை வாழ வைக்கும். தீயவழிகளை விலக்கிவிடும். மனிதனுடைய மனம் எப்பொழுதும் தூய்மையாக விளங்கும். இவற்ரோடு நாவலர்பெருமான் எழுதிய வழிநூல்களை வைக்கவேண்டும். இதனுல் சமய அடிப்படைக் கருத்துக்களுக்கு மாருன கருத்துக்கள் நம்மிடம் புகுந்து நம்மைக் கலக்கமாட்டாது. சமய வாழ்வில் உறுதியான நம்பிக்கை உண்டாகும். இவ்வாறு பக்தி, தெய்வீக வாழ்வு, நேர்மை, சமயத்தில் உறுதியான நம்பிக்கை இவைகளை வளர்க்கும் நான்கு வகையான நூல்களை அப்பெட்டியில் வைத்து அலமாரியில் கீழ்த்தட்டில் அப்பெட்டியை வைக்கவேண்டும். அப்பெட்டியின்மேல் சமயப்பெரியார் நால்வர் படமும், சேக்கிழார் வள்ளுவர் நாவலர் படமும் வைக்கலாம். இவை கீழ்த்தட்டில் அமையவேண்டும்.

தாய் நாட்டில் அந்தணர் ஒவ்வொருவர் இல்லத்திலும் பூசை அறையில் வால்மீகி ராமாயண ஏடு வைத்து சந்தனப் பொட்டிட்டுப் பூ வைத்து வழிபட்டு வந்ததை நேரில் கண்டு அனுபவித்ததோடு நானும் அவ்வாறு செய்தும் வந்திருக்கின்றேன். அக்நிவழிபாடு முடிந்தபின் பின்வரும் பிரார்த்தனையை வேத மந்திரம் கூறி நடத்தியதையும் கண்டிருக்கிறேன். அதுபோலவே அமைய வேண்டுமென்பதைக் கருதி இந்த விளக்கம் தருகிறேன்:

''ஓ அக்நிபகவானே, நேர்மைவழியில் என்னைச் செலுத்துவாயாக. நேர்மை வழியில் பொருளீட்டி வாழ வழி வகுப்பாயாக. எது நேர்மை வழி, எது தப்புவழி என்பதை நீ அறிவாய். தப்பு வழியை விலக்கி நேர்மை வழிக்கு கொண்டு செல்வாயாக. பாபம் என்னைத் தப்பு வழிக்கு இட்டுச் செல்லாது தடுத்தாட்கொள்வாயாக. அதற்காக உனக்குப் பலமுறை வணக்கத்தைச் செலுத்துகின்றேன்''

என்று பிரார்த்தனையாக அமைந்தது. இந்த முறையில் நூல் வழிபாடும் அமையவேண்டும் என்று கருதுகிறேன். மேலும் ஆலயங்களில் இறைவன் ஆறு இடங்களில் நின்று அருள் புரிகின்ருன் என்று சாத்திரம் விதித்துள்ளது. அவைகளுள் ஒன்று: ஆகம நூல்களில் இறைவன் அதிஷ்டித்து நின்று அருளுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே முற்காலத்தில் ஆலயத்தில் ஒரு இடத்தில் ஆகம நூல்களை வைத்துத் தூண்டாவிளக்கு ஏற்றி ஒருநேரம் கற்பூர ஹாரத்தியும் செய்து வந்தனர். ஐயம் வரும் நேரத்தில் ஸ்நானம் செய்து பரிசுத்தனுக இருந்து நூல்களை எடுத்துப்பார்த்து ஐயந்தீர்ந்து தோஷப்பிராயச் சித்தங்களையும் செய்து வந்திருக்கின்றனர். இப்பொழுது இம்முறை மறைந்துவிட்டது.

முன் கூறியபடி வீட்டில் இம்முறையைப் பின் பற்றி வழிபட்டால் வழிபடுகின்றவரும் அவரது சந்ததிகளும் வாழையடி வாழையாய் சம

யப்பற்றுடையவர்களாய் நம்பிக்கை யுடையவர்களாய் தெய்வப்பண்பு நிறைந்தவர்களாய் விளங்குவார்கள்.

## 6. சிவசின்னம்

விபூதியைச் சீலையால் வடிகட்டி அதனை ஒரு மட் பாண்டத்தில் வைத்து அதனுள் வெட்டிவேர் இலாமிச்சம்வேர், சண்பகப்பூ, தாழம் பூ இவைகளைச் சிறு துண்டுகளாக வெட்டி விபூதியில் சேர்த்து மேலே மண் சட்டியால் மூடி அலமாரியின் மேல்தட்டில் வைத்து உருத்திராக்க மாலையைச் சாத்தி வைக்க வேண்டியது. வழிபடும் நேரம் அம்மாலையை அணிந்து வழிபாடு முடிந்த பின் அந்த விபூதியைச் சிறிதளவு எடுத்து அணிந்துகொண்டு திரும்பவும் அம்மாலையை அப்பாத்திரத்தில் சாத்திவிடுவது நல்லது. இது சிவசின்ன வழிபாடாகும். விபூதியைச் சிவமாகவும், மட்பாத்திரம் சக்தியாகவும் பாவித்து வணங்கும்படி ஆகமம் கூறி உள்ளது. இதன்பயன் கொடிய நோய்கள் அணுகமாட்டா. தீயவர்களால் துன்பம் உண்டாகாது. துர்தேவதைகளின் தாக்குதல் உண்டாகாது. இதுவே ரட்சையாகும்.

## 7. சுகந்த தூபம்

குங்குலியமும் சாம்பிராணியும் சமமாக எடுத்துப் பொடித்துத் தூபமிட்டு வணங்குதல் வேண்டும். தணல் வசதி இல்லாதபோது ஊதுவத்தி ஏற்றி வைக்கலாம்.

## 8. மாக்கோலம்

அரிசிமாவினால் தினமும் பூசை அலமாரிக்கு முன் ஒரு சிறு கோலமிடவேண்டும். கற்பொடியால் கோலமிடல் கூடாது. கோலமிடுதல் பெண்கள் செய்ய வேண்டியது. பழக்கமில்லாவிட்டாலும் நாலைந்து முறை செய்தால் பழக்கமாகிவிடும். வெள்ளி செவ்வாயில் பின்வரும் முறையாகச் செய்தல் நல்லது. நான்கு பக்கத்திலும் ஐந்து வரிகள் நடுவில் இரு கோடுகள் குறுக்காக அமைத்தல். மற்றத் தினங்களில் தாமரை வடிவம். எட்டுக் கோடுகள் வரைந்து இதழ்களை வரைதல். கோலமிட்ட இடத்தில், இல்லத்தில் தெய்வ சாந்நித்தியமுண்டாகும். வெண்மை நிறமுடைய அரிசி மா ரஜோகுண தமோகுணங்களை நீக்கி இல்லத்தில் வாழ்பவர்களுக்கு சத்துவ குணத்தை வளரச் செய்யும். ஆகவேதான் சுவாமி விவேகானந்தர் மேல்நாட்டில் சென்று இந்துக்களின் பண்பை விளக்கும்பொழுது கோலமிடுவதை எடுத்து விளக்கி உள்ளார். மாரி காலத்தில் கோலமிட்டால் எறும்புகள் அதை உணவாக உட்கொள்ளுகின்றன. இரக்கம், மனத்தூய்மை உண்டாகும். இலக்குமி அங்கே வசிப்பாள் என்று முன்னோர் கூறி உள்ளார்கள்.

## 9. துளசி வணக்கம்

துளசிச்செடியின் சிறப்புப் பற்றி விஞ்ஞானிகள் வெகுவிரிவாக எடுத்து விளக்கி உள்ளனர். வசதி உள்ளவர் துளசிக்கு ஒரு மாடம் அமைத்துக்

கொள்ளுவார்கள். வசதி இல்லாதவர்கள் ஒரு வாளியில் அல்லது ஒரு பூந்தொட்டியில் வைத்துக் கொள்வார்கள். காலையில் குளித்தஉடன் துளசியை மும்முறை வணங்கியும் மாலையில் சிறுவிளக்கேற்றி வைத்து மும்முறை வணங்கியும் ''தாயே, என்றும் குறையாத செளபாக்கியவாழ்வை அளிப்பாய்'' என்று பிரார்த்தனை செய்ய வேண்டும். இதனால் செளபாக்கிய வாழ்வு, மனச்சந்தோஷம், மன நிறைவு, நோயற்ற வாழ்வு, இவைகளைப் பெறலாம். துஷ்ட ஜந்துக்கள் அணுகா. துளசிபல நன்மைகளைத் தரும். இல்லத்தில் அடிக்கடி மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரிந்தவர் கூடுவர். இன்னும் பல நன்மைகள் உண்டாகும்.

10 அதிதி பூசை பிதிர் பூசை:-

இது வேதத்தில் வெகு சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு இன்றி அமையாத சிறந்த ஒரு தருமமாகக் கருதப்பட்டுள்ளது. அந்தத் தர்மம் கால வெள்ளத்தில் மறைந்துவிட்டது. சூழ் நிலையும் மாறி விட்டது. விருந்தோம்புதல் என்ற தர்மத்தைச் சிறப்பாகக் கருதிவந்த காலம் ஒன்று இருந்தது. இப்பொழுது அதனைச் செய்தல் எவ்வகையாலும் முடியாது. ஆகவே முன்னோர்கள் அதற்குச் சமமாக ஒருவழி வகுத்துள்ளனர். சோறு சமைத்தவுடன் தினமும் காகத்திற்கும் வைக்கவேண்டும் என்ற நியதியை வகுத்துள்ளனர். இதுவே அதிதி பூசையாகும்; பிதிர் பூசையுமாகும். திவசத்தன்று காகத்திற்குச் சோறு வைத்தலை இன்றும் காணலாம். மேலும் சனிப் பிரீதியை முன்னிட்டு சனிக்கிழமையில் சோறு போடும் வழக்கமுண்டு. தினமும் அவ்வாறு செய்து வந்தால் அதிதி பூசை, பிதிர் பூசை, சனிப் பிரீதி யாவும் அடங்கி விடும். இதனை வாயஸ பலி என்று கூறுவார்கள். ஒருவர் இருவருக்கு தினம் உணவு கொடுக்க எல்லாருக்கும் சக்தி இராது. ஆகவே இந்த தர்மம் செய்வது சிறிய அளவு. அதனால் வரும் பயன் பெரிய அளவு. இதனை வைசுவ தேவம் என்று கூறுவார்கள். எல்லாத் தேவர்களையும் குறித்துப் பலி இட்டு அந்தப் பலியுணவைக் காகத்திற்கு போடுதல் என்ற முறை நூறு வருடங்களுக்கு முன் பெரும்பான்மையாக நடந்து வந்துள்ளது. பஞ்சமும் பற்றுக்குறையும் ஏற்பட்டதும் அது குன்றியது. ஆகவே இந்தத் தர்மம் செய்ய வேண்டியது முக்கியமாகும். கிராமப் பகுதியில் இதனை அனுட்டிக்க ஒருவாறு முடியலாம். நகரங்களில் வசிப்பவர்களுக்கு வசதிக் குறைவு ஏற்படக்கூடும். அவர்களும் சமைப்பதற்கு முன் ஒருபிடி அரிசியை ஒரு பாத்திரத்தில் எடுத்துப்போட்டு மாத முடிவில் அண்மையில் உள்ள ஆலயத்தில் கொடுத்துப் பகவானுக்கு நிவேதிக்க ஏற்பாடு செய்துவந்தால் அதிதி பூசைப் பலன், பிதிர் பூசைப் பலன் கிடைக்கும். முன்காட்டியவழிதான் செய்ய வேண்டும். காகங்கூட

இல்லாத இடமாக இருந்தால் அவர்களுக்கும் இந்தத் தர்மபலன் கிடைப்பதற்குப் பிந்திய முறை சொல்லப்பட்டது.

இவ்வாறு பத்து வகையான வழிபாட்டு முறைகள் விளக்கப்பட்டுள்ளன. இப்பத்தும் ஒவ்வொரு இந்துவின் இல்லத்திலுல் அமையுமாஞல் அவனுக்குச் சகல சம்பத்தும் குறையாமல் இருக்கும்.

மேலும் தான்மட்டிலும் தெய்வப் பண்புடன் வாழ்தல் என்று இல்லாமல் யாவரையும் தெய்வப் பண்புடன் வாழவைத்தல் வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் ''ஸாமுதாயிக வழிபாடு'' என்ற ஒருமுறையைக் கொள்ளுதல் அவசியமாகும். இது வாரம் ஒரு முறையாகவோ மாதம் ஒரு முறையாகவோ அமையலாம். வசதி உள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்துச் சேர்ந்து ஒரே மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கூறி வழிபடுதல். இவ்வழிபாட்டு முறை முற்காலத்தில் நடந்து வந்தது. மழைஇல்லாத காலத்தில் ஒன்று சேர்ந்து ஒரே சூக்தத்தைக் கூறி வழிபட்டுப் பயனை அடைந்திருக்கின்றனர். காலரா, பிளேக் முதலிய தொத்து நோய்கள் பரவிய நேரத்தில் ஒன்று சேர்ந்து விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சிவகவசம் என்பவற்றைக்குறிப்பிட்ட நாட்களில் பாராயணம் செய்து நோய்களைப் பரவ விடாமல் தடுத்துள்ளனர். இதுபோல யுத்தத்திஞல் பயம் அடைந்த நேரம் சமுதாய வழிபாடு செய்து பயம் நீங்கி நல் வாழ்வு பெற்றுள்ளனர்: அதுபோல யாவரும் நல்ல சுகம்பெற, அமைதி நிலவ, சமய அடிப்படையில் வாழ்க்கையை நடாத்த சமுதாய வழிபாடு அவசியமாகும். ஒரே மந்திரமாக அமைய வேண்டும். எல்லோரும் ஒன்றுசேர்ந்து குறிப்பிட்ட நேரத்தில் 108 முறை கூறி வழிபடுதல் வேண்டும். விரும்பிய ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதுவே எப்பொழுதும் கூறப்படவேண்டும். இடையில் மாற்றுவது உசிதமல்ல. எல்லோரும் ஒருமித்த மனத்துடன் ஒரு பெரியார் கூறுவதைக் கேட்டு அவ் வழியைப் பின் பற்றலாம். ஒரு கோடி நாமம் என்று சங்கற்பித்துக் கொள்ளவேண்டும். அன்பர்கள் எண்ணையும் பெருக்கிக் குறித்து வைத்து கொண்டு கோடி நாமம் உச்சரிக்கும்வரை செய்து முடிவில் அவ்வழிபாட்டைச் சிறப்பாக நடத்தி முடிக்கலாம். குறிக்கோளும் ஒன்ருக இருக்கவேண்டும். இதஞல் யாவரும் நன்மை அடைவர்.

இந்துக்கள் இவற்றை இயன்ற வரை அநுட்டித்து நல்வாழ்வு வாழ்ந்து நாட்டிற்கும் நலம் செய்வார்களாக.

சுபம்.

ஸ்ரீ காந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 256